# இன்றும் கேட்கும் குரல்:
# விபுலானந்தர்



செ. யோகநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றும் கேட்கும் குரல் : விபுலானந்தர்

செ. யோகநாதன்

காந்தளகம்

834 அண்ணாசாலை
சென்னை 600 002.

மறவன்புலவு
சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவியல் தமிழ் உருவாக
உழைத்துவரும்
தமிழபிமானிகளுக்கு
இந்நூல் அன்புடன்.

□

விபுலானந்த அடிகளார் நூற்றாண்டு
நினைவு வெளியீடு.

□

விலை : ரூபா 36-00.

□

உரிமை : செல்வி. ஜெயபாரதி யோகநாதன்
நூல் : இன்றும் கேட்கும் குரல் : விபுலானந்தர்
ஆக்கியோன் : செ. யோகநாதன்
முதற்பதிப்பு : 1992 பங்குனி

---

அச்சுப் பதிவு : இராசகிளி பிரிண்டர்ஸ்
சென்னை-600 020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

மட்டக்களப்பில் அரசபணியாற்றிக் கொண்டிருந்த வேளையிலே சிவானந்த வித்தியாலயப் பக்கமாகச் செல்வேன். விபுலானந்த அடிகளாரை கல்லூரி நாட்களில் முத்தமிழ் வித்தகராக அறிந்திருந்த நான் அந்த அறிவுடனும், மரியாதையுடனும் அவர் சமாதியிருந்த சிவானந்த தபோவனத்துக்குச் சென்றிருக்கிறேன். அப்போது அடிகளாரை சமயபோதகராகவும் கல்வியாளராகவும் முத்தமிழறிஞராகவும் என்னால் அறிய முடிந்தது!.

பின்னர் எத்தனையோ ஆண்டுகள் சென்றன. தமிழ்நாட்டிற்கு 1984இல் வந்து ஏழாண்டுகள் மாயமாய் நழுவிப்போயிற்று. 1991இல் எதேச்சையாக அடிகளாரைப்பற்றி இரு தகவல்களை அறிய நேர்ந்தது.

ஒன்று: பன்னீராயிரம் தமிழ்க்கலைச் சொற்களை ஆக்கும் முயற்சிக்கான மகாநாடொன்றுக்கு அடிகளார் தலைமை தாங்கியதும், அவர் முயற்சியால் 'கலைச் சொற்கள்' என்ற தொகுதி 1936 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டதும்,

மற்றது: 1933ஆம் ஆண்டிலே அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பட்டமளிப்பு விழா நடைபெற்றது. அவ்வேளை பேராசிரியர்கள் தமது வீடுகளில் 'யூனியன் ஜாக்' கொடிகளைப் பறக்க விட்டிருந்தனர், ஆனால் அடிகளாரது வீட்டிலோ இந்திய தேசிய காங்கிரஸ்கொடி பட்டொளி வீசிப்பறந்து கொண்டிருந்தது. ஆங்கில ஆட்சியின் கவர்னர் பட்டமளிப்பு விழாவுக்கு வர இருந்ததால் காவல் துறையினர் அடிகளாரை அச்சுறுத்தினர். வீட்டைச் சோதனையிட்டனர். அடிகள் அஞ்சவில்லை. கொடியைஇறக்கவுமில்லை. புன்னகையோடு நின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இரு செய்திகளும் என்னைச் சிலிர்க்க வைத்தன; சிந்திக்கச் செய்தன; விபுலானந்த இலக்கியத்தைத் தேடி அலையவைத்தன.

அடிகளாரின் 'யாழ் நூல்' மட்டுமே எனக்கு சிரமம் இன்றிக்கிடைத்தது. 1956, 1963ஆம் ஆண்டுகளில் விபுலானந்த இலக்கியம் என்ற தலைப்பில் திரு அருள் செல்வநாயகமும், விபுலானந்த ஆராய்வு என்ற தலைப்பில் திரு. ச. அம்பிகைபாகனும் தொகுத்த விபுலானந்தர் எழுத்துக்களும், பிரபுத்தபாரதா, வேதாந்த கேசரி, ஸ்ரீ இராமகிருஷ்ண விஜயம். ஈழமணி, கலை மகள், பஞ்சாமிர்தம் இதழ்களின் கட்டுரைகளும் மதுரைத் தமிழ்ச்சங்கம் வெளியிட்ட 'மதங்கசூளாமணி' யும் எனக்கு அடிகளாரை என்முன்னே அளக்கமுடியாத அற்புதமாக அடையாளங்காட்டின.

தேடத்தேட அவரின் ஆளுமையும், ஆழ்ந்தகன்ற அறிவும் கையுள் அடங்காததாய் நீள்கின்றது.

அவர் ஒரு தத்துவஞானி, விவேகானந்தத்தின் விழுமிய தோற்றம்,

அவர் ஒரு இசையறிஞன், நவீனத்துவமுணர்ந்த இசைநூல் வல்லவன்.

அவர் ஒரு கல்வியறிவாளன், தமிழை அறிவியல் மொழியாக்க முயன்று முனைந்து முன்னுதாரணமாய் நின்ற சான்றோன்.

அவர் ஒரு தமிழியலாளன். தமிழைச்சகல தரத்திலும் மேலோங்க வைப்பதை வாழ்வெனக் கொண்ட பேரறிஞன்.

அவர் ஒரு மாமனிதன். இரக்கமும் எளிமையும் மானுட நேயமும் கொண்ட — ஆனால் சுயகௌரவத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தால் மனிதன் உயர்வடைவான் என்று வாழ்ந்த உன்னதம்.

தமிழன் எதையும் எளிதில் மறப்பவனாதலால் அடிகளையும் நாம் மறந்தோம்.

ஆனால், அடிகளை மீண்டும் நாம் நினைக்கவும் மதிக்கவும் பயிலவும் இப்போது நேரம் வந்திருக்கிறது. அதுவும் அவரது நூற்றாண்டான இப்போது. நமது வாழ்வுக்காக மேன்மையுறுவதற்காக அடிகளின் வாழ்வை நாம் கற்றறியலாம்.

○

சென்னைப் பல்கலைக்கழக நூலகம், மறைமலை யடிகள் நூலகம், உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், கன்னிமாரா நூலகம் ஆகியவற்றின் நூலகர்கள்— அடிகளார் எழுதிய நூல்கள், கட்டுரைகள் வந்த இதழ் களை எனக்குக் கொடுத்து உதவினார்கள்.

அடிகளார் பற்றிய சரியான நூல் இன்னும் வெளி வரவில்லை என்றே எனக்குத் தோன்றுகிறது.

அடிகளார் பலதுறைகளிலும் எழுதியிருக்கிறார். ஆங்கிலத்திலும், தமிழிலும் அவர் எழுதிய அருஞ் செல்வங்கள் முறைப்படி இன்னும் தொகுக்கப்பட வில்லை.

அடிகளார்-சென்னைப் பல்கலைக்கழகம், அண்ணா மலைப்பல்கலைக்கழகம், இலங்கைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் பணியாற்றியவர். ஸ்ரீ இராமகிருஷ்ண மடத்திற்காகக் கதிர்காமம் முதல் கயிலாயம் வரை சென்று எழுத்தாலும், பேச்சாலும் சமரச சன்மார்க்கம் பரப்பியவர். மதுரைத்தமிழ்ச் சங்கமும், கரந்தைத் தமிழ்ச்சங்கமும், கொழும்பு விவேகானந்தசபையும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச்சங்கமும் அவரது சோர்வறியா உழைப்பால் பெருமையும் தகைமையும் பெற்றவை. அவரின் கனவுகளாயிருந்து உயிர் பெற்றவை அவரமைத்த கல்விக்கூடங்கள். தமிழக அரசும், இலங்கை அரசும் தமது கல்வித்துறைக்கு அவரைத் தேடியழைத்து இலாபம் பெற்றவை.— இவர்களில் யாராவது ஒருவர் மனம் வைத்தால் அடிகளாரின் எழுத்துக்கள் யாவற்றையும் செம்மையான பதிப்பாக வெளிக் கொணரமுடியும்.

இது அடிகளாரின் பிம்பத்தை ஓரளவே உணர்ந்த தமிழரின் பணிவான வேண்டுகோள்; என் வாயிலாக வெளியாகின்றது.

○

அடிகளாரின் ஆழ்ந்தகன்ற சிந்தனையை அறிந்து கொள்வதற்கு அவரது நூல்கள் இப்போது அச்சில் கிடைக்காமை தடையாயிருக்கிறது. அதைக் மனதிற் கொண்டே அடிகளாரின் கருத்துக்களை இந்நூலில் நீண்ட மேற்கோள்களாக எடுத்தாண்டிருக்கிறேன்.

இந்த நூலை எழுதும் இம்முயற்சி என்னுள் மெல்ல மெல்ல உருவாகி வளர உற்சாகமும் ஆர்வமும் காட்டியவர் காந்தளகம் திரு. சச்சிதானந்தன். அவரே இந்நூலின் பதிப்பாளர்; காரண கர்த்தா.

எழுத்தாளரும், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தனி அலுவலருமான முனைவர். ம ராஜேந்திரன், திரு. செ. கணேசலிங்கன் 'வாசுகி' ஆசிரியர் திரு. பாவைச் சந்திரன், திரு. பல்லடம் மாணிக்கம், கவிஞர் அக்னிபுத்திரன், திரு. வைகறைவாணன், என் முயற்சி யாவிலும் தோன்றாத் துணையாய் நிற்கிற சுந்தரலட்சுமி,

இவர்கள் யாவருக்கும் என் இதய பூர்வமான நன்றிகள் உரியன.

— செ. யோகநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிகளார் உள்ளம்

'கருதிய பொருளெல்லாவற்றையும் எதனாற் பெறலாம்? தவத்தினாற் பெறலாம். இடையறாத முயற்சியே தவமெனப்படுவது. வேண்டிய பொருள் அனைத்தையும் தருதலால் முயற்சியானது காமதேனு, கற்பகதரு, சிந்தாமணியென்னும் இந்திரச் செல்வங் களை நிகர்த்தது'.

□

'பிறமொழி மாந்தரிடமிருந்து ஒன்றும் பெறலாகா தென்று வாதிப்பாரொரு சாரார். மேலை நாட்டாரது 'ஸயன்ஸ்' எம்மிடமிருந்தது, அழிந்து போயிற்று என்பர். அங்ஙனமாயின் அதனைப் புதிதாக ஆக்கிக் கொள்வது அவசியந்தானே என்போம். தொல்காப்பிய னாரையும் அவரனைய பெரியோரையும் ஆசிரியராகக் கொண்ட நாம் ஹக்ஸ்லி, டார்வின், தொம்சன், கெல்வின் முதலியோரை ஆசிரியராகக் கொள்வோ மெனின் அறிவுடையோரைச் சாதி சமய பேதம் பாரா மல் ஏற்றுக் கொள்ளுதல் கடனென்போம்... ஐம்பூதத் தைப் பற்றிய அறிவு எம்மிடத்துள்ள அளவிற் போதாதோ விரித்துரைக்க வேண்டுமெனில், வேண்டும் என்போம். பஞ்பூத வியற்கையை நுணுகவாராய்ந்த வலிமையினாலன்றோ மேலை நாட்டார் நிலமிசை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரைந்து செல்லும் எந்திரவூர்திகளையும், நீர்மிசை மிதந்து செல்வனவும் திரையெறிகடலினுட் குளித்துச் செல்வனவுமாகிய பலவகை இருப்புக்கலங்களையும், தீயின் வேகத்தாலுந்தப்பட்டு வளிமேற் கிளந்து செல்லும் வானவூர்திகளையும், விசும்பு ஆறாக மின்னியக்கமே தூதுவனாகச் செய்தியனுப்பும் மார்க்கங்களையும் அறிந்திருக்கிறார்கள். நமக்கு இனியாரது உருவப்படத்தை நாம் பார்த்து இன்புறுதற்கும், இன்னிசையோடு பாடுவோரது கீதங்களை அவர் கழிந்த பிறகும் நாம் கேட்டின்புறுவதற்கும், தூரத்தில் நடந்த செய்திகளை நாம் நடந்தவாறே கண்டு இன்புறுதற்கும், பிறநாட்டுக்குச் சென்றிருக்கும் அன்புடையாரோடு வசனித்தின்புறுதற்கும், கருவியாகவமைந்த படிமக் கருவி, பாடற்கருவி, நடனவிளக்கு, வாய்த்தந்தி முதலியன ஐம்பெரும் பூதத்தியற்கையையுணர்ந்த அறிஞரால் ஆக்கப்பட்டனவாமன்றோ..'

□

'எல்லாத் தானத்திலும் ஞானதானஞ்சிறந்ததென்பர். அது இம்மை மறுமைப் பயன் இரண்டினையும் கொடுப்பதாகலின் வித்தியார்த்திகள் மனஞ்சோராது கல்விமுயற்சியிற் கருத்தாயிருக்கும் வண்ணம் அவருக்கு வேண்டிய அன்னவஸ்திரம், புத்தகம் என்பனவற்றைக் கொடுத்துதவுதல் பெரியதொரு புண்ணியமாகும்.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

□

'பள்ளியிற் பயிலும் தமிழ்ச்சிறார் முதற் பல்கலை கற்றுத்தேறிய முது தமிழ்ப்புலவர் ஈறாக அனைவரும் தமிழ்க்குலத்தாரின் உண்மை வரலாற்றினை உளங் கொண்டுணர்தற்கு வேண்டிய சிறியவும் பெரியவுமாகிய வரலாற்று நூல்கள் பல தமிழ் மொழியிலே எழுதப்படல் வேண்டும். இதுவே நாம் செய்ய வேண்டிய தமிழ்த் தொண்டுகளுள்ளே முதலில் வைத்து எண்ணுதற்குரிய தென்பது எனது உள்ளக்கிடக்கை'.

□

'எங்ஙனமாயினும் இடைக்கால இந்தியாவில் வாழ்ந்த பெரியோர் திரட்டி வைத்த ஆத்மீகச் செல்வத்தினை இந்நாட்டினர் இழந்து விடுதல் கூடாது. பழைமையும், புதுமையும் துவைதமும் அத்வைதமும் பௌதீக விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானக்காட்சியும் மேற்றிசையறிவும் கீழ்த்திசைச் சமயமும் மன மொடுங்கிய தியானநிலையும் மன்பதைக்கு தொண்டு செய்தலும் சமரசப்பட வேண்டிய காலம் இது.'

□

'காலநீரோட்டம் விரைந்து ஓடுகின்றது. தமிழர் பழங்காலத்துச் சிறப்பினை மாத்திரம் பறையறைந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருப்பாரெனின் நிகழ்காலத்தையும் எதிர் காலத்தையும் முழுதும் இழந்த நீர்மையராதலும் கூடும். சென்ற நூற்றாண்டிலே ஐரோப்பாவிலும் அமெரிக்கா விலும் விஞ்ஞான நூல் மிகவும் விருத்தியடைந்து விளங்குகின்றது. அறிவுச் செல்வத்தை தமிழ்மொழி பெறுவதற்காவன செய்தல் சிறந்த தமிழ்த் தொண் டாகும்.'

□

'அறிவுநூற் கலைகளை ஆராய்வோடு கற்றற்கு மொழிவளம் நிரம்பியிருக்க வேண்டுமாதலின், தாய் மொழியிலுள்ள இலக்கண இலக்கியங்களை ஐயந் திரிபற ஆராய்ந்து சிந்தனைத் தெளிவும் வாக்குத் தெளிவு முடையோராதல் வித்தியார்த்திகளது முதல் நோக்கமாக விருத்தல் வேண்டும். பலதிறப்பட்ட பாஷைகளைக் கற்பதனால் அறிவு விசாலிக்குமாதலி னாலே தாய்மொழியில் ஒருவாறு தேர்ச்சி யெய்திய மாணவனுக்குப் பிறமொழிகளையும், அவற்றிலுள்ள அறிவுநூல்களையும் கற்பித்து வைக்கலாம். கணிதம், தருக்கம் முதலியன நுண்ணறிவினை விருத்தி செய்வன வாகலின் அவற்றைப் பயில்வது இன்றியமையாதது, வைதீக சமயத்துக்குரிய ஆதாரநூல்களனைத்தும் வடமொழியிலிருத்தலினாலே வடமொழிப் பயிற்சி சைவமாணவருக்கு இன்றியமையாதது.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மயில்வாகனன் விபுலானந்த அடிகளாகி...

1892ஆம் ஆண்டானது இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ்த்திறனையும் தமிழறிஞர்கள் தெரிந்து வளர்த்தற்கு வழிசெய்த ஆண்டாகும். தமிழ் உலகிற்கு சங்கநூற்களை வழங்கிய மகோமகோ பாத்தியாய உ.வே. சாமிநாதையர் சிலப்பதிகாரத்தை முழு உருவத்துடன் இவ்வாண்டிலேதான் வெளியிட்டார்கள்.

சிலப்பதிகார உரையாசிரியராகிய அடியார்க்கு நல்லார் காலத்திலேயே இசை நாடகத் தமிழ்நூல்களாகிய தொன்னூல்கள் யாவும் வழக்கற்று மறைந்து போயின என்பது அவர்தம் உரைப்பாயிரத்தால் தெரிய வரும். சிலப்பதிகாரத்திற்கு உரையெழுதிய உரையாசிரியர்களின் காலத்தில் இருந்த இசை நுணுக்கம் முதலிய இசைநூல்களும் இக்காலத்தில் இல்லை. இந்நூல்களின் உதவி கொண்டு அடியார்க்கு நல்லார் எழுதிய உரைப்பகுதியில் கானல்வரி உரைமுதலிய சிறந்த பகுதிகளும் காணப்படவில்லை, இத்தகைய நிலையில் சிலப்பதிகாரம் அழகுறக் கூறும் இசை நுட்பத்தினை எவ்விதம் அறிவது என்ற கவலை தமிழறிஞர்கள் மத்தியில் உலவிற்று.

1892இல் இவ்விதம் சிலப்பதிகாரம் முழுமை பெற வெளியான வேளையிலேதான் — இதே ஆண்டில் தான்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்கே வங்காள விரிகுடாக்கடலும், தெற்கே பசுமை நிறைந்த வயற் பரப்பும், வடக்கே சாய்ந்த மருதூரும், மேற்கே புன்செய் நிலங்களும் கொண்ட காரைத்தீவில் சாமித்தம்பியருக்கும் கண்ணம்மைக்கும் மகனாக பின்னாளிலே விபுலானந்தர் என்ற துறவறப்பெயர் பெற்ற மயில்வாகனன் பிறந்தார். (27.3.1892)

மயில்வாகனன் தனது ஐந்தாவது வயதில் காரைத்தீவு நல்லரத்தின ஆசிரியரால் எழுத்தறிவிக்கப் பெற்றார். குஞ்சித்தம்பி ஆசிரியர், வசந்தராசப்பிள்ளை ஆசிரியரோடு இளம் பருவத்து மயில்வாகனனுக்கு அவரது தந்தையாரும் கல்விகற்பித்தார். நன்னூல், சூடாமணி, பாரதம், திருக்குறள் ஆகியவற்றைப் பன்னிரெண்டு வயதிற்குள்ளேயே கற்றுத் தேர்ந்தார். இவ்வயதிற்குள்ளேயே கற்றோர் வியந்து களிகொள்ளும் விதத்தில் செய்யுட்களை யாத்தார். தாமே அணி, யாப்பினைக்கற்று ஓய்வு நேரத்தில் செய்யுட்கள் எழுதுவதை பொழுதுபோக்காக்கிக் கொண்டார். மயில்வாகனின் தகப்பனார், மட்டக்களப்பிலிருந்து தமிழகம் வந்து திரும்பும் போதெல்லாம் ஆறுமுகநாவலரின் நூல்களை வாங்கிச் செல்வார். மயில்வாகனனுக்கு அந்த நூல்கள் அருவிருந்தாயும், சிந்தனைக்கு உகந்தனவாகவும் அமைந்தன.

மயில்வாகனன் பத்துவயதுவரையிலும் தமிழ்ப்பாடசாலையிலேயே கல்விகற்றார். இக்காலத்திலேயே வடமொழியையும், ஆங்கிலத்தையும் அவர் வீட்டிலே படித்துவந்தார்.

மொழியறிவோடு கணிதத்திலும் அவர் சிறந்து விளங்கினார். அவரது அறிவு நுட்பம் ஆசிரியர்களை திகைப்பிலும், மகிழ்விலும் ஆழ்த்திற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1903ஆம் ஆண்டில் கல்முனை மெதடிஸ்தமிஷன் பாடசாலையில் மயில்வாகனன் முறைப்படி ஆங்கிலம் கற்கத் தொடங்கினார். 1907ஆம் ஆண்டில் மட்டக் களப்பு அர்ச். மைக்கேல் கல்லூரியில் இவரது படிப்புத் தொடர்ந்தது.

மயில்வாகனனின் கல்வித்திறமையும், அடக்க குணமும், அறிவுத்தேடலும் ஆசிரியர்களை அவர்பால் அளவு மீறிய அன்பு கொள்ள வைத்தது. தமது ஓய்வு நேரப் பொழுதை ஆசிரியர்களிடம் சென்று மென் மேலும் கற்பதிலேயே கழித்தார் மயில்வாகனன்.

தமது பதினாறாவது வயதிலே கேம்பிறிட்ஜ் பல்கலைக் கழகத்தினர் நடத்திய சீனியர் பரீட்சையில் மயில்வாகனன் முதல் மாணவனாகத் தேறினார். இந்தத்திறமையின் காரணமாக அர்ச். மைக்கேல் கல்லூரியிலேயே இவருக்கு ஆசிரியர் பதவி கிடைத்தது.

கலாசாலை விடுமுறை காலங்களில் மொழிசார்ந்த தனது அறிவைச் செழுமைப் படுத்திக் கொள்வதில் மயில்வாகனன் ஆர்வம் கொண்டார். பொ. வயித்தி லிங்க தேசிகரிடம் வடமொழிநூல்கள், தமிழ் இலக்கண நூல்கள், சங்க இலக்கியங்களை மிகுந்த அக்கறையோடு பாடங்கேட்டு, இத்துறைகளில் புலமை பெற்றார்.

இரண்டு ஆண்டுகளாக மயில்வாகனன் ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்தபோது, இவரது தாயார் காலமானார். தாயாரின் பிரிவு மயில்வாகனனை உலுப் பியது. அவரின் மனம் சொல்லொணாத்துயரினை எய்திற்று. தாம் வகித்து வந்த ஆசிரிய பதவியைத் துறந்து, மீண்டும் பிறந்த ஊரான காரைத் தீவுக்கே திரும்பினார் அடிகளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரைத்தீவுக்கு அருகேயுள்ள கல்முனையில், கத்தோலிக்க மிஷன் பாடசாலையில் இதே ஆண்டில் மீண்டும் ஆசிரியராகச் சேர்ந்தார். ஆசிரியராக இருந்து கொண்டே அவர் ஒரு பயிற்சிபெற்ற ஆசிரியராக வர விரும்பினார். ஆங்கில ஆசிரியர் கலாசாலை நுழைவுத் தேர்வினில் வெற்றி பெற்ற மயில்வாகனன் இரண் டாண்டுகள் கொழும்பு ஆசிரியப் பயிற்சிக்கல்லூரியில் பயில்கின்ற வாய்ப்பினைப் பெற்றார்.

பயிற்சிக் கல்லூரியின் எல்லைக்குள்ளேயே மயில் வாகனனின் அறிவுத் தேடல் குறுகிப் போய்விடவில்லை. கொழும்பு மாநகரில் கல்வியில் சிறந்த பலதமிழறிஞர்கள் அப்போது பெருமதிப்புடன் வாழ்ந்து வந்தனர். அவர் களில் வித்துவான் சி. தாமோதரம்பிள்ளை, பண்டிதர் கந்தையா, வித்துவான் சிற். கைலாசபிள்ளை ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். சிற். கைலாசபிள்ளை நாவலர் பிறந்த நல்லூரிலே பிறந்தவர். தமிழ் இலக்கண இலக்கியங்கள், ஆங்கிலம், வடமொழியை செம்மையுறக் கற்றுத் தேர்ந்தவர். தென்னிந்தியாவில் தங்கியிருந் தவர். நூற்பதிப்புத்துறையில் சி. வை. தாமோதரம் பிள்ளைக்குத் துணைபுரிந்தவர். உ.வே. சாமிநாதை யரின் இனிய நண்பர். சிலப்பதிகாரப்பிரியர். மேற் கூறிய மூவரிடமும் குறிப்பாக சிற். கைலாசபிள்ளை யிடமும் மயில்வாகனன் சங்க இலக்கியங்களையும், சிலப்பதிகாரத்தையும் கசடறக் கற்றுத் தேர்ந்தார்.

ஏற்கனவே, சிலப்பதிகாரத்தில் ஆர்வம் கொண் டிருந்தவர் மயில்வாகனன். அவ்வார்வம் அவர் வளர வளரப் பெருகிற்று. அவரே சொல்வதை இங்கே மனங் கொள்ளலாம். ''ஈழநாட்டின் குணபாலிலே, என் முன்னோர்க்கு உறைவிடமாகிய காரேறுதீவிலே, கடல்சூழ் இலங்கைக் கயவாகு மன்னன் வழிவந்த மன்னர்களாலே நிறுவப்பட்ட பழைமையான கண்ணகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யார் கோவில் ஒன்று உளது. அதன் வழியாகவும் சிலப்பதிகாரத்தின் மீதுள்ள ஆர்வம் பெருகியது."

சிற். கைலாசபிள்ளை கணீரென்ற குரலிலே உயிர்த்ததும்ப சிலப்பதிகாரத்தைப் பாடஞ்சொல்கிறபோது மயில்வாகனின் நினைவு காவிய உலகில் முற்றாகவே தோய்ந்து திளைக்கும். இளங்கோவடிகளின் கானல் வரி கனவுகளாய் மலரும். பண்டைய இசைக் கருவிகள் மனப்பரப்பிலே உள்ளத்தை நெகிழ்த்தி இசையாய்ப் பிரவகிக்கும். இவ்விதமே ஒரு பெருங்கனவு மயில்வாகனின் நெஞ்சில் சிறு பொறியாய் விழுந்து பற்றிக் கொண்டது.

1912ஆம் ஆண்டில் ஆசிரிய பயிற்சியை முடித்துக் கொண்ட மயில்வாகனன், அர்ச். மைக்கேல் கல்லூரியிலேயே ஆசிரியராக நியமனம் பெற்றார். இரண்டு ஆண்டுகள் அங்கு பணியாற்றியபின் பொறியியல் கல்லூரியில் சேர்ந்து கல்வியைத் தொடர்ந்தார் அவர்,

இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கம் அறிவியல் துறையில் எண்ணற்ற புதுமைகளைத் தோற்றுவித்துக் கொண்டிருந்தது. இத்தகைய புதுப்புனைவுகளும், கண்டுபிடிப்புகளும் அறிவியலில் பெரும் ஈடுபாடு கொண்டிருந்த இந்த இளைஞரை மேலும் கிளர்ச்சி பெற வைத்தன. மயில்வாகனன் புதிய துறைகளில் இத்தகைய ஆர்வங்கொண்டிருந்தாரென்பதை லண்டன் மெட்றிக்குலேஷன் தேர்வுக்கு அவர் தெரிவு செய்து பயின்ற பாடங்களே உறுதிப்படுத்தும். அவையாவன: ஆங்கிலம், லத்தீன், வேதியியல், இயற்பியல். (English, Latin, Maths, Chemistry, Heat light and Sound).

இந்தக்கல்வி ஆதாரமே பொறியியல் கல்லூரிக்கு அவரை இழுத்து வந்ததென்று சொல்லலாம். வழமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலவே பொறியியல் கல்லூரியிலும் அவர் 'டிப்ளமோ' பட்டம் பெற்று முதன் மாணவராகத் தேறினார். இவ் வேளையிலே மதுரைத் தமிழ்ச்சங்கம் நடத்திய பண்டிதர் தேர்விலும் வெற்றி பெற்று, ஈழநாட்டிலேயே முதன் முதலாகப் பண்டிதர் தேர்வில் வெற்றிபெற்றவர் என்ற பெருமையையும் பெற்றுக்கொண்டார் மயில்வாகனன். தமிழ்ச் சான்றாண்மைக்கு இருப்பிடமாகக் கருதப்பட்ட மதுரைத் தமிழ்ச் சங்கத் தேர்வில் இவர் பெற்ற வெற்றி யால், தமிழறிஞர்களின் நெருங்கிய நேயத்துக்கு உரிய வரானார் இவர்.

பண்டிதர் மயில்வாகனன், பொறியியல் கல்லூரியில் பெற்ற வெற்றி, அவருக்கு அங்கேயே உதவி இரசாயன ஆசிரியராகப் பணிபுரியும் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தது. அறிவியல் துறையில் அவருக்கிருந்த ஆர்வமும், பிரமிப்பும் அவரின் கற்பித்தல் முறையில் சிறப்புற வெளியாகிற்று. அறிவியலென்பது புத்தகத் துள் அடங்கியதல்ல; ஆய்வுகூடமே அந்தத் துறையை முழுமையாக உய்த்துணரவைக்கிறது என்பது மயில் வாகனனின் அசைக்கமுடியாத நம்பிக்கையாயிருந்தது. இந்த நம்பிக்கையே அவரை மிகச்சிறந்த அறிவியல் ஆசிரியராகத் திகழவைத்தது.

ஆசிரியர் மயில்வாகனனின் அறிவியற்புலமை கல்வி வட்டாரத்தில் வியந்து போற்றப்பட்டது. அவரைத் தமது கல்விக்கூடங்களில் பணிபுரியவைப்பதற்கு பலரும் முயற்சிகளை மேற்கொண்டனர். 1917 ஆம் ஆண்டில் அர்ச். சம்பத்திரிசியார் கல்லூரித் தலைவரின் அழைப்பை மயில்வாகனன் ஏற்றுக்கொண்டார். அக்கல்லூரியின் அறிவியல் துறைத்தலைவராக சிறந்த முறையில் கடமை யாற்றத் தொடங்கினார்.

இக்காலப் பகுதியிலேதான் ஸ்ரீ இராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்த சுவாமி சர்வானந்தர் இலங்கைக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகை புரிந்தார். ஏற்கனவே ஸ்ரீ இராமகிருஷ்ண மடத்தின் செல்வாக்கு இலங்கையில் பரவியிருந்தது. சுவாமி சர்வானந்தருடன், மயில்வாகனன் உள்ளந் திறந்து அளவளாவினார். தேசசேவை, சமூகப்புனருத் தாரணம், கல்வி வளர்ச்சி என்பனவற்றில் அக்கறை காட்டிய சுவாமி சர்வானந்தரின் பல கருத்துக்கள் மயில்வாகனனை ஈர்த்தன. சிந்திக்கவைத்தன. விரிவான நோக்கில் பல சமுதாயப் பணிகள் பற்றி மயில்வாகனன் எண்ணத் தொடங்கியதற்கு இந்தச் சந்திப்பு அடிகோலியதென்றே சொல்லவேண்டும்.

உலகையே உலுப்பிய முதலாவது உலகமகாயுத்தம், வீறும், வேகமும் கொண்டிருந்த மயில்வாகனனைப் பாதிக்கவே செய்தது. போரில் வீரராகக் கலந்து அவர் இரத்ததானம் செய்ய எண்ணங்கொண்டார், எனினும் போர் விரைவிலே ஒரு முடிவுக்கு வந்தமையினால் அவரது அந்த எண்ணம் நிறைவேறவில்லை. ஆயினும் சமுதாயப் பணிக்குத் தம்மை அர்ப்பணிக்க வேண்டுமென்ற அவரின் உறுதி அவரது மனதில் மேலும் ஆழமாக வேர்பதித்தது.

மயில்வாகனன் ஓயாத படிப்பாளி. பிறர்துணையின்றி, தாமாகவே படித்து லண்டன் பல்கலைக்கழகம் நடத்திய பி.எஸ்ஸித் தேர்வில் 1919ஆம் ஆண்டிலே வெற்றி பெற்றார்.

மானிப்பாய் இந்துக்கல்லூரி நிர்வாகத்தினர், மயில்வாகனனை தமது கல்லூரிக்குத் தலைமையாசிரியராக வரும்படி அழைத்தனர். அந்த அன்பு அழைப்பை மயில்வாகனன் ஏற்றுக்கொண்டு அங்கு பணிபுரியச் சென்றார். இங்கேதான் மு. திருவிளங்கம் என்பவரை தமது அருமையான நண்பராக்கிக் கொண்டார் மயில்வாகனன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மு. திருவிளங்கம் சிறந்த தமிழன்பர். மானிப்பாய் இந்துக் கல்லூரியின் முகாமையாளரான அவர், சிறந்த கல்வி நிறுவனமாக தமது கல்லூரியை ஆக்கும் முயற்சியில் தன்னலமற்று உழைத்தவர். மயில்வாகனனின் வருகை அவரது பணியை மேலும் முன்னெடுத்துச் செல்ல உதவிற்று. அறிவியல்கல்வி, தமிழ்மொழி வளர்ச்சி, சமுதாயப்பணி என்பன குறித்து அவர்கள் இருவரிடையேயும் ஒத்த கருத்தே நிலவியதால் இறுக்கமான நட்பு உருவாயிற்று. மயில்வாகனின் மனதில் உள்ளதை உணர்ந்து செயல்பட்டார் திருவிளங்கம்.

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் மயில்வாகனன் முழுமைபெற்ற அறிவியல் ஆய்வுகூடம் ஒன்றினை அமைத்தார். அறிவியல் பாடங்கள், லத்தீன், ஆங்கிலம், தமிழ் ஆகியவற்றைத் தாமே கற்பித்தார். ஆசிரியர்களின் பற்றாக்குறையைப் பொருட்படுத்தாமல் இவ்விதம் பல்துறையிலும் முழுமூச்சுடன் அவர் மாணவர்களுக்குப் பாடம் சொல்லிக்கொடுத்தார். மாணவர்களோடு அவர் கொண்டிருந்த அன்பு மற்றோர்க்கெல்லாம் முன்னுதாரணமாயிற்று.

இலங்கையில் தமிழ்மொழியை வளர்க்கும் நோக்குடன் ஒரு கழகத்தினை உருவாக்க வேண்டுமென மயில்வாகனன் ஆர்வங்கொண்டிருந்தார். இத்தகைய சங்கத்தினை உருவாக்குவதற்காக தம் காலத்துவாழ்ந்த தமிழறிஞர்களோடு மயில்வாகனன் தொடர்பு கொண்டு பேசினார். இம்முயற்சியின் விளைவாக 1922ஆம் ஆண்டிலே யாழ்ப்பாணத்தில் இயக்கமின்றியிருந்த 'ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம்' அடிகளாரால் புத்துயிரூட்டி அமைக்கப்பட்டது. இச்சங்கத்தில் புகழ்ப்பெற்ற ஈழத்துத் தமிழறிஞரான பாவலர் துரையப்பா பிள்ளை (1872-1929) செயற்குழு உறுப்பினராகப் பணிபுரிந்தாரென்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே ஆண்டில் மயில்வாகனின் வாழ்வில் பெருந் திருப்பத்தை ஏற்படுத்திய சம்பவமொன்று நிகழ்ந்தது. அருமை நண்பரும், பொதுவாழ்வு முயற்சிகளில் உறு துணையாயிருந்தவருமான மு. திருவிளங்கம் திடீ ரென்று காலமானார். மயில்வாகனனுக்கு இது தாங்க முடியாத அதிர்ச்சியளித்தது. தோழமைக்கு ஒப்பற்ற உதாரணமாயிருந்த திருவிளங்கத்தின் பிரிவு அவரின் திட்டங்கள் யாவற்றையும் வேரோடு அசைத்து உலுப் பிற்று என்றே கொள்ளவேண்டும். வாழ்வு பற்றிய நோக்கமே இப்போது மயில்வாகனனுக்கு கலங்கிப் போயிற்று. இயல்பாகவே மெல்லுணர்வு படைத்த மயில்வாகனன் இந்தத் துன்பத்தில் இருந்து விடுபட ஒரு வழியைத் தேர்ந்தெடுத்தார். அது இவரது இயல் பினில் ஏற்கனவே உள்ளார்ந்த பண்பாக அமைந்திருந்த குணாம்சமே.

இந்த மனநிலையோடு மயில்வாகனன் துறவியா கும் நோக்குடன் சென்னை ஸ்ரீ இராமகிருஷ்ணமடத் துக்குப் புறப்பட்டார். சமுதாயப் பணியில் மடத்தின் பங்களிப்பு ஏற்கனவே மயில்வாகனனைக் கவர்ந் திருந்ததென்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது. மடத் தில் மயில்வாகனன் துறவிக்குரிய வழிமுறைகளைக் கடைப்பிடித்தார். அங்கே அவருக்கு மடத்தினரால் பிரபோதசைதன்யர் என்னும் பிரம்மச்சரியப்பெயர் வழங் கப்பட்டது.

மடத்தினர், பிரபோதசைதன்யரின் கல்வியறிவை யும், மொழித்திறனையும் நன்கு அறிந்திருந்தமை யினால் மடத்தின் திங்கள் இதழ்களான, 'ஸ்ரீராம கிருஷ்ண விஜயம்' (தமிழ்) 'வேதாந்தகேசரி' (ஆங்கிலம்)என்பனவற்றுக்கு ஆசிரியராக நியமித்தனர்.

இதழாசிரியரான பிரபோதசைதன்யர், இப்போது ஆன்மீக விஷயங்களோடு, சமகால அரசியல், சமுதாய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைமைகளைப் பற்றியும் அறியும் வாய்ப்பினைப் பெற்றார். நவீன சிந்தனைகள் அவரை மென்மேலும் படிப்பில் ஈடுபடுத்தின. அறிவுத்தேடலுக்கு உற்சாக மூட்டுகின்ற களமாக, பிரபோதசைதன்யருக்கு மடம் இந்த வேளையில் அமைந்ததென்றே கூறலாம்.

1924ஆம் ஆண்டு சித்திரைமாதம், பௌர்ணமி நாளன்று சுவாமி சிவானந்தா, பிரபோதசைதன்யருக்கு ஞானோபதேசம் செய்து சுவாமி விபுலானந்தா என்ற துறவறப் பெயரை வழங்கினார்.

விபுலானந்தர் துறவுபூண்டதின் பிறகு, திருப் பாதிரிப் புலியூர் ஞானியார் மட ஆண்டு விழாவுக்கு தலைமை தாங்கினார். தனது பணிகள் பற்றிய முன் அடையாளத்தை இந்த விழாவிலேயே அடிகளார் தெரியப்படுத்தினார்.

இக்காலப்பகுதியில் மகாகவி ஷேக்ஸ்பியரின் நூல் களை அடிகளார் ஆர்வத்தோடு கற்றார். ஆங்கில இலக்கியத்தில் எல்லா மகாகவிகளையும் கற்றுத் திளைப் பதில், ஷேக்ஸ்பியர்பால் கொண்ட ஆர்வம் அடி களாருக்கு உந்துதல் அளித்தது. தாம் கற்று இன்புறு வதோடு நில்லாது தமிழிலும் அடிகளார் மேனாட்டுக் காவியங்களை மொழி பெயர்த்தார். இவை கற்றோர் மத்தியில் பெருவரவேற்பினைப் பெற்றன.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினரின் வேண்டுகோளினை ஏற்று 1924ஆம் ஆண்டிலே அடிகளார், அங்கு "நாடகத் தமிழ்" பற்றிச் சொற்பொழிவாற்றினார். அடிகளின் தெளிந்த அறிவும், ஆராய்ச்சி நோக்கும் இந்தச் சொற்பொழிவில் முழுமையாக வெளியாகிற்று. இந்த உரையின் பொருட் செறிவு வந்திருந்தோரை மனநிறைவு கொள்ளவைத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் செயலாளரா யிருந்த சீனிவாச அய்யங்கார், அடிகளாரின் ஆராய்ச்சி உரையினை ஒரு நூலாக ஆக்கித்தருமாறு வேண்டினார். அடிகளாரும் அதற்கு இணங்கினார். ஷேக்ஸ்பியரின் நாடகங்களையும், தனஞ்சயரினது தசரூபத்தையும் மூலப் பொருளாகக் கொண்டு, சிலப்பதிகார நாடகநூல் முடிவுகளை விளக்கிக்காட்டும் வகையில் 'மதங்க சூளாமணி' என்ற ஆராய்ச்சி நூலினை எழுதிமுடித்தார்.

'மதங்க சூளாமணி' ஆய்வு முதலில் 'செந்தமிழ்' இதழில் தொடராக வந்து, பின்னர் நூலுருவில் வெளி யிடப்பட்டது. பலரது கவனத்தையும் இந்த ஆராய்ச்சி நூல் ஈர்த்தது.

பண்டிதர் மயில்வாகனனாக தமிழகம் சென்றவர், 1925ஆம் ஆண்டிலே விபுலானந்த அடிகளாக தாயகம் திரும்பினார். ஈழமக்கள் அடிகளாரைப் பெருஞ்சிறப் பளித்து வரவேற்றனர். ஈழத்தின் பல்வேறு பகுதி களிலும் அடிகளாருக்கு ஒப்பற்ற வரவேற்பு அளிக்கப் பட்டது.

ஸ்ரீ இராமகிருஷ்ண மடத்தினர், கிழக்கு இலங்கை யில் உள்ள தமது பாடசாலைகளை நிர்வகிக்கும் முகாமையாளர் பதவியினை அடிகளாருக்கு வழங்கி னார்கள். கல்வித்துறை குறித்து நிறையவே கனவு களைக் கொண்டிருந்த அடிகளார், இந்தப் பதவியினை செம்மையுறப் பயன்படுத்தத் தொடங்கினார்.

தாம் பிறந்த காரைத்தீவிலே பெண்களுக்கென 'சாரதா வித்தியாலய'த்தை அடிகளார் நிறுவினார். மட்டக் களப்புக்கு அருகேயுள்ள கல்லடி உப்போடையில் 'சிவானந்த வித்தியாலயம்' என்னும் ஆங்கிலக் கல்லூரியை அமைத்தார். தனது குருவான சிவானந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரை நினைவு கூரும் விதத்தில் அவர் பெயரிலமைந்த சிவானந்தா வித்தியாலயத்தை சிறப்பாக நடத்தும் பொருட்டு, தானே அதன் தலைமையாசிரியராகவும் அடிகளார் பொறுப்பேற்றுக் கொண்டார்.

திரிகோணமலையில் இயங்கி வந்த சைவப் பாட சாலையை, கல்லூரியாகத் தரமுயர்த்த ஏற்றன யாவும் செய்த அடிகளார், தானே அதன் அதிபராகவும் பொறுப்பேற்று அந்த இந்துக் கல்லூரியின் வளர்ச்சிக் காக முன்னின்று உழைத்தார். பெற்றோர் தமது பிள்ளைகளை மனமுவந்து அடிகளாரிடம் கல்விபயில அனுப்புவதில் பெருமை கொள்கிற சூழ்நிலை அப்போது உருவாகியிருந்தது.

தமிழ் ஆராய்ச்சியாளரிடையே அடிகளார், தமது குண இயல்புகளாலும் அறிவுத்திறனாலும் தனித் தன்மை பெற்றுத் திகழ்ந்தார். தனது சமகால அறிஞர் களால் பெரிதுமுவந்து அவர் பாராட்டப்பட்டதுக்கான காரணம் இதுதான். அவரது எளிமை அவருக்கு ஒப்பிலாப் பெருமை சேர்த்தது. எல்லா மகாநாடுகள், விழாக்களுக்கும் தமிழன்பர்களும், சகஅறிஞர்களும் அவரை விரும்பியழைத்துப் பெருமை கொண்டதற்கு இதுவே காலாயிற்று.

1925ஆம் ஆண்டிலே மதுரைத் தமிழ்ச்சங்கத்தார் மகோமகோபாத்யாய உ.வே. சாமிநாததையருக்கு பொற்கிழி வழங்கி கௌரவிக்க ஏற்பாடு செய்தனர். இந்த விழாவிலே ஈழநாட்டு அறிஞர்கள் சார்பில் அடிகளார் கலந்து கொண்டு உரைநிகழ்த்தினார். இந்த உரையில் தமிழ்ப்பதிப்புத்துறை சம்பந்தமான அடிகளா ரின் சீரிய பார்வை வெளியாகிற்றென அவ்விழாவிலே கலந்து கொண்ட பலரும் பாராட்டினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1926ஆம் ஆண்டில், கல்கத்தாவில் உள்ள பேலூரில் ஸ்ரீ இராமகிருஷ்ணமட மகாநாடு நடைபெற்றது. மடம் சமுதாயப் பணிகள், கல்வி மறுமலர்ச்சிச் செயல்களின் வழியில் மட்டுமன்றி மக்களின் உள்ளக் கிடக்கைகளையும் முன்னெடுத்துச் செல்லவேண்டு மென்ற கருத்து இம்மகாநாட்டில் சிலரால் வெளியிடப் பட்டது. அடிகளார் இம்மகாநாட்டில் இலங்கைப் பிரதிநிதியாகக் கலந்து கொண்டதோடு இக்கருத் தினையும் வலியுறுத்திப் பேசினார்.

அடிகளார் உருவாக்கிய கல்விக் கூடங்கள் கிழக்கு இலங்கையிலே கற்றோர் கவனத்தை ஈர்த்தது மட்டு மன்றி, கிழக்கிலங்கையின் கல்வி நிலையை மேலும் மேம்படுத்தும் எண்ணத்தையும் உருவாக்கிற்று. சமூக நிறுவனங்களும், அரசியல் இயக்கங்களும் இதனால் உந்துதல் பெற்று, அரசின் செயற்பாட்டுக்கு வழிவகுத் தன. இதன் காரணமாக கிழக்கு இலங்கைக் கல்வி நிலையை ஆராய்ந்து அறிக்கை தயாரிக்க இலங்கை அரசு ஒரு விசாரணைக் குழுவை நியமித்தது. இக்குழு வின் தலைவராக அடிகளாரே பெறுப்பேற்றார்.

1927ஆம் ஆண்டிலே இராமநாதபுரம் அரசர் தலை மையில், சிதம்பரத்தில் ஒரு பல்கலைக் கழகம் நிறுவப்பட வேண்டியதின் அவசியம் குறித்து ஆராய ஒரு விசார ணைக் குழு நியமிக்கப்பட்டது. இந்த விசாரணைக் குழுவின் முன்னர், சிதம்பரத்தில் பல்கலைக் கழகம் நிறு வப் படவேண்டியதின் அவசியம் குறித்து சான்றுகூறும் படி அடிகளாரை சென்னைப் பல்கலைக் கழகத்தினர் வேண்டிக்கொண்டனர். அடிகளார், இவ்வேண்டு கோளின் அவசியம் உணர்ந்து அதை ஏற்றுக்கொண் டார். இந்த ஆணைக்குழுவின் முன்னே முதலாவது சான்றாளராக அடிகளாரே தகுந்த ஆதாரங்களுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சான்று பகன்றார். சிறந்த கல்விமானாக இவ்வேளை யிலே அடிகளார் தம்மை வெளிப்படுத்திக் கொண்டார்.

இதே ஆண்டு கண்டிச் சைவ மகாசபையின் ஆண்டு விழாவுக்கு அடிகளார் தலைமை தாங்கினார். இப் பகுதி மக்களின் செயற்பாடுகளுக்கு அடிகளாரின் வருகை உற்சாகமூட்டிற்று.

இலங்கையின் தமிழ் அரசியல் கட்சிகளின் தொடக் கத்திற்கு அடியெடுத்துக் கொடுத்த 'யாழ்ப்பாணம் இளைஞர் காங்கிரசி'ற்கு அடிகளார் தலைவராகத் தெரி வானார். அடிகளாரின் சமுதாய நோக்கும், மக்கள் பால் அவருக்கிருந்த நேயமும் அவருக்கு மக்களிடத்தே ஏற்பட்ட செல்வாக்கிற்கு காரணமாய் அமைந்தன. இவ்வாண்டில் காந்தியடிகள் இலங்கைக்கு வருகை தந்தார். இளைஞர் காங்கிரஸ் தலைவர் என்ற வகை யில் காந்தியடிகளை விபுலானந்தர் வரவேற்றார்.

சிதம்பரத்திலே பல்கலைக் கழகம் அமைக்கப்பட வேண்டுமென்று, அதன் பொருட்டு அமைக்கப்பட்ட விசாரணைக்குழு பரிந்துரைசெய்தது. இதனால் சிதம்பரத்தில் உடனடியாகவே பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது. இந்தப் பல்கலைக் கழகத்தின் தமிழ்ப்பேராசிரியர் பதவியை ஏற்குமாறு, அண்ணா மலைச் செட்டியார் அடிகளாரை விரும்பிவேண்டினார். அடிகளாரும் பேராசிரியர் பதவியை ஏற்றுக்கொண்டார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பணி யாற்றிய அடிகளார் மீண்டும் பழந்தமிழர்கள் மீட்டி இன்புற்ற யாழ் இசைக்கருவிகள் பற்றிய தமது ஆராய்ச் சியைத் தொடங்கினார்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறைப் பேராசிரியராக இருக்கின்ற போதே அங்குள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைக்கல்லூரியை மேற்பார்வை செய்யும் பொறுப்பும் அடிகளாரையே சார்ந்திருந்தது. அப்போது இசைக் கல்லூரியின் ஆசிரியராயிருந்த சங்கீதகலாநிதி க. பொன்னையாபிள்ளையிடம் கருநாடக சங்கீத அமைப்பினையும் அடிகளார் கேட்டறிந்தார். இது அவரது ஆராய்ச்சிக்கு அருந்துணையாய் நின்று உதவிற்று.

பழந்தமிழர் கையாண்ட யாழ்களைப் பற்றிய ஆராய்ச்சியில் முற்றுமுழுதாகத் தம்மை ஈடுபடுத்த அடிகளார் எண்ணங்கொண்டார். இதற்குத் தமது பேராசிரியர் பதவி இடந்தராமல் இருப்பதை அவர் உணர்ந்து 1933ஆம் ஆண்டிலே இப்பதவியினைத் துறந்தார்.

இதே ஆண்டில் கரந்தைத் தமிழ்ச்சங்கத்தின் விருப்பப்படி, சங்க ஆண்டு விழாவிற்குத் தலைமை தாங்கினார் அடிகளார்.

1935ஆம் ஆண்டிலே அடிகளார் சைவ சித்தாந்த மகாசமாசத்தினரின் அன்பான அழைப்பினை ஏற்று, திருவண்ணாமலையில் நடைபெற்ற மகாசமாசத்தின் மகாநாட்டிற்குத் தலைமையேற்றுச் சிறப்பித்தார்.

மாணவனாக இருந்த காலத்திலிருந்தே தமிழில் அறிவியலைச் சிறப்பாகவும், தெளிவாகவும் சொல்ல முடியுமென்ற உறுதி அடிகளாரிடமிருந்தது. இந்த உறுதி, நாளாக நாளாக வலுப்பெற்றது. இவர் காலத்தில் புகழ்பெற்றிருந்த மகாகவிபாரதி, 'மெத்த வளருது மேற்கே, அந்த மேன்மைக்கலைகள் தமிழினில் இல்லை' என்று ஏங்கிய ஏக்கமும் கவலையும் அடிகளாரிடமும் இருந்தன. பாரதியின் அபிமானியாகிய அடிகளார் கலைச்சொல்லாக்கத்திலும், அறிவியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழி பெயர்ப்பிலும் நேரம் வாய்க்கும்போதெல்லாம் தம்மை ஈடுபடுத்தி வந்தார். 1936ஆம் ஆண்டிலே சென்னை பச்சையப்பன் கல்லூரியில் ஒரு கலைச் சொல்லாக்க மகாநாடு நடைபெற்றது. இதற்கு அடி களாரே தலைமை தாங்கினார். இந்தக் காலப்பகுதி யிலே அடிகளார் கலைச்சொல்லாக்க முயற்சியிலும் ஈடு படலானார்.

1937ஆம் ஆண்டில் அடிகளார் கைலாசம், திபெத் ஆகிய இடங்களுக்குச் செல்லும் வாய்ப்புக் கிடைத்தது. இந்தப் பயணத்தை அவர் மிகவும் பயனுள்ளதாகக் கழித்தார். திபெத் நாட்டிலுள்ள, பௌத்த சமயத்தின் ஒருபிரிவான மகாயானப் பள்ளிகளுக்கு அடிகளார் சென்றார். எல்லாச் சமயங்களையும் பற்றிய தத்துவங் களைத் தெளிவாகவே அறிந்து கொள்வதில் ஆர்வங் காட்டிய அடிகளார் மகாயான பௌத்தத்தின் தத்துவம், நடைமுறை என்பனவற்றை திபெத்தில் நேரடியாகக் கண்டுணர்ந்து கொண்டார்.

பத்திரிகைக்குக் கட்டுரைகள் எழுதுவதிலும், சொற் பொழிவாற்றுவதிலும் அடிகளார் மிக மிக அக்கறை எடுத்துக் கொள்வதோடு, அவற்றிற்காக நிறையவும் படிப்பார். இக்காலப்பகுதியில் அவரது அரிய சொற் பொழிவுகள் ஆர்வத்தோடு கேட்கப்பட்டன. மகாகவி பாரதி, ஆறுமுகநாவலர், ரவீந்திரநாததாகூர் மற்றும் மேற்றிசைப்புலவர்களான ஷேக்ஸ்பியர், கீட்ஸ், ஷெல்லி போன்றோரின் ஆக்கங்களைத் தமது உரையிலே அடிகளார் இக்காலப் பகுதியில் மேற்கோளாய்க் காட்டி வந்தார்.

1939ஆம் ஆண்டில் கல்முனையில் ஆசிரியர் விடு முறைக்கழகம் ஒன்று கூடிற்று. கிழக்கு மாகாணத்தின் கல்வி வளர்ச்சிக்கு இந்த ஆசிரியர்கள் அடையாளமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்றனர். பல கல்வி நிறுவனங்களுக்குத் தாயாய் விளங்கிய அடிகளாருக்கு இந்தக் கழகத்தில் கலந்து கொள்வது அளவற்ற மகிழ்ச்சியினைக் கொடுத்தது. இந்த விடுமுறைக் கழகத்திற்கு அவர் தலைமை தாங்கியதுடன், இலக்கியம் - அதனை முறையாகக் கற்றுணரும் விதம் என்பது பற்றி அரியதொரு உரையுமாற்றினார். ஆசிரியர்களோடு கலந்துரையாடினார். அவர்களின் சந்தேகம் தீர்த்து, கற்பித்தலென்பது மாபெரும் சமுதாயப்பணி என்பதை உணர்த்தி அவர்களுக்கு உற்சாக மூட்டினார்.

அடிகளாரை சென்னைப் பல்கலைக்கழகத்தினர் தமது தமிழ்த்தேர்வாளராக அழைத்தனர். அடிகளார் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதுடன், சமயப் பிரசங்கங்களையும் ஆற்றிவந்தார். 'விவேகானந்த அடிகள் ஏந்திய ஞானதீபத்தை தமிழரிடையே உயர்த்திச் செல்லும் ஒப்பற்ற துறவி விபுலானந்தர்' என்று அடிகளாரின் சமயச் சொற்பொழிவு வன்மையைக்குறித்து பத்திரிகைகள் எழுதின.

தமிழில் மட்டுமல்லாது வடமொழி, ஆங்கிலம், இலத்தீன், கிரேக்கம், வங்காளம், பாளி, அரபு, சிங்களம் ஆகிய மொழிகளிலும் அடிகளார் பெரும்புலமை பெற்றிருந்தார். இவரது ஆங்கில எழுத்து, தெளிவும், ஆற்றொழுக்குப்போல வேகமும்கொண்டது. இவரது ஆங்கில மொழித்திறனை சரியான விதத்தில் பயன்படுத்த எண்ணிய மடத்தினர் 'பிரபுத்த பாரதா' என்னும் ஆங்கில இதழுக்கு இவரை ஆசிரியராகத் தேர்ந்தெடுத்தனர். இப்பத்திரிகை இந்தியாவின் வடபால் இமயமலைச் சாரலில் உள்ள மாயாவதி ஆச்சிரமத்திலிருந்து வெளியாகிக் கொண்டிருந்தது. இப் பத்திரிகை ஆசிரியர் பொறுப்பினை ஏற்றுக்கொள்வதற்

காக அடிகளார் 1939இல் இமாலயத்திற்குப் பயண மானார்.

இமாலயம் அமைதியும் வனப்பும் நிறைந்தது. அதன் சாரலிலே ஒப்பற்ற மௌனமும், மாசடையா இயற்கையும் செறிந்திருந்தன. இந்த அமைதியான சூழலில் ஆசிரியப்பணியோடு, யாழ்பற்றிய ஆய்வினை யும் அடிகளார் மேற்கொண்டார். மிகப் பயன்தரும் தகவல்களை, வழக்கொழிந்துபோன இசைக்கருவிகள் பற்றிய நுட்பமான செய்திகளை அடிகளார் இங்கே சேகரித்துக் கொண்டார். யாழ்நூலினை ஆக்குவதில் கொண்ட ஆர்வம், பல இடங்களுக்கு இவரைப் பயணம் செய்யத் தூண்டிற்று, ஆராய்ச்சிக் குறிப்புகளுக்காக இவர் தேனீயாய்ப் பறந்துதிரிந்தார். 'பிரபுத்த பாரதா' வில் வெளியான இவரது ஆசிரிய தலையங்கங்களும், கட்டுரைகளும் வெகுவாகப் பாராட்டுப் பெற்று வரவேற் கப்பட்டன. எனினும் அடிகளார் இதழாசிரியராக குறுகிப்போகாமல், ஆராய்ச்சியாளனாகவே விகாசிக்க எண்ணங்கொண்டார். அதனால் தமது இதழாசிரியர் பதவியைத் துறந்து தமிழகம் மீண்டார்.

தமிழகத்தில் பண்டைய இசைக்கருவிகள் பற்றிய ஆராய்ச்சியில் அடிகளார் மும்முரமாக ஈடுபட்டார். இரவு பகல் பாராது பயணம் செய்து தகவல்கள் சேகரித்தார். அவற்றைப்பற்றி அறிஞர்களோடு கலந்து பேசி மேலும் செய்திகள் பெற்றார்.

தமிழகம் மீண்ட அடிகளாரை, இலங்கைப் பல்கலைக் கழகத்தினர் தமது தமிழ்த்துறைத் தலை வராக வரும்படி அழைத்தனர். தாயகம் விடுத்த அழைப்பை அடிகளாரால் மறுக்க இயலவில்லை. இலங்கைப்பல்கலைக்கழகத்தின் முதல் தமிழ்த்துறைத் தலைவர் பதவியினை ஏற்று அவர் தாயகம் மீண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1943ஆம் ஆண்டில் தமிழ்த்துறைத்தலைவராக அடிகளார் பொறுப்பேற்றார். அடிகளாரின் அரும்பணி களைப் பாராட்டி கொழும்பு நகர மண்டபத்திலே ஒரு விழா எடுக்கப்பட்டது. இலங்கைப் பல்கலைக்கழகத்து உபவேந்தர் ஐவர் ஜென்னிங்ஸ், கல்வி மந்திரி சி. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கரா, அரசாங்க சபை அங்கத்தவர் நடேசபிள்ளை, ஜனாப். டி, பி. ஜயா, வண. பீட்டர்பிள்ளை ஆகியோர் இப்பாராட்டு விழா வில் கலந்து கொண்டோரில் சிலர். பல சமய, இனத் தைச் சேர்ந்த பொதுமக்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். அடிகளாருக்கு அளிக்கப்பட்ட இத்தகைய வரவேற்பு, இலங்கையில் வேறெந்தக் கல்வியாளருக்கும் அளிக்கப்படவில்லை.

அடிகளார், இலங்கையின் இருபதாம் நூற் றாண்டின் முற்பகுதிக் கல்வி வரலாற்றில் பெரும் பங்களிப்பாற்றியுள்ளார். தமிழ்த் துறைத்தலைவராக மட்டுமின்றி இலங்கையின் கல்விப்பகுதி பாடநூற்சபை, பொதுத் தேர்வுச்சபை ஆகியவற்றில் உறுப்பினரா யமர்ந்து, எண்ணற்ற ஆலோசனைகளை வழங்கினார். இலங்கை அரசாங்கம் பள்ளிகளுக்கான பாடத் திட்டத்தை வகுத்தபோது, ஒவ்வொரு வகுப்பிற்குமான சங்கீத பாடத்திட்டத்தை செவ்வியமுறையில் அடிகளார் உருவாக்கிக் கொடுத்தார்.

பள்ளிக்கூடங்களில் சமயமும் ஒரு பாடமாகப் போதிக்கப்பட வேண்டுமென அரசாங்கம் தீர்மானித்த போது சைவசமய பாடத்திட்டத்தையும் அடிகளார் ஏற்ற முறையில் தயாரித்துக் கொடுத்தார்.

இலங்கையின் அரசுத்தேர்வுகள் யாவற்றிலும் அனேகமாக அடிகளார் தேர்வாளராகப் பணியாற்றி யிருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிகளாரின் நீண்ட நாட் பணி 1947இல் உரிய வடிவினை எய்திற்று. அவரது அரிய ஆராய்ச்சியின் முடிவு, 'யாழ்நூல்' என உருப்பெற்றது. கரந்தைத் தமிழ்ச்சங்கத்தின் ஆதரவில் திருக்கொள்ளும் பூதூர்க் கோயிலில் 'யாழ்நூல்' அரங்கேற ஒழுங்குகள் செய்யப் பட்டன.

20, 21—6 1947 ஆகிய இரண்டு தினங்களிலும் அரங்கேற்றுவிழா நிகழ்ந்தது. இவ்விழாவிலே ஔவை துரைசாமிப்பிள்ளை, சென்னை மாகாணக் கல்வி மந்திரியாயிருந்த சு. அவிநாசிலிங்கம் செட்டியார், சிதம்பரம் செட்டியார், ஆர்.பி. சேதுப்பிள்ளை, நாவலர் சோமசுந்தர பாரதியார், 'குமரன்' சொ. முருகப்பா, தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை. பேராசிரியர் சாம்பமூர்த்தி, வெள்ளைவாரணனார், திருப்பாம்பரம் சாமிநாத பிள்ளை, கரந்தைக்கவியரசு வெங்கடாசலம்பிள்ளை ஆகியோர் கலந்து கொண்டனர்.

இவ்விழாவிலே அடிகளார் யாழ்நூலுக்குச் சிறந்த விளக்கம் கொடுத்தார். அடிகளாரின் அறிவுறுத்தலின் படி தயாரிக்கப்பட்ட முளரியாழ், சுருதிவீணை, பாரிசாத வீணை, சதுர்த்தண்டிவீணை என்ற இசைக்கருவிகள் இவ்விழா ஊர்வலத்தில் கொண்டுவரப்பட்டன. இந்த விழாவிலேயே வீணை வித்தகர் சிவானந்தம்பிள்ளை யாழ்நூலிற் கண்ட கணக்குப்படி அமைக்கப்பட்ட சுருதி வீணையில் ஏழ் பெரும்பாலைகளைக் கிரகசுவரம் மாற்றி இசைத்து எல்லோரையும் பரவசத் திகைப்பிலும் மகிழ்ச்சி யிலும் ஆழ்த்தினார்.

இலங்கையிலிருந்து தமிழ்நாட்டிற்கு அரங்கேற்று விழாவுக்குப் புறப்படும்போது அடிகளாரின் உடல் சோர் வுற்றிருந்தது. அதையும் மீறி அவர் பயணம் செய்த மையால் உடல்நலிந்து நோயுற்றார். கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவமனை ஒன்றில் அடிகளார் சேர்க்கப்பட்டு, சிறந்த வைத்தியம் அளிக்கப்பட்டபோதும் பயன் ஏதும் நேரவில்லை.

19-7 - 1947இல் அடிகளார் வாழ்வு நிறைவடைந்தது.

சிவானந்த வித்தியாலய மரநிழலின் கீழே அமைக்கப்பட்ட கல்லறையில் அடிகளாரின் உடல் அடக்கம் செய்யப்பட்டது.

அந்தக் கல்லறையின் மேலே எழுப்பப்பட்ட சமாதியில் அடிகளாரே யாத்த அவரது பின்வரும் கவிதை பொறிக்கப்பட்டுள்ளது :

'வெள்ளை நிறமல்லிகையோ, வேறெந்த மாமலரோ
வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலர்எதுவோ?
வெள்ளை நிறப்பூவுமல்ல; வேறெந்த மலருமல்ல;
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது.'

□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'சேவை செய்ய வரம்தா என்பேன்'

1920ஆம் ஆண்டில் மானிப்பாய் இந்துக்கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருக்கும்போது அடிகளார், தம்முடைய மாணவர்களைப் பார்த்து பின் வரும் கேள்வியைக் கேட்டார் :

''சிவபெருமான் காட்சி தந்து உங்களுக்கு என்ன வரம் வேண்டுமென்று கேட்டால் என்ன கேட்பீர்கள்?''

அதற்கு மாணவர்கள் வெவ்வேறு விதமான பதில்களைக் கூறினார்கள்.

அப்போது விபுலானந்த அடிகளார் கூறினார் :

''நானென்றால் முத்தி தரும்படி கேட்க மாட்டேன். முத்தி என்னளவில் நின்று விடும். அதிலும் பார்க்க எல்லோரும் இன்புறும்படி சேவை செய்வதனால் அதிலுள்ள இன்பமோ ஒப்பற்றது. ஆனபடியால் சேவை செய்ய வரம் தா - என்றிப்படியாகக் கேட்பேன்''

மேற்கூறிய சம்பவத்தை ஆழமாகப் புரிந்து கொண்டால் விபுலானந்த அடிகளாரின் எல்லாப் பணிகளின் உள்ளார்ந்த பண்புகளையும் தெளிந்து கொள்ள முடியும்.

அடிகளார் துறவிகளானது தற்செயலாக நடந்த ஒரு செயலல்ல என்றே அவரின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் எடுத்துச் சொல்கின்றன.

அவரது துறவின் நோக்கம், ஒரு மடத்தினுடைய எல்லைக் கோட்டிற்குள் அடங்கிப் போய், பணி செய்வ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோடு முடிந்து விடுவதாயுமிருக்கவில்லை. மானிட விழிப்புக்கும், மேன்மைக்கும் உழைப்பதே என் கடமை என்று அவர் அடிக்கடி சொல்லி வந்திருக்கிறார்.

ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரும், விவேகானந்தரும், ஆறுமுகநாவலரும், சிவானந்தருமே அடிகளாரின் உள்ளத்தை பண்படுத்தி, அவரை செயற்படுத்தியவர்கள்.

அடிகளாரின் உள்ளம் எப்போதும் ஞானத்தைத் தேடுவதிலேயே சென்றிருக்கிறது. அதை அவருடைய காலச்சூழலும், நண்பர்களும், ஆசான்களும் செம்மையாக வழிப்படுத்தி இருக்கின்றனர்.

அவருடைய காலப்பின்னணியை நோக்கினால் பல விஷயங்கள் தெரியவரும்.

அடிகளார் தோன்றியகாலம், இந்தியாவிலும் இலங்கையிலும் அந்நிய ஏகாதிபத்தியத்திற்கெதிராகப் போர் நடந்து கொண்டிருந்த காலம். அந்நிய ஏகாதிபத்தியத்திற்கெதிராக தமது சமயத்தையும், மொழியையும் புத்துயிரூட்டுகின்ற முயற்சியையும் தேசபக்தர்கள் செய்து கொண்டிருந்தார்கள், இதை அவர்கள் காலம் தமக்கு அருளிய கட்டளையாகவே கருதினார்கள். ஆறுமுகநாவலர் (1822—1879) சைவத்தையும், தமிழையும் காத்திடப்பிறந்தவர் என்றே அக்காலத்தில் கருதப்பட்டவர். 'நல்லைநகர் நாவலர் பிறந்திலரேற் சொல்லு தமிழெங்கே? சுருதியெங்கே?' என்ற கருத்து இப்போது பார்க்கையில் வரலாற்று உண்மையாகி விட்டதாகவே தெரிகிறது. நாவலர் அவர்கள் எந்த விஷயத்தையும் சிறப்பாகச் சமயநோக்கிலே எடுத்து சீர்தூக்கியவர். ஆனாலும் மக்களிடையே சமய அடிப்படையில் அவர் என்றுமே வேறுபாடு காட்டியதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவான விஷயங்களில் அவர் எல்லா மக்களுடனும் தோளோடு தோள் நின்று போராடியவர்.

நாவலரின் சமயப்பணி, கல்விப்பணி, இலக்கியப் பணி என்பவை அவருக்கென்றே ஒரு மரபைத் தோற்று வித்ததோடு, சிறந்த பின்பற்றுதலையும் உருவாக்கிற்று. அவரை அடியொற்றி சமயம், கல்வி, இலக்கியம் என்ற துறைகளில் நிறையப் பேர் உருவானார்கள். நாவலர் பணியை வெவ்வேறு விதமாகத் தொடர்ந்தனர்.

வசனநடை கைவந்த வல்லாளரான நாவலரின் நூல்கள், தமிழ் மொழியின் சீரிளமைத்திறனை மட்டு மன்றி எளிமையையும் தெளிவையும் எடுத்துக்காட்டி, படிப்போரிடையே கிளர்ச்சியை உருவாக்கியிருந்தன. இந்த நிலையிலேதான் அடிகளாரின் தந்தையார் சிதம்பர தரிசனம் செய்ய தமிழ்நாடு சென்ற நிகழ்ச்சி நடந்தது. அங்கு சென்றவர் சிதம்பரதரிசனத்தை முடித்து, நாவலர் நூல்களோடு வீடு திரும்பினார். அந்த நூல்கள், இளைஞரான அடிகளுக்கு விலைமதிப் பற்றத் தேட்டமாகவும், அறிவுக்களஞ்சியமாகவும் அமைந்தன. நாவலரின் அரும்பணிகளும், அயரா உழைப்பும் அடிகளாரைப் பெரிதும் ஈர்த்தன. துடிப்பு மிக்க இளைஞரான அடிகள், தமது வாழ்வின் போக்கு எவ்விதம் அமைய வேண்டுமென்பதை வகுத்துக் கொள் வதற்கு இக்காலமே காரணமாயிற்று. நாவலருடைய முன் மாதிரியைப் பின்பற்றியே சைவத்தையும், தமிழையும் வளர்க்க முடியும் என்பதை அடிகளார் தமது பிற்காலத்தில் அடிக்கடி வலியுறுத்தி வந்ததை இதற்கு ஆதாரமாகக் கூறலாம்.

இந்து சமயத்தின் புதிய வீச்சாக ராமகிருஷ்ண பரமஹம்சர் மதிக்கப்பட்டார். அவரின் சீடரான விவேகானந்தர் வீறும் வேகமும் கொண்ட ஞானதீபமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துக்களால் போற்றப்பட்டார். விவேகானந்தர் அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் தமது சமயப் பிரசங்கங்களை முடித்துக் கொண்டு 1897ஆம் ஆண்டு கொழும்பு மார்க்கமாக இந்தியா திரும்பினார். அந்த வேளையில் அவர் இலங்கையில் சில நாட்கள் தங்கி யிருந்து, யாழ்ப்பாணமும் சென்றார். யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் விவேகானந்தர் முக்கியமான சொற்பொழிவுகளை நிகழ்த்தினார். இச்சொற்பொழிவு கள் இலங்கையில் குறிப்பிட்டுச் சொல்லும்படியான தாக்கத்தை உண்டாக்கின. சிந்தனைப் போக்கிலும் புதிய பிரகாசத்தை ஊட்டின.

சைவம் என்ற வரம்பிற்குள்ளேயே சிந்தித்தும், செயற்பட்டும், எழுதியும் வந்த ஈழத்து தமிழறிஞர் களும், அறிவறிந்தோரும் விவேகானந்தரின் யாழ்ப் பாண வருகைக்குப் பின்னர், சற்றுப் பரந்த நோக்கிலும் விசாலசிந்தனையோடும் செயற்படும் இயல்பினை எய்தினர். விவேகானந்தரின் சமரச சன்மார்க்க நெறிறைப் பற்றிய எண்ணம் ஏதோ விதத்தில் இவர் களைப் பாதித்தது. சுயபரிசீலனைகூட செய்ய வைத்தது என்று சொல்லலாம்.

விவேகானந்தரின் வருகையைத் தொடர்ந்து, இராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்த பெயர் பெற்ற துறவிகள் இலங்கைக்கு வந்தனர். சிவானந்தர், திரிகுணைத்தானந்தர், அபேதானந்தர், இராமகிருஷ் ணானந்தர், சர்வானந்தர் ஆகியோர் இவர்களில் சிறப்பாகக் குறிப்பிடப்பட வேண்டியவர்கள்.

யாழ்ப்பாணத்தில் 1917ஆம் ஆண்டிலிருந்து புகழ்ப் பெற்ற கொழும்புத்துறை யோகசுவாமிகளோடு அடிகளார் தொடர்பு கொண்டிருந்தார். இதே ஆண்டிலேதான் சர்வானந்தர் இலங்கைக்கு வந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபத்தைந்தே வயதான இளைஞரான அடிகளார் அப்போது சர்வானந்தரைச் சந்தித்தார். இருவரும் நீண்ட நேரமாக அளவளாவினார்கள், இருவரும் ஒருவரை ஒருவர் கண்டுகொண்டு ஒருவரால் ஒருவர் கவரப்பட்டார்கள். விவேகானந்தரின் வீறுகொண்ட வேதாந்தம், சமூக, அரசியல், பொருளாதார மேம் பாட்டையும் சிந்திக்கிறது. அதுவே இக்கால இந்தியா வின் தேவை என்பதில் அடிகள் உணர்ந்தார்.

1922இல் மானிப்பாய் இந்துக்கல்லூரி தலைமை யாசிரியரான அடிகளாருக்கு, கல்லூரி முகாமையாள ரான மு. திருவிளங்கம் அரிய நண்பராய் வாய்த்தார். இவர் மூலமே யோகசுவாமிகளோடு அடிகளாருக்குத் தொடர்புண்டாயிற்று, அடிகளார் வீட்டில் இவர்கள் யாவரும் சந்தித்துப் பேசுவார்கள். நவாலியூர் தம்பையா வாத்தியார் இன்னொருவர்.

1922ஆம் ஆண்டில் திருவிளங்கம் மரணமுற்றார். இச்சம்பவம் அடிகளாரைப் பெரிதும் வருத்தியது. தமது வாழ்வின் போக்குப்பற்றி அடிகளார் இவ்வேளையிலே தான் மறுபரிசீலனை செய்து கொண்டார் எனத் தோன்றுகிறது. இதே ஆண்டில் அடிகளார் சென்னை ஸ்ரீ இராமகிருஷ்ணமடத்துக்குப் பயணமானார். ஐந்தாஞ்சமய குரவரென்று போற்றப்பட்ட நாவலரின் வழியையே அடிகளார் பின் பற்ற எண்ணங்கொண்டா ரென்பதை, 'யாழ்ப்பாணச்சமய நிலை' என்றதலைப்பில் சைவமும் தமிழும் கீழ்நிலைப்பட்டிருப்பது பற்றி நாவலர் கண்ணீரால் எழுதிய கட்டுரையின் பகுதிகளை எடுத்து, இந்நிலை இன்னும் மாறவில்லை, இதை மாற்றுவதே நமக்குள்ள பணி என 'விவேகானந்தன்' (1927) இதழில் அவர் அழுத்தந்திருத்தமாக எழுதியிருப் பது உறுதிப்படுத்துகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிகளார், சமயநெறியென்பது எல்லாமக்களை யும் சமமாகக் கருதுவதென்பதை அழுத்தமாக வலியு றுத்துகிறார். வார்த்தையிலும் வாழ்க்கையிலும் சாதி ஒடுக்குமுறைகளை அவர் என்றைக்கும் ஒரு சீர்திருத்த வாதியாக எதிர்த்து வந்திருக்கிறார்.

'எல்லோரும் சமமென்பது உறுதியாக வேண்டும்' என்ற எண்ணங் கொண்ட அடிகளார், தீண்டாமை என்பது இடைக்காலத்தில் வந்ததொரு நோய் என்றே கருதுகிறார். சமயநெறிகள் அவற்றைத் துடைத்தெறி யும் ஆற்றல் பெற்றவை என்ற அவரது நம்பிக்கை பின் வருமாறு உணர்த்தப்படுகிறது.

''தம்மை, ஆண்டவனுக்கு மக்களாகவும் உற்ற நண்பராகவும் தொண்டராகவும் உடன் உழைப்பவராகவும் கருதிய மூதறிஞர் வகுப்பு வேற்றுமை காட்டாது, 'எல்லோரும் ஓர்குலம்' என்னும் உண்மையினைக் கடைப்பித்து வாழ்ந்து வந்தனர். அவரது சீரிய ஒழுக்கமும் தெய்வீகச் செயலும் நம் உள்ளத்தை உருக்கும் நீர்மைய. திருஞான சம்பந்தம்பிள்ளையார் கவுணியகுலத்தில் உதித்து வேத வேள்விகளைப் போற்றியவரெனி னும் பாணராகிய திருநீலகண்டரையும் அவருடைய மனைவியாராகிய விறலியாரையும் தமது நட்புக்கு உரியாராக்கித் திருக்கோயில்களுக்கு உடனழைத் துச் சென்றனர். பிள்ளையார் பாடிய இசைத் தமிழ்த் தேவாரப்பதிகங்களைப் பாணரும் பாடினி யாரும் இசையிலமைத்து அன்பருள்ளத்தை இன் புறுத்தினர். திரு நீலநக்கநாயனாரது திருமனைக் குச் சென்ற ஞான்று, பிள்ளையார் அந்தணராகிய நீலநக்கரைநோக்கிப் பாணர்க்கும் பாடினியார்க் குப் உள்மனையிலே இருக்கையமைத்துத் தரும்படி திருவாய்மலர்ந்தருளினார். நீலநக்கர் பெறற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரும் விருந்தினராகிய பாணர் தலைவரது குலநல மாராயாது, பிள்ளையாரது திருவுள்ளக் கருத்திலும், ஒருபடி உயரவொழுகுவாராய் வேள்வித் தீயிருந்த மிகத்தூய மனைக்கட்டினகத்துப் பாணர்க்கும் பாடினியார்க்கும் இருக்கையளித்தார். தீக்கடவுள் தொண்டர் செயலினைப் பாராட்டியதற்கறிகுறியாகத் தீ வலஞ்சுழித்து எழுந்தது. ஆண்டில் இளையராய் அறிவில் முதியரான பிள்ளையார் ஆண்டிலும் அறிவிலும் முதியரான திருநாவுக்கரசரை, 'அப்பரே!' என அழைத்தார். அன்புகசிந்த இவ்வுரிமைச்சொல் தவமுதியோரது திருநாமங்களுள் ஒன்றாக இன்றுவரையும் நிலைபெற்றது. நம்மாழ்வாரைப்போல அப்பரும் வேளாண் குலத்தில் உதித்தவர். ஆண்டவன் திருவடி நிழலை அடையும் பொழுது அப்பருக்கு வயது எண்பத்தொன்று. சம்பந்தப் பிள்ளையார் நிலவுலகில் வாழ்ந்தது ஈரெட்டாண்டு எல்லையாகும். எழுபதாண்டின் மிக்க முதியவரும் ஏழாண்டுப் பாலகரும் முதன் முதலிலே ஒருவரையொருவர் கண்ட காட்சி படிப்போர் சிந்தையை யுருக்கும் நீர்மையது. அந்தணர் குலத்தவராகிய அப்பூதியடிகள் வேளாண்குலத்தவராகிய அப்பரை வழிபடுகடவுளாகச் சிந்தையுள்வைத்துப் பெறற்கரும் பேற்றினை யடைந்தார். அந்தணராகிய மதுரகவியார் வேதந்தமிழ்செய்த மாறனாகிய நம்மாழ்வாரையன்றி வேறு தெய்வத்தை அறியேயென அழகிய செழும் பாடல் பத்தினால் நமக்கு அறிவுறுத்துகின்றார். பாணர் குலத்திலுதித்த திருப்பாணாழ்வார் அந்தண முனிவர் தோளிலிவர்ந்து திருமுன்னிலைக்கு வரவேண்டுமென்பது திருவரங்கத்தம்மானது திருவுள்ளக்கருத்தாயிற்று. சுந்தரமூர்த்திநாயனாருடைய நண்பராகிய சேரமான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமாள் திருநீற்றுப்பொலிவினைக்கண்டு வண்ணான் முன்னிலையிலே தலைவணங்கினார், இத்தகைய உளப்பாங்கு பெரியோருக்கு அண்மையான காலத்திலிருந்த ஆசாரியரிடத்தும் அமைந்திருந்தது. பதின்மூன்றாம் நூற்றாண்டிலே சகலாகம பண்டிதராக விளங்கிய அருணந்திசிவாசாரியர் வேளாண்குலத்து மெய்கண்டதேவரைத் தமக்குக் குருவாகக் கொண்டார். அம்மரபில் நான்காங்குரவராகிய உமாபதிசிவாசாரியர் தம் உறவினரால் ஒதுக்குண்டு தில்லை நகர்ப்புறத்திலே கொற்றவன் குடியில் வதிந்தார். இவர் பெற்றான் சாம்பானுக்குப் பேதமறத் தீக்கை செய்து உண்மை ஞானத்தை உணர்த்தினார். இராமாநுஜரது சீரிய உளப்பாங்கினை உலகம் நன்கு அறியும். தாம் நரகம் புகினும், உலகம் உய்தல் வேண்டும் என்னும் கருத்தினோடு கோபுரத்தின்மீது நின்று மறைமொழியை அனைவர்க்கும் உணர்த்தினார். இவரது அருட்கடைக்கண்ணோக்கினாலே தீண்டாதாரும் பிறரும் உயர்வெய்தினர். இவரது போதனைகள் வடநாட்டிற் பரவியபோது அங்குள்ள பெரியாரும் சாதிக்கட்டுப்பாட்டினைத் தகர்த்தெறிந்து சமயவுண்மைகளை அனைவர்க்கும் உரிமையாக்கினார்."

மேலும் அவர் கூறுகிறார்: "ஸ்ரீராமாநுஜரின் விஷ்டாத்வைத மதத்தினை உணர்ந்த போதகாசிரியராகிய இராகவநந்தருக்குச் சீடராகிய இராமாநந்தர் விஷ்ணு பக்தர்களையெல்லாம் சமபந்தியிலே உண்ணும்படி செய்ததனாலும், தேசபாஷையிலே மதப்பிரசாரம் செய்ததனாலும் சாதித்தடைகளை முழுதும் நீக்கி விட்டார். ஆழ்வார்கள் பன்னிருவரில் ஒருவராகிய திருமங்கைமன்னன் திருவாய் மலர்ந்த பெரிய திருமொழி முதற்பத்திலே,

இன்—3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'குலந்தரும் செல்வந் தந்திடும் அடியார்
படுதுய ராயின வெல்லாம்
நிலந்தரஞ் செய்யும் நீள்விசும் பருளும்
அருளொடு பெருநில மளிக்கும்
மலந்தரும் மற்றுந் தந்திடும் பெற்ற
தாயினும் ஆயின செய்யும்
நலந்தருஞ் சொல்லை நான்கண்டு கொண்டேன்
நாராய ணாவென்னும் நாமம்'

என்றனர். இப்பாடலுக்கு உரைகண்ட பெரியார் குலந்தரும், என்பதற்குப் பண்டைக்குல மொழிந்து தொண்டக் குலம் ஆதல் எனக் காட்டினாராதலின், தொண்டர்கள், தங்களுக்குள்ளே குலநலம் ஆராயார்கள் என்பது பெறப்பட்டது. இவ்வுண்மையினை, இராமாநந்தர் சாதனையிற் கொண்டுவந்தாராதலின் முஸ்லிம்கள், பெண்கள், தீண்டாதோர் என்று இத்தகையோர்கள் அவருடைய சீடர்களாகி மதபோதனை செய்யும் ஆசிரியர்களுமானார்கள். தெய்வம் ஒன்றே என்னும் உண்மையினையும் அத்தெய்வமே அனைவர்க்கும் பிறப்பிடம் என்னும் உண்மையினையும் இராமாநந்தர் உணர்ந்தார். ஆதலினாலே மன்பதை அனைத்தினையும் ஒரு பெரிய குடும்பமாகக் கண்டார். அத்தகைய காட்சி சாதிமத பேதங்களை முழுதும் ஒழித்து விட்டது. ஆண்டவனுடைய திருவடிகளிலே சரண்புகுந்த தொண்டர் தமது பழைய வாழ்க்கையினை ஆண்டவனது திருமுன்னிலையிலே இழந்துவிட்டார்; ஆதலினாலே ஒரு புதிய வாழ்க்கையினைத் தொடங்கப்பெற்றார் என இராமாநந்தர் கொண்டார். அவருடைய சீடர்களுள்ளே சக்கிலியராகிய இரவிதாசரும், இஸ்லாமிய நெசவுகாரராகிய கபீர்தாஸரும் உழவராகிய தன்னரும். நாவிதராகிய சேனரும், பத்மாவதியென்னும் பெண்ணும் சிறப்பெய்தியிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கபீர்தாஸர் காலம் கி. பி. 1498-1518வரை ஆகும், இவர் அதிசயிக்கத்தக்க விதமாக இராமா நந்தருக்குச் சீடரானாரென அறிகின்றோம். நெச வுக்காரச் சாதியிலுதித்த ஏழை இஸ்லாமியச் சிறுவ ராகிய தம்மைப் பிராமண முனிவர் சீடராக்க விரும்பாரென வெண்ணிய கபீர், இராமாநந்தர் வழக்கமாக ஸ்நானம் செய்யச் செல்லுகின்ற படித் துறையிலே போய்ப் படுத்திருந்தார். சூரியோ தயத்திற்கு முன்னே படித்துறைக்குச் சென்ற இராமாநந்தர் தமக்குச் சீடராகும் பான்மையின ராகிய கபீருடைய உடலிலே திருவடியை வைத்தார். இருளாக இருந்தமையினாலே என்ன நிகழ்ந்ததென அறியாது பரபரப்புற்றுத் தமது இஷ்டதெய்வமாகிய ஸ்ரீராமனுடையதிருநாமத்தை இருமுறை உச்சரித்தார். தமது திருவடி தீண்டப் பெற்றோர் யாரென்பதை இராமாநந்தர், அறிந்து கொள்ளுவதற்கு முன்னமே கபீர், 'ராமா, ராமா' என்று உச்சரித்துக்கொண்டு அவ்விடத்தைவிட்டு ஓடிவிட்டார். இது நிகழ்ந்தபொழுது கபீருக்கு வயது பதின்மூன்று. படித்துறையை நீங்கிய கபீர்இராமா நந்தர் தம்மைச் சீடராக ஏற்றுக்கொண்டாரென்று ஊரெங்குஞ் சொல்லித் திரிந்தார். இராமாநந்தர் கபீரை அழைப்பித்து வினவுதலும், இராமாநந்த ருடைய திருவடிகளின் பரிசமும், அவர் வாயினின்று பரிசுத்தம் பொருந்திய இராமநாமத்தினைப் பெற்றுக்கொண்டதும் தமக்குச் சிஷ்யத்துவதத்தை அளித்தனவெனக் கபீர் விடை பகர்ந்தார். இத னைக் கேட்ட இராமாநந்தர் கபீரை இறுகத்தழுவி ஆசிர்வதித்தார், அதன்பின் கபீர் அப்பெரியோரின் போதனைகளை ஒழுங்காகக் கேட்டுவந்தார். ஆத்ம ஞானத்தை யடைந்த கபீர் நாடெங்கும் சென்று இஸ்லாமிய மதத்திற்கும் இந்து மதத்திற்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடையேயுள்ள சமரசத்தினைப் போதிப்பாரா யினார். அவருடைய பாடல்களும் உபதேசங்களும் ஆண்டவன்பால் உள்ளபடி வேட்கையுடைய மக்களுக்குப் பொதுச்சொத்து ஆயின. இந்துக் களுடைய தெய்வம் காசியிலும், இஸ்லாமியருடைய தெய்வம் மக்கத்திலும் இருக்க, அனைவருக்கும் பொதுவாகிய தெய்வம் எல்லா உயிர்களின் இதயத் திலுமிருக்கிறதெனக் கபீர் கூறினார். இந்த அற் புத வாசகம் கபீர்தாஸருடைய போதனைகளின் மூலவாசகம் ஆயிற்று.

இராமாநந்தருடைய சக்கிலியசாதிச் சீடராகிய இரவிதாஸரானவர், கி.பி. 1575 முதல் 1624 வரை யும் வாழ்ந்த யாக்கோபு பொஹெமே என்னும் மேனாட்டுச் சக்கிலிய ஞானவானை நிகர்த்தவர். அந்த ஜெர்மனிய ஞானவான் உவில்லியம் பிளேக் என்னும் ஆங்கில ஞானவானுக்கு உண்மை வழியைக் காட்டியவர். மீராபாயென்னும் இராணி இரவிதாஸருடைய சிஷ்யை என அறிகின்றோம். இவ்வம்மையாரியற்றிய அழகிய தோத்திரப் பாடல்கள் இந்நாளிலும் வழங்குவன. தெய்விக அன்பின் உருக்கத்தினை அறிந்தோர் மாத்திரமே ஆண்டவனை அடைதற்குரியர் என்னும் உண்மை மையும், மன்பதைக்குத் தொண்டுசெய்வதே சமய வாழ்க்கையின் உச்சநிலை யென்பதும், இரவிதாஸர் கைக்கொண்ட கொள்கைகளாம்."

அடிகளார் 1931ஆம் ஆண்டில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேராசிரியராக இருந்தபோது தீண்டப்படாத மக்களின் முன்னேற்றத்துக்காக பெரிதும் உழைத்திருக்கிறார்.

அண்ணாமலை நகருக்கு வடகிழக்குப் பகுதியி லிருந்த திருவேட்களச்சேரியில் அடிகளார் ஒரு இரவுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையை அமைத்தார். அந்தப் பகுதியில் வாழ்ந்த தீண்டப்படாத, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு தேவையான புத்தகங்களை அடிகளாரே தமது சொந்தச் செலவில் வாங்கிக் கொடுத்தார். அவர்களோடு நெருங்கிப்பழகி அவர்களின் உற்ற நண்பராய்த் திகழ்ந்தார்.

1933ஆம் ஆண்டில் விவேகானந்தர் விழாவை சேரி மக்களே சிறப்பாகக் கொண்டாடும் நிலையை அடிகளார் உருவாக்கினார். பூரணகும்பம் வைத்து அம்மக்கள் பெருமிதத்தோடு எடுத்த இவ்விழா, அடிகளாருக்கு பெருமகிழ்வூட்டிற்று.

அடிகளார் தமது சமய வேட்கையைப் பின்வருமாறு தெரியப்படுத்துகிறார் :

> ''பழமையும் புதுமையும் துவைதமும் அத்வைதமும் பௌதீக விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானக் காட்சியும் மேற்றிசை யறிவும் கீழ்த்திசைச் சமயமும் மன மொடுங்கிய தியான நிலையும் மன்பதைக்குத் தொண்டு புரிதலும் சமரசப்படவேண்டிய காலம் இது. ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் வருகை யினாலே மேற்கூறிய சமரசநிலை கைகூடியிருக் கிறது. அவருடைய முதற் சீடராகிய சுவாமி விவேகானந்தர் பிரசங்கங்களினாலும் நூல்களினா லும் தெளிவுறக் காட்டிய வழியினை இந்நாடு கடைப்பிடித்து ஒழுகுமாயின் தானும் விடுதலை பெற்றுப் பிறநாட்டினருக்கும் ஞான ஒளியைத் தரும்."

'மக்களுக்கு தொண்டு செய்வதே உன்னதமான மதம்' என்ற கருத்தையே அடிகளார் தமது சொல் லிலும், செயலிலும் எழுத்திலும் உண்மைப்படுத்தி வாழ்ந்தாரென்பது மிகையான கூற்றல்ல.

□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'நாம் கம்பனுடைய வழித்தோன்றல்கள்..'

அடிகளார் என்றைக்கும் யாருக்கும் அஞ்சிய தில்லை. தமக்குச் சரியென்றுபட்ட கருத்தை அஞ்சாமல் எந்த இடத்திலும் எடுத்துரைக்கிற இயல்பு அவரின் சிறப்புமிகு கம்பீரம். 'உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின் வாக்கினில் ஒளியுண்டாகும்' அடிகள் வாழ்வும் வாக்கும் ஒன்றாயிருந்தன.

1933ஆம் ஆண்டிலே அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பட்டமளிப்பு விழா நடைபெற்றது. அப்போது கவர்னராயிருந்த சேர். ஜோர்ஜ் பிரடரிக் ஸ்டான்லி பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த பேராசிரியர்களின் வீடுகளிலும் ஆங்கில ஏகாதிபத்தியத்தின் யூனியன் ஜாக் கொடி பறந்து கொண்டிருந்தது. ஆனால் அடிகளார் வீட்டில் மட்டும் காங்கிரஸ் கொடி பட்டொளி வீசிப் பறந்து கொண்டிருந்தது.

கவர்னர் வரும்முன் அடிகளாரின் வீடு பலத்த தேடுதலுக்குள்ளாயிற்று. அடிகளார் காவலர்களால் விசாரிக்கப்பட்டார். அதற்கு அடிகளார் புன்னகை மாறாத முகத்தோடு பதில் சொல்லிக் கொண்டிருந்தார். ஆனால் காங்கிரஸ் கொடியை அவர் இறக்கவில்லை. அதனால் ஏற்படக்கூடிய எந்த விளைவையும் அவர் சந்திக்கத் தயாராக இருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடையறாத முயற்சி மனிதனை மேம்படுத்தும் என்பதை அடிகளார் உறுதியாக நம்பினார். அதைத் தமது வாழ்விலும் நடைமுறைப்படுத்திக் காட்டினார். அவர் 'தவம்' பற்றிப் பின்வருமாறு கூறுகிறார் :

> 'கருதிய பொருளெல்லாவற்றையும் எதனாற் பெறலாம்? தவத்தினாற் பெறலாம். இடையறாத முயற்சியே தவமெனப்படுவது. வேண்டிய பொருள் அனைத்தையும் தருதலால் முயற்சியானது காமதேனு, கற்பகதரு, சிந்தாமணியென்னும் இந்திரச் செல்வங்களை நிகர்த்தது.'

'பிரபுத்தபாரதா'வில் அடிகளார் ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்தபோது முதுதமிழ்ப் புலவர் நல்லதம்பிக்கு ஒரு கடிதம் எழுதினார். தனிப்பட்ட முறையில் எழுதப்பட்ட அக்கடிதம், அடிகளாரின் இயல்புகளை மிகையின்றித் தெரிவிக்கின்றது.

> ''...நீங்கள் எந்நாளும் தமிழ்த் தொண்டு புரிய வேண்டும். கூழுணவுதான் கிடைத்தாலும் தமிழ்த் தாயின் அருளெனக் கருதி ஏற்றுக் கொண்டு விரிந்த முறையிலே தொண்டாற்ற வேண்டும். எனது வாழ்க்கையில் பொருள் வருவாய் பெரிதாக விருந்த உயர்ந்த உத்தியோகங்கள் பலவற்றை ஏற்று நடத்தினேன். ஒன்றுக்காவது கேள்விக் கடிதமோ பிறருடைய நற்சான்றோ நான் விடுத்தது கிடையாது.
>
> ''இருக்குமிடந்தேடி என்பசிக்கே யன்னம்
> உருக்கமுடன் கொண்டுவந்தா லுண்பேன்."
>
> என்றபடி என் பின்னின்று பன்முறை விரும்பி யழைத்த இடங்களையே நான் நாடினேன். செட்டி நாட்டரசர் தாமும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துக்கு வரவேண்டும் என்பதாக என்னிடம்

வந்து என்னைக் கேட்ட பின்புதான் அவரது கேள்விக்கு நான் ஒருவாறாக இயைந்தேன். தொண்டு புரிவதையே குறிக்கோளாகக் கொண்டு இரவு பகல் ஓய்வற்றுக்கல்வியைப் பெருக்கிப் பொதுக் கழகங்களில் விரிவுரையாற்றுதல், நூலெழு துதல், திங்கள் வெளியீடுகளிலே ஆராய்ச்சி முடிவு களை வெளியிடுதல் என்றித்தகைய தமிழ்த் தொண்டுகளைச் செய்துவந்தால் வேண்டிய உயரிட மெல்லாம் தானாகவே வரும். வராவிட்டாலும் குறைவொன்றுமில்லை, உடுக்க நான்கு முழத் துணியும் உண்ண அளவான அன்னங்கறியும் பெரி யோருடைய கூட்டுறவுமே நமக்கு இவ்வாழ்க்கை யில் வேண்டற்பால. தமிழ்ப்புலவராகிய நாம் கம்பனுடைய வழித்தோன்றல்களென்பதையறிய வேண்டும். அவனைப்போல நாமும் மன்னன் முன்னிலையிலே ஏமாப்போடு நின்று,

''மன்னவனும் நீயோ வளநாடு முன்னதோ
உன்னையறிந்தோ தமிழை ஓதினேன்''

என்று துணிவாகச் சொல்லவேண்டும். ... துறவி யாகிய நான் பிறரையிரந்தது கிடையாது. தொழி லினால் வந்த ஊதியத்தை நான் சிறிது துய்த்து எஞ்சியதைப் பொதுப்பணிக்கு ஈந்தேன். பிரபுத்த பாரதத்தில் வருவாயுண்டு. அவ்வருவாயில் ஒரு சிறிது ஆச்சிரமத்திலே எனது உணவுச் செலவுக்குக் கொடுத்துவிட்டு மிகுதியைப் பொதுப்பணிக்குக் கொடுக்கிறேன். உணவையே மறந்திருக்கக்கூடிய நிலை வந்தாற் பெரிதுதான்"

அடிகளார் என்றைக்கும் தமக்கென்று எதையும் வைத்திருந்ததில்லை. சிவானந்தா வித்தியாலயத்தில் பணிபுரிந்தபோது கிடைத்த வேதனத்திலும், தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவுச் செலவை மட்டும் எடுத்துக்கொண்டு மிகுதியை அப்படியே வித்தியாலய வளர்ச்சிக்காகவே செல விட்டார்.

மக்களுக்கு ஆற்றுகின்ற பணியும், தமிழ்மொழியின் சீர்மைக்கு உழைக்கிற ஆவலுமே அவருக்கு முக்கியமா யிருந்தன. அவர் தமது வாழ்வின் லட்சியத்தை மட்டுமே முன்னிலைப்படுத்தினார், ஆனால் வெகு தன்னடக்கமாக.

இலங்கை சென்று வந்த கல்கி, விபுலானந்தரைப் பற்றி வியந்து எழுதியிருக்கிறார். 'ஐம்பதாயிரம் ரூபா, தங்கநகைகளோடு எத்தனையோ பேர் விபுலானந் தருக்கு பெண்கொடுக்க முனைந்தனர். ஆனால் அவரோ ஞானத்தைத் விடப்பெரிய செல்வம் இல்லை யென்று தீர்மானமாகவே சொல்லிவிட்டார்' இது விபுலானந்தர் இளைஞராயிருக்கையில் கல்கி எழுதிய தகவலின் சாராம்சம், பி. ஸ்ரீ.யும் 'நான் கண்ட தமிழ் மணி'கள் என்ற நூலில் இதனைத் தெரிவிக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவியல் - தமிழால் முடியும்!

விபுலானந்தர் ஒரு இலண்டன் பல்கலைக்கழக அறிவியல் பட்டதாரி. வேதியியல், இயற்பியல் கணிதம் ஆகிய துறைகள் இளவயதில் இருந்தே அவரைக் கவர்ந்தவை. இத்துறைகளைத்தான் அவர் ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் மாணவர்களுக்கு பல்லாண்டுகளாய் போதித்தார். அதனால் மாணவர் உலகிலும், ஆசிரியர்கள் நடுவிலும் தலைசிறந்த ஆசிரியராய் இவர் பேர்பெற்றார்.

இவர் ஒரு பன்மொழிப் புலவர். ஆங்கிலம், சமஸ்கிருதம், லத்தீன், கிரேக்கம், அரபு, வங்கம், பாளி, சிங்களம் ஆகிய மொழிகளைக் கசடறக் கற்றுத்தேர்ந்தவர். இம்மொழிகளில் வளர்ச்சியடைந்த அறிவியற் கல்வியையும், அறிவியல்மொழியையும் கண்டு வியப்பும் பெருமிதமும் அடைந்தவர். இத்தகைய நிலை தமிழுக்கும் ஏற்படவேண்டுமென்பது அவரது பேரவாவாகவே இருந்தது.

அறிவியலை முற்றுமுழுதாக தமிழிலே கொண்டுவர முடியும் என்பது அடிகளார் நம்பிக்கை. ஆயினும் இது வெற்று நம்பிக்கையில்லை. ஆதாரபலம் நிறைந்த நம்பிக்கை. அவரது கல்வித்திறனும், அனுபவமும் அவருக்கு இத்தகைய எண்ணத்தை ஏற்படவைத்தன. இன்னொரு விதத்தில் பார்த்தால் அவரது அறிவியல் அறிவே, அவர் தமது 'யாழ் நூலை' எழுதவும் ஆயிரம் ஆண்டுகளாய் வழக்கற்றுப் போயிருந்த யாழை உருவாக்கவும் வழி வகுத்தது என்று கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1920ஆம் ஆண்டில் அவர் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் தலைமையாசிரியரானார். அவரே அறிவியல் துறைகளையும் மாணவர்க்குப் போதித்தார். 'அறிவியல் என்பது புத்தகத்தின் பக்கங்களுள் அமைவதல்ல. அது சோதனை முறைகளாலும், பிரயோக வழிகளாலும் நிரூபணமாகிற மறுத்துரைக்க முடியாதசாஸ்திரம், என்ற கருத்தைக்கூறி முழுமையும், நவீனத்துவமும் வாய்ந்த அறிவியல் ஆய்வு கூடத்தை அக்கல்லூரியிலே அடிகளார் உருவாக்கினார். பின்னர் அவர் பணியாற்றிய ஒவ்வொரு கல்லூரியிலும் அறிவியல் பயிற்றுவதற்கான ஆய்வுகூடத்தை அமைப்பதில் அவர் முன்னுரிமை எடுத்துக்கொண்டார்.

அடிகளார் ஆசிரியராகப் பணிபுரிந்த காலத்தில் மேற்றிசையில் எத்தனையோ புதுப்புனைவுகளும், கண்டுபிடிப்புக்களும் அறிவியல் துறையிலே நிகழ்ந்து கொண்டிருந்தன. அடிகளார் அறிவியல் பிரியராகவும், ஆங்கிலம், தமிழ் ஆகிய இருமொழிகளிலும் வெளியான, 'வேதாந்தகேசரி' 'பிரபுத்த பாரத', 'ஸ்ரீ இராமகிருஷ்ணவிஜயம்' ஆகிய இதழ்களின் ஆசிரியராக இருந்தமையினாலும் இந்த அறிவியல் அற்புதங்களை உடனுடனே அறிய நேர்ந்தது. இதே வேளையிலே தான் மகாகவி சுப்பிரமணிய பாரதியார் (1882 - 1921) 'மெத்த வளருது மேற்கே அந்த மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை. 'சென்றிடுவீர் எட்டுத்திக்கும் கலைச் செல்வங்கள்யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்' என்று தமிழர்களைப்பார்த்துச் சொல்லிக் கொண்டிருந்தார். மகாகவி பாரதியோடு ஒத்த கருத்து விபுலானந்த அடிகளுக்கு இருந்தமையினால்தான் 1920ஆம் ஆண்டுகளில் இருந்தே அவரை ஒரு பெரும் புலவராகவும், தேசாபிமானியாகவும் அடிகளார் ஏற்று பாரதி புகழ் பாடி இலங்கையில் அவர் தம் கவிகளைப் பரப்பினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிகளார் காலத்தில் அறிவியல் துறையில் நிறையவே புதுமைகள் நிகழ்ந்தன. லோர்ட் கெல்வின், வில்லியம் தொம்சன் (1824-1907) வில்லியம் குறூக்ஸ் (1832 – 1919) மைக்கல்சன் (1852 - 1931) ஜே. ஜே. தொம்சன் (1856 - 1940) மாக்ஸ் பிளாங் (1852 - 1947) ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் (1879 - 1955) ஜோசப்லிஸ்டர் (1827-1912) அலெக்சாண்டர் பிளேமிங் (1881 - 1955) ஜோசப்வில்சன் சுவான் (1828 - 1914) மேரிகியூரி (1867 - 1934) அகஸ்டி (1862-1954), லூயிஸ் (1864-1948), அலெக்சாண்டர் கிரகாம்பெல் (1849 - 1936) வில்பர் (1867 - 1912) ஆர்வல் (1871 - 1948) சகோதரர்கள், மார்க்கோனி (1874 - 1937) ஆகிய மருத்துவ, பொறியியல், இயற்பியல், வேதியியல் துறை மேதைகள் அற்புதமான கண்டுபிடிப்புகளையும் புதுப்புனைவுகளையும் ஏற்படுத்தினர். எக்ஸ்ரே, ஒளிவேகம், திரைப்படம், புகைப்படம், தொலைபேசி, பென்சுலின், விமானம், வானொலி என்பனவற்றையும் வேறு பல புதுமைகளையும் மேலே கூறிய அறிவியலாளர்கள் சாதித்தனர். அறிவுதேடுவதில் ஆர்வங் கொண்ட அடிகளாருக்கு இச் செய்திகள் யாவும் தெரிந்திருந்தன. இவையாவற்றையும் தமிழ் மொழிக்கு கொண்டுவரவேண்டும் என்ற ஆர்வம் அவரிடம் தலையெடுத்தது. அவர் எழுதுகிறார்:

> ''பிறமொழி மாந்தரிடமிருந்து ஒன்றும் பெறலாகா தென்று வாதிப்பாரொரு சாரர். மேலை நாட்டாரது 'ஸயன்ஸ்' எம்மிடமிருந்தது, அழிந்து போயிற்று என்பர். அங்ஙனமாயின் அதனைப் புதிதாக ஆக்கிக் கொள்வது அவசியந்தானே என்போம். தொல்காப்பியனாரையும் அவரனைய பெரியோரையும் ஆசிரியராகக் கொண்ட நாம் ஹக்ஸ்லி, டார்வின், தொம்சன், கல்வின் முதலியோரை ஆசிரியராகக் கொள்ளுவமோ வெனின் அறிவுடையோரைச் சாதி சமய பேதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராது ஏற்றுக் கொள்ளுதல் கடனென்போம். அங்ஙன மன்றியும், இந்நூல் இயற்கைப் பொருளுணர்ச்சியாகிய பிரயோக விஞ்ஞானத்தின் பாலதாதலின் அவ்விஞ்ஞானத்தைப் பெறுவதற்குரிய வாயிலாக நின்ற மெய், வாய், கண், மூக்கு, செவி, மனம் என்பவற்றாற் புலங்கொளற் பாலது. இவ்வாராய்ச்சியினாற் பெறப்படும் முடிவுகளின் உண்மையை நிச்சயித்தற்குக் காட்சியளவையுங் கருத்தளவையும் அவற்றோடு சார்ந்து நின்ற சம்பவ வளவையும் வேண்டப்படுவவன்றி ஆகம வளவை வேண்டப்படுவ தொன்றல்ல என்பாம். கோட்டு நீறும் மஞ்சளுங் கூடியவழிச் செந்நிறம் பிறக்குமென்று சொன்னானொருவன், அவனுரையின் உண்மையை யாராய்வதற்கு அவனது குலங்கல்வி முதலியவற்றை விசாரித்தன மேற்கொள்ளாது கோட்டுநீற்றையும் மஞ்சளையுந் தருவித்து ஒருங்குகூட்டிச் செந்நிறம் பிறக்கின்றதா என்பதைக் காட்சியளவை கொண்டு நிச்சயித்தலே மரபாகும். ஆதலினால், இவ்வாராய்ச்சியினாலே வரும் பயனை முழுதுமடைய விரும்புவோர் குறிக்கப்பட்ட பொருள்களையுங் கருவிகளையுஞ் சேகரித்து விவரிக்கப்பட்டிருக்கிற முறைப்படி செய்கை செய்து அவ்வழிப்பெற்ற முடிவுகளை வேண்டிய வழி அநுமானித்து உண்மையை யறிந்து கொள்ளுதல் மரபாகும். ஐம்பூதத்தைப்பற்றிய அறிவு எம்மிடத் துள்ள அளவிற் போதாதோ விரித்துரைக்க வேண்டுமோ வெனில் வேண்டும் என்போம். பஞ்சபூத வியற்கையை நுணுகவாராய்ந்த வலிமையினாலன்றோ மேலை நாட்டார் நிலமிசை விரைந்து செல்லும் எந்திரவூர்திகளையும், நீர்மிசை மிதந்து செல்வனவும் திரையெறி கடலினுட் குளித்துச் செல்வனவுமாகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலவகை இருப்புக்கலங்களையும், தீயின்வேகத் தாலுந்தப்பட்டு வளிமேற்கிளந்து செல்லும் வானவூர்திகளையும், விசும்பு ஆறாக மின்னி யக்கமே தூதுவனாகச் செய்தியனுப்பும் மார்க்கங் களையும் அறிந்திருக்கிறார்கள். நமக்கு இனியாரது உருவப்படத்தை நாம் பார்த்து இன்புறுதற்கும், இன்னிசையோடு பாடுவாரது கீதங்களை அவர் கழிந்த பிறகும் நாம் கேட்டின்புறுதற்கும், தூரத்தில் நடந்த செய்திகளை நடந்தவாறே நாம் கண்டு இன்புறுதற்கும் பிறநாட்டுச் சென்றிருக்கும் அன்பு டையாரோடு வசனித் தின்புறுதற்கும். கருவியாக வமைந்த படிமக்கருவி, பாடற்கருவி, நடன விளக்கு, வாய்த்தந்தி முதலியன ஐம்பெரும்பூதத் தியற்கையை யுணர்ந்த அறிஞரால் ஆக்கப்பட்டன வாமன்றோ. அன்றியும், பகைவராவார் நாட்டி னுட்புகாது அரண்செய்து காத்தற்குப் பயன்படு வனவும் 'யவனரியற்றிய பலவகைப் பொறி' என நம்முன்னோராற் குறிக்கப்பட்டனவுமாகிய யந்திரங்களை யமைத்தற்குங் கருவியாய் நின்றது ஐம்பூத ஆராய்ச்சி யாகும். மேற்குறித்த கருவி களுட் படிமக்கருவி, நடன விளக்கு இவற்றின மைப்பும் தூரதரிசனி, அணு தரிசினி. நிறதரிசனி என்பவற்றினமைப்பும் இவ்வாராய்ச்சி ஒளியியலுட் கூறப்படும். பாடற்கருவியினமைப்பு இசையியலுட் கூறப்படும்; வாய்த்தந்தியின் அமைப்பு மின்னியக் கவியலுட் கூறப்படும்; எந்திரவூர்தியமைப்பு அனலியலுட் கூறப்படும்.''

தன் காலத்து வாழ்ந்த தொம்சன், கல்வினையும், தன்முன்னே வாழ்ந்த சார்லஸ் டார்வின் (1809-1882), ஹக்ஸ்லியையும் ஆசிரியராக ஏற்றுக் கொள்கிறார் அடிகளார். தன் காலத்தில் உண்டான அறிவியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமைகளையும் ஆர்வத்தோடும் பெருமிதத்தோடும் அவர் வரவேற்கிறார்.

'அறிவுச் செல்வத்தை தமிழ்மொழி பெறுவதற்காவன செய்தல் சிறந்த தமிழ்த் தொண்டாகும்' என்பதே அடிகளாரின் உறுதியான கருத்து. அறிவியல் தமிழை ஆக்கும்விதம் குறித்து அவர் நிறையவே முன்னுதாரணங்கள், ஆக்கங்கள் வழங்கியிருக்கிறார். அறிவியலை உடனேயே தமிழில் கொண்டுவர அவாவுற்ற அடிகளார், அதன்முதற்பணியாகிய தமிழில் கலைச்சொற்களை ஆக்கவேண்டுமென்ற முயற்சியில் அறிஞர் துணையோடு ஈடுபட்டார்.

1922க்குப் பின்னர் சென்னையில் வாழ்ந்த பல அறிஞர்களின் ஒத்துழைப்போடு 'தமிழர் கல்விச்சங்கம்' அமைக்கப்பட்டது. இதன் முக்கிய நோக்கம் ஆங்கிலத்தில் உள்ள அறிவியற்கருத்துக்களைத் தமிழில் எல்லோருக்கும் புரியும்படி கொண்டுவரவேண்டும் என்பதுதான். இந்தச் சங்கத்தில் அடிகளார் பல அரிய அறிவியல் சொற்பொழிவுகளை ஆற்றியிருக்கின்றார். 1936இல் பச்சையப்பன் கல்லூரியில் கலைச் சொல்லாக்கம் பற்றிய மகாநாடு நடைபெற்றது. அறிவியலைத் தமிழில் கொண்டுவருவது பற்றிய பலதீர்க்கமான கருத்துக்களை அடிகளார் இங்கே வெளியிட்டார்.

மேனாட்டு அறிவியலை தமிழிற்கு கொண்டுவருவதற்கான அடிகளின் சிந்தனை இதுதான்; அறிவியலின் பல்துறைகளுக்கான சொற்களை முதலில் அத்துறை தொடர்பான பழந்தமிழ் நூல்களிலிருந்து எடுத்துக் கொள்ளலாம். அப்படியில்லாத சொற்களை மேனாட்டிலிருந்து பெற்று தமிழ் மயப்படுத்துதல் வேண்டும். இது முடியாதபட்சத்தில் அம்மொழிச்சொற்களை அப்படியே கையாள வேண்டும், காலப்போக்கில் இம்முயற்சியினால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழில் வலிமையும் தெளிவும் வாய்ந்த 'அறிவியல் மொழி' உருவாகிவிடும்.

அவர் கூறுகிறார்:

> "ஆட்சியும் குணமும் காரணமாகக் கலைச் சொற்கள் நாளடைவில் செம்மையுறுந்தன்மையின, அங்ஙனமாதலின் வடமொழி, தென்மொழி, மேற்றிசைமொழியென்னும் முந்நீரமொழிகளும் இற்றைநாளிலே அறிவுப் பெருங்கடலிலே கலத் தலை யாமெல்லாம் விருப்போடு ஏற்றுக் கொள்வோமாக. தமிழ்நாடு தனக்குரிய ஆக்கத்தினைப் பெறுகிற நன்னாளிலே அறிவுக்கடலிலிருந்து எழப் போகின்ற தமிழ்முகிலானது புன்மையாகிய உவர்த் தன்மையினை முழுதும். நீக்கித் தூய தமிழ்நீரினை நாடெங்கும் பொழியக் காண்போம்... மூடநம் பிக்கையோடு கூடிய பௌராணிக மனப்பான்மை யென்னும் இருள் அகல்கின்றது. அறிவுக்கதிரோ னுடைய இளவெயிலானது நம் உள்ளத்துக்கு உவகையும் உடலத்துக்குப் புதிய வலிமையையும் தருகின்றது. புத்தம் புதிய நூல்கள் பலவற்றைப் புனைந்து தமிழன்னையின் திருவடிகளிலே காணிக் கையாக வைப்போமாக."

தமிழில் அறிவியலை எப்படி எழுதலாம் என்ற விதம் பற்றி அடிகளார் விளக்கும் பொருட்டு 'விஞ்ஞான தீபம்' என்ற ஆராய்ச்சி — அறிவியல் நெடுங்கட்டுரை நூல் ஒன்றை எழுதினார். அறிவியல் துறைகளை எவ்விதம் தமிழில் எழுதலாம் என்ற ஒழுங் கமைப்பினை 'விஞ்ஞான தீபம்' நுட்பமாகக் காட்டு கின்றது. தனது முயற்சியை அடிகளார் 'விஞ்ஞான தீப'த்து நூன்முகத்தில் பின்வருமாறு குறிக்கின்றார்:

> "ஸயன்ஸ், இல்லாதது தமிழ்மாதுக்கு ஒரு குறையென்று பலகால் சொல்லிக் கொள்ளுகிற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கில விற்பன்னரது பழிமொழி இதனோடு தீர்ந்துவிடக் கருணை செய்யுமாறு சங்கப்புலவர் நாவினின்று நடம்புரியும் தண்டமிழ்த்தாயை இளமை வனப்பென்றுமகலா இன்றமிழ்த் தெய் வத்தை மனமொழி மெய்களால் வணங்கி இந்நூன் முகத்தை முடிப்போம்."

அறிவியலிலும் கணிதத்திலும் வல்லவரான ஐன்ஸ்டீனின் சார்புநிலைத்தத்துவம் இருபதாம் நூற் றாண்டின் தொடக்கத்தில் அறிவியல் உலகில் பலத்த விவாதத்தை உருவாக்கிற்று. அடிகளார் தாம் நடத்திய ஆங்கில இதழான 'வேதாந்தகேசரி'யில், 'THE PRINCIPLE OF RELATIVITY' என்னும் தலைப்பில் ஜன்ஸ்டீனின் தத்துவம் பற்றி விரிவாகவே எழுதினார். ஆன்மீகவாதிகள் இலகுவில் ஒத்துக் கொள்ள மறுத்த தத்துவத்தை அடிகளார் ஒத்துக் கொண்டமை பற்றி அவ்வேளையிலே பலமுணுமுணுப்புகள் எழுந்ததும் குறிப்பிடத்தக்கது.

'தமிழருக்கு ஒரு தமிழ்ப்பல்கலைக் கழகம் நிறுவப் படவேண்டுமென்பது அடிகளின் கனவு, "தமிழ்ப்பல் கலைக் கழகம் நமது சாதியாருடைய வாழ்க்கை முன் னேற்றத்துக்கு இன்றியமையாத சாதனங்களில் ஒன்று" என்று குறிப்பிட்ட அடிகளார், "கணிதம், பௌதீகம், தாவர நூல், இரசாயன நூல், இலக்கணம், தருக்கம், காவிய நாடக அலங்காரம், தேசசரித்திரம், சட்டநூல், மருத்துவம் என்றின்னவற்றை தமிழ்ப் பல்கலைக்கழகம் தமது அங்கமாய்க் கொள்ள வேண்டும்" என்று மேலும் கூறுகிறார். ஆனால் இவை தமிழில் பயிற்றப்பட வேண்டும் என்கிறார்.

தமிழில் அறிவியல் மொழியினை உருவாக்குவது பற்றிய சிந்தனை அடிகளார் மனதில் ஓயாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ந்து வந்திருக்கிறது. மேற்றிசைச் செல்வங்களைத் தமிழில் ஆக்குவதற்கு அவருக்கு வங்காளப் பல்கலைக் கழகத்தின் தாய்மொழிப் பயிற்சி ஆர்வமும், தாகூரின் தாய் மொழி இலக்கிய வெளிப்பாடும் உந்துதல் அளித்திருக்கிறது.

தன்கால அறிஞர்களோடு அறிவியலை தமிழில் கொண்டு வருவது பற்றி அவர் எத்தனையோ முறை பேசி விவாதித்திருக்கிறார். மறைமலை அடிகளோடு சேர்ந்து விபுலானந்தர் ஒரு அகராதியை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுமிருக்கிறார். அத்தியந்தமாய்ப் பழகியிருக்கிறார். ஆனால் அறிவியல் தமிழை உருவாக்குவதற்கு அடிகள் தனித்தமிழ் நடையை ஏற்கவில்லை.

வங்காளமும் கர்நாடகமும் கேரளமும் தமது பல்கலைக்கழகங்களை மொழிவழி அடிப்படையில் அமைத்துக் கொள்ள முயற்சிகள் எடுப்பதை தன் காலத்திலேயே கண்டு அறிகின்றார் அடிகளார். அவர் களின் முயற்சியும் ஊக்கமும் அடிகளாரது சிந்தனையை வலுப்படுத்துகிறது.

அறிவியல் மொழி ஆக்கமென்பது, அறிவியல் வளர்ச்சி வேகமுற்று வரும் மேற்றிசை நாடுகளில் அவற்றின் தாய்மொழியிலேயே நடைபெற்று வருவதை புதிது புதிதான அறிவியல் கண்டுபிடிப்புகளின் வாயி லாக ஆர்வத்தோடு அறிந்து கொள்கிறார் அடிகளார்.

சீனா, யப்பான் முதலிய கீழ்த்திசை நாடுகள் இந்தியாவைப் போலவே பண்டை நாளிலிருந்து அறிவியல், மருத்துவ, வானியல் துறையில் மேன்மை யுற்றிருந்த வரலாற்றை அடிகளார் மீண்டும் மீண்டும் அறிவுறுத்துகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவியலைத் தமிழில் மொழிபெயர்ப்பதற்கு அடிகளார் தகுதியும் திறனுங் கொண்ட முன்னோடி என்பதனை அவர் மொழிபெயர்ப்பு முறை பற்றி எழுதிய கட்டுரை உறுதிசெய்கின்றன.

கீழே வரும் அவரது மொழிபெயர்ப்பு முறை பற்றிய சிந்தனைகள், இன்றைக்கும் பரிசீலனைக்கும் பின்பற்றுதலுக்கும் உரியதாக அமைந்திருக்கின்றன.

## மொழிபெயர்ப்பு முறை

ஒரு மொழியிலுள்ள நூலினை மற்றொரு மொழியிற் பெயர்த்து எழுதுமிடத்து முதனூற் பொருள், நடை இயைபு முதலியவற்றை மாறுபடவிடாது மொழி பெயர்ப்பு நூலினுள்ளுங் காட்டுதல்வேண்டும், முதனூல் செய்யுள் நடையினதாயின், மொழிபெயர்ப்பு நூலுஞ் செய்யுள் நடையினதாகித் தக்க யாப்பினாற் பொருத்த முற்று நிற்க வேண்டும். விஞ்ஞானநூல் உண்மை நிச்சயிக்கிற அளவை நூல் ஆதலால் மொழிபெயர்ப்பு நூலுந் திரிபில்லாத பொருளினதாக முதனூற் கருத்தோடு மாறு கொள்ளாததாக விருத்தல்வேண்டும். மொழிபெயர்ப்பு முறையை ஆராய்வதற்குமுன் தமிழ் மொழிச் சொற்களின் சிறப்பியல்பையும், ஆற்றலினையும் ஆராய்வாம்.

தனித்தமிழ்மொழிகள் ஒரெழுத்தாலும் ஈரெழுத்தாலும் ஆகிய மணிபோன்ற சிறிய மொழிகளாம். திருமுருகாற்றுப்படை யகவலை யுற்று நோக்குக. பின்னுந் தமிழ் மொழியில் ஒற்றுமையும் வேற்றுமையும் பொருந்திய இணைச்சொற்கள் ஒத்த எதுகையின. அறம், மறம்; அன்பு, வன்பு; இன்பம், துன்பம் என்றாற்போல. மேலுந் தமிழ்மொழியில் ஒரே தொடரான சொற்கள் ஒரே விகுதியுடையன; செம்மை, கருமை என்னும் பண்புப் பெயர்களை நோக்குக. பிறபாஷைகளிலிருந்து தமிழ் மொழிக்குச் சேர்க்கப்பட்டச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்கள் இயற்றமிழ்ச் சொற்களே போன்று முதனிலை, இடைநிலை, ஈற்றுநிலை, முதலிய யாவும் தமிழிலக்கண வரம்பு கடவாது பொருந்த நிற்பன. புதிய மொழி களை ஆக்கிக்கொள்ளுமிடத்தும், திசைச்சொற்களை எடுத்தாளுமிடத்தும் மேற்காட்டிய குறிப்புக்களைக் கைக் கொண்டு சுருக்கம், விளக்கம், தெளிவு, தமிழுருவம் இவை பொருந்த மொழிகளை ஆக்கிக் கொள்ளுதல் வேண்டும். தமிழ் மொழியில் ஆட்சியிலுள்ள சொற்களைப் புறக்கணித்தல் கூடாது. ஆதலால் முதற்கண் தமிழ்நூல்களை யாராய்ந்து அவற்றுட் பொதிந்து கிடக்கிற விஞ்ஞான நூன்மொழிகளை யெல்லாம் தெரிந்தெடுத்து அவற்றின் பொருளை நிச்சயம் பண்ணிக்கொள்ளுதல் வேண்டும்.

இங்ஙனம் செய்யில், தமிழ்மொழியில் வைத்திய நூல்கள், தத்துவ நூல்கள், முதலியவற்றுள் மறைந்து கிடக்கிற ஆயிரக்கணக்கான சொற்கள் வழக்குக்கு வரு வனவாம். முன்னாளில் நூலியற்றிய ஆசிரியர் சிலர் மண், நீர், தீ, வளி, வான் என்ற தமிழ் வழக்கிருக்கப் பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்றும்; சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னுந் தமிழ் மொழிகளைப் புறக்கணித்து ஸப்த, ஸ்பரிச, ரூப ரச, கந்தம் என்றும்; நிறுத்தல், நிறைத்தல், விடுத்தல் என்னும் மொழிகளை யாட்சிக்குக் கொண்டுவருதல் தகுதியென்பதை மறந்து கும்பக, பூரக, ரேசகம் என்றும் வழங்கினமையால் வட மொழிகளே வழக்குச் சொற் களாகவும், தனித்தமிழ் மொழிகள் வழக்கில் சொற் களாகவும் ஆய்விட்டன, தமிழ்மொழியில்லாத வழிப் பொருத்தமுள்ள பிறமொழியை ஆளுதல் தகுதியாகும். தமிழ் வழக்கிருப்பின் உள்ள மொழியையே ஆட்சிக்குக் கொண்டுவருதல் வேண்டும். ஆரிய மொழியினும் ஏற்புடையனவற்றையாளுத லிழுக்காகாது! ஆதலாற் பொருணூன்மொழி வரையறை செய்யப் புகுவோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற்கண் தமிழ்மொழி வழக்கிலுள்ள பொருத்தமுள்ள சொற்களைக் கண்டெடுப்பது கடனாகும்.

இனிப் பொருணிச்சயம் பண்ணுவது எவ்வாறு என்பதை ஓர் உதாரணத்தால் விளக்குவாம். தொல்காப்பியனார் உயிர்ப்பொருள்களை வகைப்படுத்தும் வழி.

"ஒன்றறி வதுவே யுற்றறி வதுவே
இரண்டறி வதுவே யதனொடு நாவே
மூன்றறி வதுவே யவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே யவற்றொடு கண்ணே
யைந்தறி வதுவே யவற்றொடு செவியே
யாறறி வதுவே யவற்றொடு மனனே
நேரிதினுணர்ந்தோர் நெறிப்படுத் தினரே"

எனவும்,

"மாவு மாக்களும் ஐயறி வினவே
பிறவுமுளவே யக்கிளைப் பிறப்பே"

"மக்க டாமே யாறறி வுயிரே
பிறவு முளவே யக்கிளைப் பிறப்பே"

எனவும் உரைத்த சூத்திரங்களுக்கு உரைகாணும் வழி, 'மனம்' என்னும் சொல்லினது பொருளை நோக்குதும்.

ஆசிரியர் மாக்களென்றும், மக்களென்றும் வேறுபாடு செய்துகொண்டது முதற்கண் னோக்கற்பாலது. இனிப் படிப்படியாக ஒன்று முதல் ஆறுவரையும் அறிவுக்குரிய வாயில்களை வகைப்படுத்திச் சொல்லினாரன்றோ? அங்ஙனஞ் சொல்லிய வியல்பை யாராயுமிடத்து நான்கறிவுள்ள நண்டுக்கு இல்லாததாகிய செவியென்னும் வாயில் ஐயறிவுள்ள குரங்குக்குண்டு. ஏனைய நான்கு வாயிலும் அடைப்புண்டிருக்கும் பொழுதும் குரங்கு ஐந்தாவது வாயிலாகிய செவியினால் அறிவைப் பெறும், அங்ஙனமே ஆறறிவுள்ள மக்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய ஐந்து வாயிலும் அடைப்புண்டிருக்கும்பொழுது மனம் என்னும் ஆறாவது வாயிலினால் அறிவினைப் பெறுதற்குரியர். இவ்வறிவும் ஏனைய வாயில்களி னாற் பெறுதல் கூடாத அறிவாயிருத்தல் வேண்டும். நித்திரையிற் காணுகிற கனவினில் கண் முதலிய ஏனைய வாயில்களாற் பெறப்பட்டு நினைப்பிற் பதிந்து கிடந்த தோற்றங்களே மீண்டும் புலப்படுகின்றனவாதலால் அங்ஙனம் பெறுமறிவு ஏனைய வாயில்களாற் பெறாத புது அறிவு ஆகாது. இவ்வாறு முந்திய தோற்றங் களை நினைத்திருக்கும் நினைப்பும், ஒரு தோற்றத் தோடு பிரிதொன்றனை ஒப்பிட்டுப் பார்க்கு மாற்றலும், பயம், உவகை, வெகுளி முதலினவும் விலங்கினங் களுக்கு முண்டு. ஆசிரியன் மனவுணர்வினைத் தனித்த ஒரு வாயிலாகச் சொல்லுதலால் ஐம்பொறியுணர்வுக்கு நிலைக்களனாக விருப்பது மனம் என்று வரைவிலக் கணஞ் செய்துகொண்ட பிற்காலத்தார் 'மனம்' என்னும் மொழிக்குக் கொண்ட கருத்தும் தம்முள் வேறுபாடுடை யனவாம்.

இங்ஙனம் ஆராயுங்கால் 'மனம்' என்னும் மொழியை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும்போது ஆசிரியர் தொல்காப்பியனார் கொண்ட கருத்தினை யுள்ளவாறுணர்த்துவதாயின் 'Intiutive faculty' என மொழி பெயர்ப்பது ஒருவாறு தக்கதாகும். ஏனைய ஐந்து வாயிலும் 'Perceptive faculties' என அடங்குவ.

மேற்காட்டிய குறிப்புக்களுக்கியைய இரசாயன நூலுக்குரியசில மொழிகளை ஆக்கிக்கொண்ட மரபினைச் சுருக்கமாகச் சொல்லுவாம். இரசம்-பாதரசம்; அயனம்-பிறப்பு. முன்னாளிற் பொன்னைப் பிறப்பிக்கலாமென முயன்ற இந்திய, அராபிய, ஐரோப்பிய இரசவாதிகள் அது இரசத்தைக் கட்டுதலினாலாகுமெனப் பல பொருள்களை ஒருங்கு சேர்த்துக் காய்ச்சுவதுங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலப்பதுஞ் செய்ததனாற் கண்ட முடிவுகள் பின்னாளிற் றொகுத்து வகுத்து நூலாயினமையால் அந்நூல் இரசாயன நூல் எனப்பட்டது. 'Elements' 'Mixtures' 'Compounds' என்னுஞ் சோற்களை முறையே தனிப் பொருள், கலவைப் பொருள் கூட்டப் பொருள் என்று வழங்கலாகும். தனிப் பொருள்கள் எண்பதின் மேற்பட்ட தொகையின. இவற்றுள் தமிழ் வழக்கிலுள்ள பொன் (Gold), வெள்ளி (Silver), செம்பு (Copper), இரும்பு (Iron), ஈயம் (Lead), கரி (Corbon), சுண்ணமூலம் (Calcium) - சுண்ணம் 'சுடு' என்னும் வினையடியி னின்றும் பிறந்தது, வங்கம் (Tin), நாகம் (Zinc); தீமுறுவல் (Phosphorus) - இதனைச் சுருக்க நோக்கி, 'முளி'யென்று வழங்குவாம். ரசம் (Mercury), கந்தகம், சிலை (Sulphur), பாஷாணம், விஷம் (Arsenic) என்பன. ஏனைய தனிப் பொருள்களுக்குப் பெயர் கொள்வதற்கு முன் வைத்திய நூல்களை ஆராய்ந்து பெறக்கூடிய சொற்களைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். ஒவ்வொரு தனிப்பொருளுக்கும் ஒவ்வோர் எழுத்து அறிகுறியாய் நிற்றல் நன்று.

ஆதலால் இனி இட்டுக்கொள்ளும் மொழிகள் வேறு வேறு எழுத்துக்களை முதனிலையாகக்கொண்டு நிற்றல் நன்று. சின்னஞ்சிறிய சொற்களை ஆக்கிக்கொள்ளுதல் அழகு, கண்ணிற்றீட்டும் மையிலுள்ள தனிப் பொருளாகிய 'Antimony' என்னும் பதத்தை 'மை' என்பாம். 'நிறம்' என்னும் பொருளின தாகிய யவனமொழித் தாதுவினின்று பிறந்த 'Chlorine' என்னும் பதத்தை 'நிறம்' என்பாம். களிமண்ணினின்று பெறும் 'Aluminium' 'தலம்' எனப்படும். பாரத்தைக் குறிக்கும் யவனமொழித் தாதுவினின்றும் பிறந்த 'Barium' 'பாரம்' எனப்படும். சூரியனைக் குறிக்கும் யவன மொழித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாதுவினின்று பிறந்த 'Helium' என்பதனை 'எல்' என்பாம்.- Barium. Helium என்பவற்றுக்கும் 'பாரம்', 'எல்' என்பவற்றுக்கும் பொருட் பொருத்தத்தோடு ஒலிப்பொருத்தமுமுண்டு— லவண மூலமாகிய 'Sodium' என்பதனை 'லவம்' என்பாம். பவனத்திலுள்ள இரண்டு தனிப் பொருள்களாகிய 'Oxygen', 'Nitrogen' என்பன அறிவும், உடலும் போன்றிருத்தலால் முறையே 'மதி', 'சடம்' என்றும், நீரின் மூலப்பொருளாகிய 'Hydrogen' என்பதை நீரைக் குறிக்கும் 'அம்பு' என்னும் மொழியின் பாகமாகிய அம் என்றும் குறியீடு செய்வோம். வைக்கோல் நிறமாகிய 'Fluorine' என்னும் பொருளை 'வை என்பாம். பிறவும் இவ்வாறே. நாம் இட்டுக் கொண்ட பெயர்கள் யாவும் வேறு வேறு முதனிலையை யுடையன. ஆதலின் ஒரு தனிப்பொருளைக் குறிப்பதற்கு ஓர் எழுத்தையே உபயோகித்தல் கூடும்.

இனி, மை, வை, மதி, சடம், நிறம் என்னாது அன்ரிமணி, வ்ளுஒறின், ஆக்சிஜன், நைத்ரஜன், க்ளோறின் என்று ஆரவார மொழிகளாற் சொல்லின் அவை தமிழுமாகாது, ஆங்கிலமு மாகாது, மாணாக்கனுடைய நாவுக்கு இடர் விளைப்பனவாய் முடியும். நீண்ட சொற்களைக் கண்முன் வரவொட்டாது துரத்த வேண்டும். ஹிந்தி, வங்காளியாகிய பாஷைகளில் விஞ்ஞான பரிபாஷை யெழுதியவர்கள் நீண்ட சொற்கள் சிலவற்றை யுபயோகிக்க அவை வழக்குக்கு வந்தில என்னும் முறையீடு நம் செவிக் கெட்டியது. ஆதலால் அழகு பொருந்திய பைந்தமிழிற்சொற்களை யமைக்க விரும்பும் நாமும் சிறிய சொற்களைத் தெரிந்தெடுத்தாள்வோம். சிறிய சொற்களின் ஆற்றலை மேல் வருவனவற்றாலும் உணர்ந்துகொள்ளலாம். 'Oxides' என்னும் வகுப்புப் பொருள்களைப் பொன்மதி (Gold

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Oxide). வெண்மதி (Silver Oxide), செம்மதி (Copper Oxide). கரிமதி, சிலைமதி, வங்கமதி, நாகமதி, ஈயமதி, விஷமதி, முளிமதி, சடமதி என்று இவ்வாறு பெயரிட்டாளுதல் எவ்வளவு அழகாகவிருக்கின்றது. 'Hydrogen' என்பதை 'அம்' என்று குறிபிட்டோமாதலால் (OH) கொண்ட 'Hydroxides' என்னும் பதார்த்தங்களை 'மதியம்' என்னும் விகுதி தந்து வழங்கலாகும். அவை பொன்மதியம், வெண்மதியம், நாகமதியம், வங்கமதியம், தவமதியம், லவமதியம் எனவருவன. பொன்மதியம் என்பதற்குப் பதிலாக வடமொழியும் பிறமொழியுங் கலந்து 'சுவர்ணஹைவராக்சிஜம்' என்றால் அது 'திலகாஷ்டமகிஷ பந்தனம்' போல ஆரவாரச் சொல்லாய் முடியும். 'Hydrogen' என்னும் ஒரு பதார்த்தத்திற்கு மாத்திரம் 'அம்' என்னும் மொழியோடு அகர முதனிலையையேயுடைய 'அணி' என்னும் மொழியையும் உபயோகிப்பின், (Holl) அணி மதியம், (Hel) அணி நிறம் என்றாகும்.

'Acids', 'Alkalis' என்னும் இருவகுப்புப் பொருளையும் முறையே 'காடி', 'காரம்' என வழங்குதல் கூடும், மேற்குறித்த சொற்களைப் பிரயோகித்துக் காட்டுவாம்.

காடியுங் காரமுஞ் சேர்வுழி உப்பும் நீரும் பிறக்கும் என்பது இரசாயன நூன்முடிபு. பெருவழக்காகப் பாவிக்கப்படுகிற காடிகள், கரிக்காடி (Carbonic acid), சிலைக்காடி (Sulphuric acid), சடக்காடி (Nitric acid), நிறக்காடி (Chloric acid). அணிநிறக்காடி (Hydrochloric acid) என்பனவாம். பெருவழக்கிலுள்ள காரங்கள் லவக்காரம் (Na OH). உரக்காரம் (KOH), சுண்ணாக்காரம், ஈயக்காரம் முதலியன.

லமஅ + அநி = லநி + அ$_2$ம.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுங் குறியீட்டினால் விளங்கக்கிடப்பது எதுவென ஆராய்வாம். இக்குறியீட்டை 'லவ்வொன்று மவ்வொன்று அவ்வொன்று உடன் அவ்வொன்று நிய்யொன்று சமம்; நிய்யொன்றுடன் லவ்வொன்று அவ்விரண்டு மவ்வொன்று' என்று வாசிப்பாம். ல = லவம், ம = மதி, அ = அம், அணி, நி = நிறம் ஆதலால் லமவதியமும் அணி நிறமுஞ் சேரின் லவநிறமும் அணிமதியமும் பிறக்குமென்பது பொருள். அதாவது லவக்காரமும் அணிநிறக்காடியுஞ் சேர லவநிறமும் அணிமதியமும் பிறக்குமென்பது. லவநிறம் இரசாயனப் பெயர்; கறியுப்புப் பொதுவழக்கு.

$$சு(ம\ அ)_2 + க\ ம_2 = சு\ கம_3 + அ_2ம$$

என்பதை இங்ஙனமே ஆராயிற் சுண்ணக்காரமுங் கரிக்கரடியுஞ் சேர்வுழி சுண்ணக்கரிமதி (சுண்ணக்கல் பொதுப்பெயர்)யும் நீருமாகும் என்பது பெறப்படும். இங்ஙனம் தமிழ் எழுத்துக்களாற் குறியீடு செய்வதேயன்றி மொழி பெயர்ப்பு நூலினுள் ஆங்கிலமொழியெழுத்துக்களை மேலும் மேலும் இழுத்துக்கொண்டிருப்பது தகுதியாகாது.

ஒளி நூலுக்குரிய சில சொற்களை யாராய்வோம். 'Plane', 'Spherical' என்னும் சொற்களை 'மட்டம்' 'வட்டம்' என்று கொள்வோம், Mirror = கண்ணாடி; பரி பாடலினுள்ளும் 'வான்றுகள் மாசறக் கண்ணடி வயக்கி' என்றார். கண்ணாடியென்னுஞ் சொல்லைப் பொதுவழக்கில் 'Glass' என்பர். இருவேறு பொருளுக்கு ஒரு சொல்லைக் குறியீடு செய்தாளுதல் மலைவுறுதலுக்கு இடமாகுமாதலால் 'Glass' என்பதனைப் 'படிகம்' என்று கொள்வாம். ஆகவே மட்டக்கண்ணாடி (Plane Mirror), மட்டப்படிகம் (Spherical Mirror), மட்டப்படிகம் (Rectangular Prism), முக்கோணப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிகம் (Triangular Prism) பலகோணப்படிகம் (PolyGonal Prism) என வரும் — Poly - பல; Gonos - கோணம். இவை தமிழ்மொழிகள் யவனமொழியிற் சென்று வழங்கியதற்கு உதாரணமாகும். கோணம் என்பது கோடு என்னும் வினையடியினின்று பிறந்தது. வட்டப்படிகம் (Lens), 'Concava' 'Convex' என்னும் மொழிகளை உள்வட்டம், புறவட்டம் என்று கொள்ளுதல் கூடும். 'Ray' என்னும் மொழியைக் கதிர் என்று கொள்ளலாம். Pencil = கதிர்த்திரள்; Converging Pencil = குவிகதிர்த்திரள்; Diverging Pencil = விரிகதிர்த்திரள்; Parallel Pencil = நேர்க்கதிர்த்திரள்; Reflection = கதிரெழுச்சி; Refraction = கதிர்ப்பாய்ச்சல்; Incident Ray = விழுங்கதிர்; Reflected Ray = எழுங்கதிர்; Refracted Ray = பாய்கதிர்; Image = படிமம் (இது படு என்னும் பகுதியிலிருந்து வந்த தமிழ்மொழி; தொல்லாசிரியர் கண்ணாடியைப் படிமக்கலம் என்றதை நோக்குக). Real Image = மெய்ப்படிமம், Virtual Image = பொய்ப்படிமம்; (உருவம் என்னும் சொல்லை Figure என்னும் ஆங்கில மொழியை யொத்ததாகக் கொள்ளலாம்). Focus = மையம்; Centre = நடு என்று இவ்வாறு கொள்ளலாகும்.

பௌதிக சாஸ்திரத்தின் பாலவாகிய ஏனைய சொற்களனைத்தையும் மேற்காட்டிய குறிப்புக்களுக்கமைய ஆக்கிக்கொள்ளுதல் கூடும். தாவர சாஸ்திரத்துக்கு வேண்டிய சொற்கள் பல பத்துப் பாட்டிலொன்றாகிய குறிஞ்சிப்பாட்டிற் செறிந்து கிடக்கின்றன, இரசாயன மொழிகளும், மூலிகைகளின் பெயரும் வைத்திய நூல்களிற் காணப்படுவன; மனநூலுக்குரிய மொழிகள் சித்தாந்த சாஸ்திரங்களிற் காணப்படுவன; இரேகா கணிதத்துக்குரிய மொழிகள் பல நிகண்டின் வடிவு பற்றிய பெயர்த் தொகுதி யுட் காணப்படுவன; வட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழி நூல்களுட் சாங்கியம், வைசேடிகம், நியாயம், யோகம் என்னும் வஸ்து நிச்சய நூல்களுள்ளும் அர்த்த சாஸ்திர நூல்களுள்ளும் வராஹ மிஹிரம் முதலிய வான நூல்களுள்ளும் பல மொழிகள் உள்ளன. தமிழ்மொழி, வடமொழி, பிறமொழி என்னும் முறையிற் சொற் களைத் தேடி யாராய்ந்தமைத்துக் கொள்ளுதல் நல மாகும்.

○ ○

மொழி பெயர்ப்பதற்குரிய முறையைக்கூறிய அடி களார், அப்போது கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய சில நூல்களைப் பற்றியும் கூறுகிறார் :

> ''பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆங்கில மிஷனரிமார் முயற்சியில் வெளியான வீசகணிதம், அங்காதிபாதம், சுகரணவாதம், நியாய சாத்திரம், வானசாத்திரம், உற்பாலனம், கெமிஸ்தம் முதலிய நூல்கள் ஒரு குறித்த மரபு பற்றிச் சொற்களை யமைத்துச் செல்லுகின்றன. அம்மரபு நமக்குப் பயன்படும்''

□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'கவிஞருக்கு உலகெல்லாம் உறவே'

அடிகளாரை இளவயதிலேயே வசீகரித்த கவிஞர்கள் கம்பனும், வள்ளுவனும், இளங்கோவும். இவர்களின் ஆளுமை அடிகள் மேலே பதிந்திருந்தது. நாமெல்லாம் கம்பனின் வாரிசுகள் என்று சொல்வதில் அளவற்ற பெருமிதம் கொண்டவர் அடிகளார். 'யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல் வள்ளுவர் போல் இளங்கோவைப்போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை' என்றார் மகாகவி பாரதியார். அடிகளார் பாரதியார் சொன்னதை அப்படியே ஏற்றுக் கொண்டவர். அது மட்டுமல்ல தம் காலத்து வாழ்ந்த வங்கக் கவிஞரான ரவீந்திரநாத் தாகூரையும் பாரதியாரையும் மகாகவிகளாக ஏற்று, மக்களுக்கு அவர்களின் சிறப்பையும், அவர்கள் கவிதையின் உன்னதத்தையும் எழுத்தாலும் பேச்சாலும் வெளிப்படுத்தியவர் அடிகளார்.

தாகூரின் கவிதை நூலினை அடிகளார் தமிழிலே யாத்துள்ளார். எண்பத்தைந்து செய்யுட்களால் அமைந்த தாகூரின் கவிதை மொழிபெயர்ப்புக்கு அடிகளார் இட்ட தலைப்பு 'பூஞ்சோலை காவலன்'.

அடிகளார் தாகூரை 'கவிசிரேட்டர்' என பெருமிதமுறிய மதிப்போடு அழைக்கின்றார். 'கவி சிரேட்டர் உலகப்பிரசித்தி பெற்றவர்' என அன்புகனிய அழைக்கின்ற அடிகளின் வார்த்தையிலே தாகூர் இலக்கியத்தில் திளைத்த அனுபவம் வெளிப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிகளார் தாகூரின் கவிதை நூல் பற்றி பின்வருமாறு குறிப்பிடுகின்றார்,

> ''பூஞ்சோலைக்காவலன் என்னும் நூலானது அன்பும் அறனும் பொருளாக இன்பந்தரு நீர்மையவாகிய எண்பத்தைந்து செய்யுட்களானியன்று கேட்டார்ப்பிணிக்குத் தகைமையதாய் நிலவுகின்றது. அதனுட் பொதிந்து கிடக்கும் அழகுகள் மிகப்பல...''

இக்கவிதையை மொழிபெயர்த்தபோது அடிகளாருக்கு கலித்தொகைச் செய்யுள் ஞாபகம் வந்துவிடுகிறது. பூஞ்சோலைக்காவலன் இரண்டாம் செய்யுளைத் 'தீம்பால் கறந்த கலமாற்றி' என்னும் கலித்தொகைச் செய்யுளோடு ஒப்பிடுகிறது அடிகளின் மனம்.

தாகூரை மொழி பெயர்த்த இன்னொருவர் மகாகவி பாரதி. அடிகளார் பாரதிமேல் மாறா அன்பும் மதிப்பும் கொண்டிருந்தவர். இலங்கையிலே பாரதி பாடல்களை மேடைகளில் பாடிப்பரப்பியவர். அவர் கவிதைகளை தமது கட்டுரைகளில் மேற்கோள் காட்டுவதில் நிறைவும் மட்டற்ற மகிழ்வும் கொண்டவர். மகாகவி பாரதியாரை அடிகளார், ''அண்மையிலிருந்த பெருந்தமிழ்ப்புலவராகிய சுப்பிரமணிய பாரதியார்''. என்று பெருமைப் படுத்தி அழைக்கின்றார்.

சிலப்பதிகாரந்தந்த இளங்கோவடிகளே, விபுலானந்தரை இசைத்துறைக்கு அழைத்துவந்தார். கம்பனோ காவியத்தாலும், வாழ்க்கையிலும் தனக்கு ஆசானானான் என்று அடிகளார் ஆங்கிலத்திலும், தமிழிலும் பல்வேறு முறை குறிப்பிட்டிருக்கின்றார். திருக்குறளை உயிர்ப்போடு அடிகளார் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதி கூறினான் :

"யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல்
வள்ளுவர்போல் இளங்கோவைப் போற்
பூமிதனில் யாங்கணுமே கண்டதில்லை
உண்மை வெறும் புகழ்ச்சியில்லை"

இந்தக்கவிதை வரிகளை அடிகளால் தமது சொற்பொழிவுகளிலும் எழுத்திலும் அடிக்கடி கையாண்டிருக்கிறார். 1942ஆம் ஆண்டில் மதுரையில் கூடிய முத்தமிழ் மகாநாட்டு, இயற்றமிழ்ப் பகுதிக்கு அடிகளார் தலைமைப் பேருரை நிகழ்த்கினார். அந்த உரையிலே அடிகளார் பாரதியின் மேற்படி கவிதையைத் தக்க இடத்தில் கையாண்டு பெருமிதங் கொண்டிருக்கிறார்.

கிரேக்க மகாகவியான ஹோமரை அவாவோடு பயின்று இன்புற்றவர் அடிகளார். 'இலியிட்' 'ஒடிசி' ஆகிய ஹோமரின் காவியங்களில் சிலபகுதிகளைத் தமிழில் மொழி பெயர்க்கும் முயற்சிகளை அடிகளார் மேற்கொண்டிருந்தார், "இக்காவிய ரத்தினத்தின் சிற்சிலபாகங்களைத் தமிழறிஞர் பொருட்டு மொழி பெயர்த்து வெளியிடும் கருத்துடையேன்" என்று 'இலியிட்' பற்றிய 'மேற்றிசைச் செல்வ'க் கட்டுரையில் குறிப்புரைக்கிறார் அடிகளார். ஹோமரை அடிகளார் பல இடங்களில் மேற்கோள் காட்டுகிறார்.

ஹோமரோடு நில்லாது யவன தேசத்துகலைச் செல்வர்கள் பலரைப்பற்றிய அறிமுகக் குறிப்புகளையும், அவர்களின் படைப்புக்களைப் பற்றியும் தமது 'மேற்றிசைச் செல்வம்' என்ற கட்டுரையிலே அடிகளார் விரித்துக்கூறுகிறார்.

ஆங்கிலக் கவிதை வரலாற்றையும், காவியங்களையும் மட்டுமன்றி அவைபற்றிய தகுதியான விமர்சனத்தையும் அடிகளார் சான்றாதாரங்களுடனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிஞருலகின் முன்னே வைத்தார். ஆங்கில இலக்கிய விமர்சகங்களில் பலரும் ஆங்கிலக் கவிஞரான சாசரை (1340 — 1400) வியந்து கொண்டாடி எழுதினார்கள். அடிகளோ.

> ''சாசர் என்னும் சவியை ஆங்கிலக்கவிதை வானின்உதயதாரகையேன இலக்கிய வரன் முறை ஆசிரியர்கள் குறிப்பிடுவார்கள், இவர் முதலிலே தோன்றிய காரணத்தினாலே பெருமையுற்றனரே யன்றிக்கவித்திறமையினால் அல்ல, பிராஞ்சியச் செய்யுள் மரபினைப் பின்பற்றி தமது யாப்பு முறைகளை வழங்கினார்''

அடிகளாரின் இந்தத்திறன் வாய்ந்த விமர்சனத்தை அப்போதைய ஆங்கில மொழிப் புலமை வாய்ந்த விமர்சகர்கள் பலரும் பாராட்டினார்கள்.

அடிகளார் ஸ்பென்சர் (1552 — 1599) என்ற கவிஞரை மகாகவியாக ஒத்துக் கொண்டு அவரை வியக்கிறார்.

> ''ஸ்பென்சர் என்னும் மகாகவி கவிஞர்க்கு கவிஞர் எனப் போற்றப்பட்டார். இவரியற்றிய அரயடந்தையார் இராணி (Faeri queen) என்னும் பெருங்காப்பியம் கவிநயம் நிறைந்தது. கற்பனை யிலும் செஞ்சொல்லாட்சியிலும் நமது சீவகசிந்தா மணியை நிகர்த்தது.''

இவ்விதம் ஸ்பென்ஸரின் கவித்துவத்தை நமது கவி மரபோடு ஒப்பிட்டுச் சொல்கிறார் அடிகளார். ஸ்பென் ஸரின் 'அழகு பொருந்திய சிறுகாப்பியங்கள், இயற்கை வளங்குறிக்கும் ''ஆயன்நாட்குறிப்பு'' என்ற சிறுகாப் பியம்' பற்றியும் அடிகளார் மனமகிழ்ந்து குறிப்பிடு கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட் சிறப்பாலும், அரசியல் பலத்தாலும், ஆட்சிப் பொறுப்பிருந்த அரசர் ஆளுமையாலும் ஆங்கிலநாடு பொலிவுற்றிருந்த காலத்தில் இங்கிலாந்தில் மகாகவி ஷேக்ஸ்பியர் (1564-1616)தோன்றினார். அடிகளாரை ஷேக்ஸ்பியர் போல கவர்ந்த கவிஞர் மேற்றிசையில் வெகுசிலரே. அடிகளாரின் எல்லையற்ற பிரியத்துக்கும் பின்பற்றுதலுக்கும் ஷேக்ஸ்பியர் ஆளாகியிருந்தார். ஷேக்ஸ்பியரை அடிகளார் பல இடங்களில் சிறந்த நாடகக்கவி, பெருங்கவி என்ற அடைமொழிகளையிட்டு அழைக்கின்றார். 'யூலியஸ்சீசர்' என்ற ஷேக்ஸ்பியரின் நாடகத்தில் ஒரு பகுதியை அடிகளார் சுவை குன்றாமல் மொழி பெயர்த்திருக்கிறார். அவரது மொழி பெயர்ப்பின் சிலபகுதிகளை இங்கே பார்க்கலாம். அடிகளார் மொழி பெயர்ப்புத்திறனுக்கு இது ஒரு அவிழ்.

''இந்நாடகத் தலைவராகியயூலியஸ்சீசர் பராக்கிரமசாலியென்றும் சேனைத் தலைவரென்றும் முன்னர்க் குறிப்பிடப்பட்டார். உரோமாபுரியில் வாழ்ந்த காஷியஸ் எனப் பெயரிய சனத்தலைவ னொருவன் கஸ்கா, திரேபோணியஸ், லிகாறியஸ், டேசியஸ், சின்னா. சிம்யர் என்பாரையும் நீதிமானும் யூலியஸ் சீசரது நண்பனுமாகிய மார்க்கஸ் புரூட்டஸையுந் தன்வயப் படுத்திப் பங்குனித் திங்களின் நடுநாளில், நண்பகலில், அத்தாணி மண்டபத்தில், யூலியஸ்சீசரது உயிரைக் கவர்வதற்கு ஏற்பாடு செய்தனன். குறித்த தினத்திற்கு முன்னிரவில், விண்வீழ் கொள்ளிகளும், தூமகேதுக் களும் பலவகை உற்பாதங்களுந் தோற்றி யூலியஸ் சீசரின் மனைவி கல்பூர்ணியா தீக்கனாக் கண்டு அச்ச முற்றெழுந்து, புறத்தே நிகழுகின்ற உற்பாதங் களினால் உள்ளம் அவலித்துத் துயிலொழித்திருந்து, காலைப்பொழுது வந்ததும் கணவனது முன்னிலையை யடைந்து'.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரிரவில் நடந்தவெலாம் பீழையினை விளக்கப்
பேதலிக்கும் உளச்சிறியேன் பேசுகின்ற
மொழிகள்
ஆருயிர்க்குத் தலைவ! நின தருட்செவியில் வீழ்க,
அகத்திடையின் றிருந்திடுக, அவைபுகுத
லொழிக,

எனக் குறையிரந்து வேண்டி நின்றனள்,
அதனைக் கேட்ட சீசர் புன்னகை புரிந்து,

அஞ்சினர்க்குச் சதமரணம் அஞ்சாத நெஞ்சத்(து)
ஆடவனுக்(கு) ஒரு மரணம். அவனிமிசைப்
பிறந்தோர்
துஞ்சுவர், என் றறிந்திருந்தும் சாதலுக்கு நடுங்கும்
துன்மதிமூ டரைக்கண்டாற் புன்னகைசெய்
பவன்யான்
இன்னலும்யா னும்பிறந்த தொருதினத்தில்
அறிவாய்;
இளஞ்சிங்கக் குருளைகள்யாம்;
யான்மூத்தோன் எனது
பின்வருவ(து) இன்னல்எனப் பகைமன்னர்
அறிவார்,
பேதுறல்பெண் ணணங்கே! யான்
போய்வருதல் வேண்டும்,

எனக் கூறினர்.

இத்தருணத்தில் டேசியஸ் என்பவன் வந்து அத் தாணிமண்டபத்திற் குழுமியிருந்த முதியோர் சீசரை அழைத்து வரும்படி சொல்லியதாகத் தெரிவித்தான். சீசர் முதலிலே மறுத்துப் பின்பு இசைந்து உடன் போயினர். வழியில் ஒரு சேவகன் ஒரு நிருபத்தைக் கொண்டுவந்து கொடுத்து, 'இது சீசருடைய சுகத்தைக் கோரியது. இதனையுடனே படித்தருள வேண்டும்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனச் சீசர் கையிற் கொடுத்தனன். 'நல்லது நண்ப! சனங் களுடைய சுகத்தைக் கோரிய நிருபங்களைப் படித்த பின்பு இதனைப் படிக்கிறேன்' என்று கூறிவிட்டுச் சீசர் அத்தாணி மண்டபத்தை நோக்கி நடந்தனர். ஆங்குச் சிம்பர் என்பவன் முற்பட்டு வந்து முழந்தாட்படியிட்டு நின்று, 'மஹெளதாரிய மஹாப் பிரபுவே! ஏழையேனது விண்ணப்பத்திற் கிரங்கி ஏழையேனது சகோதரனை மன்னித்தருள வேண்டும்.' என வேண்டி நின்றனன்.

சீசர் அவனை நோக்கி,

தாழ்ந்து மென்மொழி யுரைத்திடேல்,
தரணியிற் பணிந்து
வீழ்ந்து நைபவர் பொய்யுரைக்
கிரங்கிய வீணர்
சூழ்ந்து செய்தன துடைத்துப்பின்
சோர்வினை யடைவார்.
ஆழ்ந்து செய்வன செய்யும்யான்
அவர்நெறி அணையேன்;

அண்ணல் நீர்மையேன், பிழைசெயேன்;
அணுவள வேனும்
நண்ணும் நீதியிற் பிரிந்திடேன்,
நாயெனக் கதறிக்
கண்ணில் நீர்மிக நிலத்தினிற்
புரள்வதாற் கருதும்
எண்ணம் முற்றுறும் என்னநீ
எண்ணுவ திழிவே

எனக் கூறச் சார்ந்து நின்ற மார்க்கஸ் புருட்டஸ் சீசரை நோக்கி, 'ஐய! நான் இச்சகம் பேசுவேனல்லேன், தேவரீரது திருக்கரத்தை முத்தமிட்டேன். சிம்பரின் விண்ணப்பத்துக்கிரங்கி அவரது சகோதரனை விடுதலை செய்தல் வேண்டும்' என்றனன். சமீபத்தில் நின்ற காஷியஸ், சீசரை நோக்கி, 'மகிமை பொருந்திய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீசரே ! மன்னிக்கவேண்டும்! உம்மிரு தாளிணையினை யும் பற்றினேன், சிம்பரின் சகோதரனை மன்னிக்க வேண்டும்,' என்றனன். சீசர் தம்மைச் சூழ்ந்து நின்று விண்ணப்பித்தோரை நோக்கி,

இரங்குதிர், என்ன இரக்கும் நீர்மையர்
தமைப்பிறர் இரக்கிற் றயைகாட் டுநரே;
நும்போல் வேனெனின், நும்மொழிக்(கு) இசைவேன்;
வானகம் மிளிரும் மீனினம் அனைத்தும்
தற்சூழ்ந் தசையத் தானசை வின்றி
நிலைபெறு துருவன் நிலைமைகண் டிலிரோ?
வான்மீன் அனையர் மாநில மாந்தர்;
துருவன் அனையன் ஒருவனீங் குளனால்;
அவன்தான் யான், என அறிகுவிர், புகன்ற
மொழியிற் பிரியேன்; பழியொடு படரேன்;
மலைவீழ் வெய்தினும், மனம்வீழ் விலனே,

எனக் கூறினார். இதனைக் கேட்ட புரூட்டஸ் ஆதியோர் சீசரது பெருமித வுரையைத் தற்பெருமை யுரையென வெண்ணி, உறைவாளைஉருவி அனைவரும் ஏகோபித்துச் சீசரை வெட்டினார்கள். 'நீயுமா புரூட்டஸ்!' என்னும் உரையோடு சீசர் வீழ்ந்து மரணித்தனர்.

ஷேக்ஸ்பியரை கம்பனோடு ஒப்பிட்டு மேலும் வியக் கிறார் அடிகளார்.

''ஆங்கிலநாட்டு மன்னர் சரித்திரங்கள் பல வற்றையும் செகசிற்பியார் நாடகமாக்கி அளித்தார். ஆங்கிலமொழி உலகில் வழங்குங் காலம்வரையும் இக்கவியின் பெயர் நின்று நிலவும். ஆங்கில மொழி உலகில் வழங்குங் காலம் வரையும் இப் பெருங்கவியின் பெயர் நின்று நிலவும். ஆங்கில நாடுபெருஞ்சிறப்புற்றிருந்தகாலத்திலே தோன்றிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செகசிற்பியாரைப் போல தமிழ்நாட்டு மன்னர் கடல் கடந்து சென்றுபல நாடுகளிலும் தமது வெற்றிக் கொடிநாட்டிய காலத்திலே தோன்றிய கம்பநாடார், உலகு புகழும் வனப்பு வாய்ந்த காப்பியத்தை வகுத்தளித்தார். வீரத்தையும், ஆண்மையையும், மக்கள் நீர்மையையும் சித்திரித்துக் காட்டும் வகையிலே இருபெருங் கவிஞரும் ஒத்ததன்மையர்; இருவர் நாவிலும் நின்று கவிதை சுரந்தளித்தவள் ஒருத்தியன்றோ?"

மில்டன் (1608-1674)பற்றி விபுலானந்தர் ஆழ்ந்த மதிப்புக் கொண்டிருந்தார். அவர் இயற்றிய 'சுவர்க்க நீக்கம்' என்ற காவியத்தின் சில பகுதிகளை அடிகளார் தமிழில் மொழி பெயர்த்திருக்கின்றார். அத்தோடு நில்லாமல் தமிழ்க்கவிதா மரபோடு 'சுவர்க்க நீக்க'த்தை ஒப்பிட முயன்றிருக்கிறார்: ''தேவாசுர யுத்தம் கூறுதலில் இந்நூல் கந்தபுராணம் போன்றது.''

அடிகளாருக்கு டிறைடன் (1631-1700) பாப்பு (1688-1744) ஆகிய கவிஞர் படைப்புக்களிலும் பரிச்சயமுண்டு. கி.பி. 1832 முதல் 1901ஆம் ஆண்டுவரை பிரித்தானிய சக்கராதிபத்தியத்தினை ஆட்சி புரிந்த விக்டோரியா மகாராணி காலம், அச்சக்கராதிபத்தியத்தின் பல் துறைகளுக்கும் பொற்காலமாக இருந்தது.

ஆங்கில இலக்கியத்தை நுணுகி நுணுகிக் கற்றுத் திளைத்த அடிகளார், அக்காலத்து தலைசிறந்த கவிஞர்களை தாம் வியந்ததோடு மட்டுமன்றி தமிழர்களுக்கும் அறியப்படுத்தினார்.

மேற்றிசையின் சிறந்த மகாகவிகளோடு தமிழகத்து மகாகவிகளை ஒப்பிட்டு நோக்குகிற விசாலமான அவரது இலக்கியமனம் எண்ணி எண்ணிப் பெருமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளத்தக்கது. ஆனால் அவர் அப்படி ஒப்பிட்டது உணர்ச்சிவசப்பட்ட, தன் தாய்மொழிப் பற்றால் அல்ல என்பதை இங்கே நாம் கருதவேண்டும். அவரது ஒப்பீட்டு முறை காரணகாரியங்களோடும், தகுந்த ஆதாரங்களோடும் சேர்ந்திருந்தது.

மேனாட்டுக் கவிமரபு போல தமிழ்க்கவிமரபும் உயிர்ப்பும் துடிப்பும் பெறவேண்டுமென்பது அவரின் தணியா ஆதங்கமாயிருந்தது. எனவேதான் மேற்றிசைக் கவிஞர்களைத் தமிழிலே குறிப்பிட்டு, அவர்களின காவியங்களைத் தமிழிலே யாத்து தமிழ்ப்படிப்பாளிகளையும் எழுத்தாளர்களையும் அவர் உற்சாகமூட்ட முயன்றார்.

மேற்றிசைக் கவிஞர்களைப் பற்றிய அவரது பின் வரும் கண்ணோட்டம், இன்றைக்கு தமிழ், ஆங்கில இலக்கியங்களைக் கற்கின்றவர்கள் அவசியம் அறிந் திருக்கவேண்டிய ஒன்று.

அவற்றைப் பார்ப்போம்:

''பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே தோன்றிய உவால்டர் ஸ்கொட் (1771—1832), உவேட்சுவேத் (1770—1850) என்னுங் கவிவாணர்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந் தார்கள். பைரன் (1788—1824), ஷெல்லி (1792—1822), கீத்சு (1795—1821), தேனிசன் (1809—1892) றபர்ட்பிறௌணிங் (1812—1889) எனப் பெயரிய அழியாப் புகழ்படைத்த அகலக் கவிகள் பத்தொன்பதாம் நூற்றாண்டிலே திகழ்ந்தார்கள். மேற்குறித்த எழுவரும் இயற்றிய காப்பியங்களும் தனிப்பாடல்களும் எத்தனையோ பல. எண்ணிறந்த புலவர்கள் சிறந்த வசன காவியங்கள் இயற்றினார்கள். சையன்ஸ் என்னும் அறிவியல் நூல், கணித நூல், வான நூல், இதிகாச நூல், தத்துவ நூல் முதலிய கல்வித்துறைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலவற்றிலும் எத்தனையோ பல நூல்கள் எழுந்தன. ஆக்ஸ்பர்ட், கேம்பிறிட்ஜ் என்னும் நகரங்களிலுள்ள பழைய பல்கலைக் கழகங்களும், லண்டன், மான்செஸ்டர், முதலிய நகரங்களிலுள்ள புதிய பல்கலைக் கழகங்களும் கலைத்துறைகள் பலவற்றையும் போற்றி ஆதரித்து வந்தன; இன்றும் ஆதரித்து வருகின்றன.

மேலே நாம் குறிப்பிட்ட எழுவருள்ளே உவால்டர் ஸ்கொட் எத்தனையோ சிறந்த வசன காவியங்களைச் செய்திருக்கிறார்; இவர் ஆக்கிய செய்யுள் வடிவ நூல்கள் அத்துணை உயர்வுடைய வல்லவாயினும், கதை பொதிந்த பனுவல்களாதலின், இளைஞர்க்கு உவகை பயப்பன. இவர் ஸ்கொட்லாந்திலே பிறந்தவர்; தேசாபிமானம் நிறைந்தவர். பழைய காலத்திலே தமது நாட்டிலே வாழ்ந்த குறுநில மன்னரது வீரச் செயல்களையும் அவர்களது மன்றங்களிலே யாழிசைத்த பாணர் திறத்தினையும் சிறப்புறக் கூறுவார்.

இவரது பாடல்களைப் படிக்கும்போது, பழந்தமிழ் நாட்டின் நினைவு உள்ளத்திலே இயல்பாக எழும். மன்னனுயிர் காக்கத் தம்முயிரை யீயும்மறவர் செயலும், அடுகளத்திலே தம் மைந்தர் பொருது வீழ்ந்த செய்தி கேட்டு உவகைக் கண்ணீர் உகுத்த வீரத்தாயார் செயலும், ஆண்மைசான்ற ஆடவரும் அழகுவாய்ந்த அரிவையரும் கேட்டு உளமுருகுமாறு வீரஞ்செறிந்த பாடல்களை யாழிசையோடு பாடும் பாணர் செயலும் பழந்தமிழ் நாட்டுக்கு உரியனவன்றோ? இத்தகைய செயல்கள் உவால்டர் ஸ்கொட் என்னுங் கவிஞரது தாய் நாட்டுக்கும் உரியன.

இவர் பாடிய பாணன் பாட்டு என்னும் பனுவலின் தொடக்கத்திலே பாணனது பழமை கூறுமிடத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தாவுகின்ற பரிமாவின் மீதிவர்ந்து சென்று
தரணிபரும் அரிவையரும் உருகவிசை பொழி
வோன்'

எனப் பாணனைப் பாராட்டுகிறார். கால வேறு பாட்டினாலே வேற்று மன்னன் மணியாசனத் தமரப், பாணன் ஆக்கமிழந்து, பசிப்பிணியை யாற்றுதற்கு ஒருபிடி யுணவு தேடி, ஏழைகளுடைய மனையினை நாடி, அலைகின்ற நீர்மையினை உருக்கத்தோடு கூறு கிறார்.

மேலும், நீர்நிலைக் கன்னிகை யென்னும் அழகிய பனுவலின் தொடக்கத்திலே, கவி தன்னையே பாண னாகக் கற்பித்துத் தேடுவாரின்றிப் பலநாள் மரக்கிளை மீது கிடத்தலிற் பசுங்கொடி படர்ந்த யாழ்க்கருவியினை முன்னிலைப் படுத்திக் கூறுகிறார்; 'வடபுலத்து நல்யாழே! நீரூற்றினுக்கு நிழலளிக்கும் இம்மரக்கிளை மீது நெடிது தங்கினை. இலையொலியும் அருவி நீரொலியும் இசையியம்ப, நின்னரம்புகள் இசை யின்றித் துயிலுதல் முறையாகுமா? முன்னாளிலே வீசு கின்ற காற்றிலே இசையமிழ்தத்தை யுகுத்தனையே! நின்பாற் பொறாமையுற்ற பசுங்கொடி படர்ந்து நின் நரம்புகளை ஒவ்வொன்றாகக் கட்டிவிட்டமையினாலே பேசாதிருக்கின்றனையா? வீரர் முகத்திலே புன்னகை தவழவும், அரிவையர் நாட்டங்களிலிருந்து உவகைக் கண்ணீர் கலுழவும் நினது இனிய குரலினாலே பேசலா காதா? முன்னாளிலே, கலிடோனியாவிலே, விழாக் கொண்டாடுவார் மத்தியிலே, நீ மௌனஞ் சாதித்த தில்லையே. காதலையும் வெற்றியையும் பாடி, அச்சத் தையும் பெருமிதத்தையும் அளவுபடுத்தினையே. நினது இசை கேட்டுருகும் வண்ணம் காவலரும் காரிகை நல்லா ரும் சூழ்ந்து நின்றனரன்றோ? வீரரது தீரச்செயலும் காரிகையாரது ஒப்பற்ற கண்ணிணைகளுமே நினது பாடற் பொருளாக அமைந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நல்யாழே! துயிலொழிந் தெழுவாயாக! நினது நரம்புகளிற் படருங் கையானது பயிற்சியற்ற கையெனி னும், செழிய பழம் பாடல்களின் இன்னொளியை ஓரளவிற்காவது இசைத்தலாகாதா? நின்னிசைக்குருகி ஓர் இதயமாவது துடிப்புறுமெனின், நின்செயல் வீண் செயலாகாதல்லவா? நீ இன்னும் வாய்திறவா திருத்தல் தகுதி அன்று. சித்தத்தைக் கவரும் வனமோகினியே! எழுந்திரு, இன்னும் ஒருமுறை எழுந்திரு.'

உவேட்சுவேத் எளிய நடையிலே, பொதுமக்களு டைய இன்ப துன்பங்களையும், இயற்கை வனப்பையும் பொருளாக வைத்துக் கவியியற்றியவர்.

முதுவேனிற்காலம்; நண்பகல்; பரந்தவெளியிடத் திலே சிதைந்த குரம்பையொன்று காணப்படுகிறது. அதனை நோக்கிக் கவிஞர் நடந்து செல்லுகிறார். செல்லும் வழி சேற்று நிலம் ஆதலினாலே கால்கள் துன்புறுகின்றன. சேற்றிலிருந்து ஈக்கள் எழுந்து முகத் தைச் சூழ, இருகைகளாலும் ஓய்வின்றி அவற்றை ஓட்டு கிறார். இதனால் கைகள் சோர்கின்றன. இத்தனை அழகினிடையே கவிதை சுரக்கின்றது.

முதுவேனிற் பெரும் பொழுதின் முளைத்தெழுந்த பரிதி
முன்னேறி ஒளிபரப்ப, மென்னீர அருவி
மதுவாரும் பொழிலகத்துத் தென்றிசையிற் றோன்ற,
வடதிசையின் மிகத்தெளிந்த வளிவழங்கும் வெளியில்.
வானகத்தில் அசைவின்றி வதியுமுகிற் குலங்கள்
மன்னியநன் னிழல்பரப்ப, அந்நிழலி னிடையே,
வேனில்வெயில் கதிர்சொரிய, உளமகிழ்வு விரிய,
மெத்தென்ற பசும்புல்லில் எத்தொழிலும் இன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சிறைய புள்ளிசைக்கும் செழும்பாடல் செவிவாய்
அகநுழைய, இருள்விரவு மலைமுழையில், அயர்ந்து
துஞ்சுதல்போற் றுயிலாது கடைக்கண்ணால் அழகு
சுவைத்திடுவான் ஒருவன்; அவன் சுகத்தினையென்
[னென்போம்?

நோக்கினிய அவ்வெளியில், இருகாலும் சேற்றில்
நொந்தலைய, முகத்தினைச்சூழ்ந்(து) அந்தரமே
பெயரும்
ஈக்குலங்கள் தமையோட்டும் இருகரமுஞ் சோர,
இளைப்புடனே வழிநடந்தேன் யானுமந்தப்
பொழுதில்.

நீண்டுயர்ந்த மரப்பலவும் உடன்பிறந்தார் போன்று
நிலைத்தொன்றுஞ் சோலையிலே, இலைக்கூரை
சிதைய,
ஈண்டிநின்ற சுவர்நான்கா யியைந்ததொரு குரம்பை;
இக்குரம்பை தனையடைந்தேன்; இளைப்
பொழிந்தேன்; ஆங்கு

நல்லிரும்புப் பூண்செறிந்த தண்டொருபாற் கிடக்க
நன்னிழலிற் பலகையின்மேல் என்னரிய நண்பன்
அல்லலறப் படுத்திருந்தான், திண்ணிய நல் லுடலம்,
அருஞ்சுரங்கள் பலகடந்தும் அசையாத நிலையான்

தீர்க்காயுவாக எண்பது ஆண்டு வாழ்ந்து ஓய்வின்றிக் கவிதை புனைந்தளித்த உவேட்சுவேத் கிழவர் இயற்றிய பாடல்கள் மிகப்பல. உயர்ந்த நோக்கமும் இடையிடையே வேதாந்தக் கருத்தும் அமைய எளிய நடையிலே செய்யுள் செய்தார். இவரும் வேறு சில புலவர்களும் வடபாலிலே ஸ்கொட்லாந்திலே வாவிகளிடையே வாழ்ந்து கவி இயற்றினமையின் வாவிக் கவிஞர் என்னும் பெயருக்குரியராயினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவருக்கு நேர் விரோதமாக முப்பத்தைந்து, முப்பது, இருபத்தைந்து என்னும் எண்ணிக்கையுடைய ஆண்டுகள் மாத்திரமே உயிர் வாழ்ந்த பைரன், ஷெல்லி, கீத்சு என்னும் மூன்று பெருங்கவிகளும் ஆங்கில மொழிக்கே அழியாத பெருஞ் செல்வத்தை உதவினர். இம் மூவரும் நண்பர்கள். பைரன் கிரேக்க நாட்டிலே போர்க்களத்திலே உயிர் துறந்தார், ஷெல்லி உரோமா புரியை யடுத்த கடலிலே படகு கவிழ்ந்து அமிழ்ந்தி உயிர் நீத்தார். இவர் உடலினை அக்கடற்கரையிலே தகனித்துச் சாம்பரை உரோமாபுரியிலே அடக்கஞ் செய் தார்கள். கீத்சும் தமது பூதவுடலினை உரோமா புரியிலே நீத்தார். மூவரிலும் இளையாராகிய கீத்சு முதலிலே மரணித்தார். இவரைக் குறித்து ஷெல்லி இயற்றிய கையறு நிலைச் செய்யுள் நிறைந்த கவிநயம் வாய்ந்தது. கடலிலமிழ்ந்திய ஷெல்லியின் சட்டைப் பையிலே கீத்சு இயற்றிய லாமியா என்னும் பனுவல் இருந்தது.

இவர்கள் முற்பிறப்பிலே யவனபுரத்திலும் உரோமா புரியிலும் வாழ்ந்த புலவர் வரிசையில் உள்ளவர்களோ என எண்ணவேண்டி இருக்கிறது. கீத்சு, கல்லூரியிலே யவனமொழி பயிலவில்லை; ஆனால் அவருடைய செழும் பாடல்கள் வரிக்கு வரி யவனபுரத்துக் கவிநயம் சொட்டுவன. இம்மூவரும் இயற்றிய சிறந்த நூல்கள் பார காவியங்களாதலினாலே, ஒவ்வொருவரையுங் குறித்து ஒவ்வொரு தனிப்புத்தகம் (பெரிய அளவிலே) எழுதினாலன்றி, இவர்களது ஆற்றலை அளவிட்டு ரைக்க முடியாது.

இன்றைக்கு இருபது ஆண்டுகளின் முன்னே லண்டன்மா நகரிலே, கீத்சு, இகவாழ்வொருவிய நூற் றாண்டு விழாக் கொண்டாடினார்கள். அவ்விழாக் கொண்டாட்டத்து நிருவாக சபையாருக்கு யான் எழுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யனுப்பிய செய்யுளை இங்குத் தருகின்றேன். இப் பெருங்கவி வகுத்த காப்பியங்களின் தொகையினை இச் செய்யுள் வாயிலாக அறிந்து கொள்ளலாம்.

திருமலி அழகுடைச் செழும்பொருள் தானே
உவகை நீர்மையது; ஆங்கவ் வுவகை
பன்னாட் கழியினும் கழியா இயல்பிற்
றண்டா இன்பந் தந்துநிற் பதுவே
எனமுதல் நிறீஇய இன்னிசைச் செய்யுள்
மன்னுறு மகிழ்வினை வழங்கி அணிமிகும்
செஞ்சொற் பொதிந்த செவ்விய நடையது;
அஞ்செஞ் சீறடி அரமகள் ஒருத்தி
சோம னுலகு துறந்து, புவியுற்றுக்
காமனுங் கைதொழுங் கட்டழ கமைந்த
எண்டிமி யோன்எனும் இளவலை விரும்பும்
செய்தி கூறும் சீரிது; திரைகடல்
அலையி னாப்பணும், அருங்கடி கமழ்தரும்
நறுமலர் பொதுளி உறுஞிமி றார்க்கும்
உவவன மருங்கும் உற்ற துரைத்தலின்
விஞ்சைய ருலகின் வியன்றெறிந் துரைப்பது;
பவனநல் லறிஞர் பனுவலி னமைந்த
கவிநய மருவிய காட்சிய(து); அறிஞர்
பெருங்காப் பியமெனப் பேசுதற் குரிய
அருங்காப் பியத்தை அளித்தனை மன்னோ
அதா அஃது,
மாயா மயக்க வஞ்சமிவ் வுலகம்
குருபரன் அருளால் மருவுவ(து) அறிவெனும்
உண்மையை யுரைக்கும் வண்மைசால் கவிதை,
லாமியா வெனும்பெயர் மேவிய மடவரல்
லீசியஸ் என்னும் இளைஞற் பேணி
இன்னுயிர்க் காதலன் ஆக்கல் வேண்ட
அவனும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கல நாணை வழங்கும் எல்லை
அபல்லோ னியன்எனும் அறிஞன் தோன்றிக்
கட்புலங் கொண்டவள் கள்ளவஞ் சனையை
ஒழித்த லுரைக்கும் உயர்நடைச் செய்யுள்
அளித்தனை மன்னோ; ஆங்கது வன்றியும்
காதலி னியல்பைக் கருத்துற விளக்கும்
இஸபெல் லாவின் இன்னல்சார் சரிதம்
வசையின் றாகு மாண்பிற் சமைத்தனை;
அதன்கண்,
நித்திலந் தருவ திலங்கைத் தீவென,
வித்தக உரைத்தனை; விண்ணாட் டமிழ்தம்
புரையுமெச் சுவைபொதி உரையுடைச் செய்யுள்
பலவா யமைத்தனை; நலநா நுகர்ந்தோம்.
பல்லா யிரங்கா வதத்தினுக் கிப்பால்
உள்ளேம் ஆயினும், உன்னுரை கேட்டு
மகிழ்ச்சி எய்தினம்; மதுவிரி நறுமலர்
அவிழ்ந்து பகற்போ(து) அளிகளுக்கு உணவும்,
பாங்குசென் றோர்க்குப் பரிமள வாசமும்,
தந்து வீயுந் தன்மையைப் போல
ஐயைந் தாண்டின் அகில நீத்தனை.
நீபோய்,
நூறாண்டு கழிந்தன எனினும் நின்மொழி
இன்றலர் நறுமலர் என்ன நின்றது;
அதனால்,
ஆங்கில மொழிசெலும் அனைத்துநா டர்க்கும்
களங்கமில் களிப்பினைத் தந்து,
கிளர்ந்து விளங்குமாற் கீத்சுஎனும் பெயரே.

இப்புலவர்கள் வாழ்ந்த காலத்திலே பிராஞ்சு தேசத்திலே, பெரியதொரு புரட்சி யேற்பட்டது. உண வின்றித் துன்புற்ற தொழிலாளிகளும் ஏழைமக்களும் முதலாளிகளையும் பிரபுக்களையும் அரசகுடும்பத்தையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழித்து, விடுதலை, சமத்துவம், சகோதரத்துவம் என்னும் முழக்கத்தோடு நாட்டிலே புரட்சி செய்தார்கள். பிராஞ்சு நாட்டினை ஐரோப்பிய முடிமன்னர்களெல்லோரும் எதிர்த்துப் போராடினார்கள். நப்போலியன் எனப்பெயரிய தளபதி பிராஞ்சு நாட்டினை எதிர்த்து வந்தோரோடு போராடி வெற்றிபெற்றதோ டமையாது, படையெடுத்துச் சென்று ஐரோப்பாவின் பெரும் பாகத்தை மேற்கொண்டு பிராஞ்சு நாட்டுக்குப் பெரும் பெயர் உண்டாக்கினான். நன்றியறிதல் காரணமாகப் பிராஞ்சியர் நப்போலியனைச் சக்கரவர்த்தியாக்கிச் சிங்காசனத்தில் இருத்தினர். இந் நிகழ்ச்சிகள் ஆங்கில நாட்டுக் கவிவாணரது காப்பியங்களிலே, ஒரு புத்துணர்ச்சி தந்து காணப்படுகின்றன. பிராஞ்சிய நாட்டில் எழுந்த 'விடுதலை' சமத்துவம், சகோதரத்துவம்' என்னும் ஒலியானது எவ்விடத்தும் பரவியது.

ஷெல்லி துன்புற்றோருக் கிரங்கும் தூய உள்ளம் வாய்ந்த கவி. கலாசாலையிற் படிக்கின்ற காலத்திலே, இவர் பூவுலகத்துக் கொடுங்கோல் மன்னர்களையும், ஏழைகளை வருத்தும் பிரபுக்களையும், மன்னருக்கும் பிரபுக்களுக்குஞ் சார்பாக வானுலகத்திலேயிருந்து அரசாளும் தெய்வத்தையும் ஒருங்கு வையத்தொடங்கினார். எங்கும்பரந்து உயிர்க் குயிராக விளங்கும் கருணைக்கடலாகிய மெய்க் கடவுளிடத்திலே நிறைந்த பத்தியுள்ள ஷெல்லியின் உள்ளக்கருத்தை யறியாத மக்கள் அவர் தெய்வத்தை இகழுகிறார் எனக் குற்றஞ் சாட்டிக் கலாசாலையிலிருந்து துரத்தியதோ டமையாது, அவரது குழந்தையைத் தானும் அவர் வளர்த்தல் கூடாதெனத் தந்தையிட மிருந்து மைந்தனைப் பிரித்தார்கள். இத்தகைய நிகழ்ச்சிகளினாலே கவிஞருள்ளம் பெரிதும் அல்லலுற்றது. இவரது கவிதை விண்ணுலகத்தை மண்ணுல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்திலே காட்டும் பேரழகு வாய்ந்தது. நிலவின் ஒளியும், விண்மீன்களின் வனப்பும், இசையின் மென்னீர்மையும், குழந்தையின் மழலையும், மெல்லி நல்லாரது தூய அன்பும், மேகங்களின் வனப்பும், செஞ்சுடர்ப்பரிதியின் தோற்றமும் மறைவும் இவரது கவிதையிற் படிதலினாலே புதிய நலம் பெற்றுத் திகழு கின்றன.

இளந்தென்றலின் மெல்லுயிர்ப்பும் மாலைப் பொழுதின் அழகும், எங்கும் நிறைந்த அமைதி நிலையும், வளர்மதியின் ஒள்ளொளியும், விண்மீன் களின் மெல்லொளியும், நீலவிதானம் போன்றமைந்த வானினழகும் மேல்வரும் வெண்பாக்களுட் கூறப்படு கின்றன.

வேனி லிளந்தென்றல் மெல்லுயிர்ப்பு நன்மாலை
மானின் செவிக்கு மருந்தாகி,—வானின்
உரைதேர்ந்த மோன உறுதி குலைக்கும்,
அரிதன்றோ அல்லின் அழகு?

மங்குல் பயிலா வளர்மதியின் ஒள்ளொளியும்,
எங்குமியல் மீனொளியும், எய்தியே—கங்குல்
விழிதுயிலும் பூமகட்கு மேலாப்பா யன்பின்
வழியியலும் நீர்மையதிவ் வான்.

எய்ஸ்க்கிலீஸ் எனப்பெயரிய யவனபுரத்து நாடக ஆசிரியரது நடையினைப் பின்பற்றி இவரெழுதிய கட்டு நீங்கிய பிரமேதயன் என்னும் நாடகம் உயர்ந்த வீரச்சுவை செறிந்தது. பிரமேதயன் வானுலகிலிருந்து நெருப்பினைக் கவர்ந்துவந்து மண்ணுலுகத்தோருக்கு வழங்கிய பேருபகாரி. தேவராஜனாகிய யோபிதா வினது ஆணைக்கு அடங்காத காரணத்தினாலே பிரமேதயன் சிறையிலிடப்பட்டான். பனிபடர்ந்த மலைச்சாரலிலே சங்கிலியாற் கட்டப்பட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவராஜனுடைய கட்டளையினாலே ஓய்வின்றிக் குளிர்ந்து வாடை வீசியது; கழுகுகள் வந்து மூக்கினாலே உடற்றசையைக் குடைந்தன, பிரமேதயனுடைய ஆண்மையையும் உண்மை வீரத்தையும் ஒருவகையாகவும் எதிர்த்து அடக்கமுடியவில்லை.

ஹெல்லாஸ் எனப்பெயரிட்டு இவரெழுதிய நாடகம் யவனபுரத்தின்மீது இவருக்குள்ள பேரன்பினை வெளிப்படுத்துவது. அக்காலத்திலே துருக்கியர் கிரேக்கநாட்டில் அரசு செலுத்தினமையின், சுதந்திரப் போராட்டம் நடந்துகொண்டிருந்தது.

இவரியற்றிய பார காவியங்கள் அரிதுணர் பொருளன - வானம்பாடிப் புள்ளினைக் குறித்த இசைப்பாட்டு, மேகத்தைக் குறித்த இசைப்பாட்டு முதலிய சிறு நூல்களே மாணவராற் பெரிதும் பயிலப்படுவன.

ஐரோப்பாக் கண்டத்திலுள்ளோர் ஆங்கிலப் புலவர்களுடைய கவித்திறனைப் பாராட்டுங்கால், செக சிற்பியாருக்கு அடுத்த படியிலே பைரன் என்னும் புலவரைக் கொள்ளுவார்கள். பைரன் பட்டவர்த்தனர் குடும்பத்துத் தலைமகனாதலின் லார்ட் பட்டம் வகித்தவர். இளமையிலே தந்தையை இழந்தார். இவர் தாயின்மீது வெறுப்புடையவர். ஒழுக்கந் தவறிய நடையினாலே இவரை முதியோர் வெறுத்தனர். சிருங்கார ரசம் மேவ இவர் செய்த காவியங்கள் மிகப்பல. தொட்டவற்றையெல்லாம் பொன்னாக்கும் பரிசவேதிபோல எந்தப் பொருளையெடுத்தாலும் கவிநயம் சொட்டுமாறு செய்வார். 'கருதுவதங் கொன்றுண்டோ காப்பியக் கவிகள் காம எரியெழ விகற்பித்திட்டார்' எனத் தமிழ் நாட்டுப் பெரும்புலவர் கூறுவதுபோலவும், 'சுவை பலவென்று சொல்லுவர் புலவர் யாம் வேண்டுவது இன்பச் சுவையே' என்று வடமொழி மன்னன் வரித்ததுபோலவும் இன்பச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவையினைப் போற்றி இவர் செய்த டன்ஜுவான் என்னும் பெருங்காப்பியம் பதினாறு இலம்பகங்களால் நடப்பது திருத்தக்க தேவரது காப்பியத் தலைவனாகிய சீவகனைப் போலப் பைரனது காப்பியத் தலைவனாகிய டன்ஜுவானும் காமதுரந்தரன். பல மகளிராற் காதலிக்கப்படும் ஆடவனுக்கு அப்பெயர் சூட்டுதல் ஆங்கிலமொழி வழக்காக வந்துவிட்டது. சீவகன் கன்னியரையே காதலித்தான்; இது தமிழ் மரபு. டன்ஜுவானோ வென்றால் பிறர்மனைவியர் காதல் வலையிலுஞ் சிக்குண்டான். இக்காப்பியத்திலே பல விடங்களிலே கவி தமது சொந்த அநுபவத்தைக்கூறக் காணலாம். பதினெட்டாம் ஆண்டுப் பருவத்திலே பிறன் மனைவியிடத்து வைத்த பொருந்தாக் காதல் காரணமாகத் தாயினாலே பிறநாட்டு யாத்திரைக்கு அனுப்பப்பட்ட டன்ஜுவான் கப்பலுடைந்து தன்னந் தனியனாய் ஒரு தீவுக்கரையை அடைகிறான். கரையிலே உணர்விழந்து கிடந்தோனை யவனபுரத்து இளநங்கை யொருத்தியும் அவளது உயிர்ப் பாங்கியும் கண்டெடுத்து உபசரிக்கின்றனர். பின்பு இவன் அந்நங்கையை மணக்கின்றான். அவள் தந்தை வெகுண்டு இவனை அடிமையாக விற்றுவிடத் துருக்கி தேசத்தை யடைகிறான். அரமனை மாதொருத்தி இவனை விலைகொடுத்து வாங்கிப் பெண்ணுடை தரிப்பித்து அந்தப்புரத்திற்குக் கொண்டுசென்றுதன் கருத்துக் கிசையும்படி கேட்க, இவன் மறுக்கிறான், அங்கிருந்துந் துரத்துண்டு துருக்கிக்கும் ருஷியாவுக்கு மிடையே நடந்த யுத்தத்திலே கலந்து ருஷியா ராணியின் முன்னிலையை அடைகிறான். ராணி இவனைக் காதலிக்கிறாள். அவளது அன்புக்குரி யவனாகி, அரசியல் விஷயமாக இங்கிலாந்து தேசத்தை யடைகிறான். அங்கும் பல மகளிர் இவனைக் கண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது நிறை யழிகின்றனர். சரித்திரம் ஒழுக்கத்தி னிழிந்ததாயினும், பைரனியற்றிய காப்பியம் சீவக சிந்தாமணியிலும் கவிச்சுவை மிக்கது. யவனநாட்டின் மீது இக்கவிக்குள்ள பேரன்பு காப்பியத்தின் பல விடங் களிலே காணப்படுகிறது. சைல்ட் ஹறால்ட் யாத்திரை என்னும் பெருங்காப்பியம் தேசாபிமானச் சுவைமிக்கது. வானகமும் மண்ணகமும். சார்தானாப்பாலஸ், காயின், உவேர்ணர், அங்கஹீனன் அங்கம் நிமிர்ந்தது எனப் பெயரிய நாடகங்கள் இலக்கணமும் சுவையும் நிரம்பி யவை. இவரியற்றிய சிறு காப்பியங்களும் பல. கடலை வருணிப்பதில் இவருக்கு இணையாயினார் யாருமில்லையென்றே கூறலாம்,

விக்டோரியா ராணியினது சமஸ்தானப் புலவராகப் பெரும் பெயர் பெற்றவரும், ஒழுக்கமே யுருவெடுத்தாற் போன்றவருமாகிய தெனிசன் என்னும் பெருங்கவியை பற்றி ஒரு சில கூறுவாம். இவரும் லார்ட் பட்டம் வகித்தவர். இவருக்கு அப்பட்டம் ராணியாரால் வழங்கப்பட்டது. இவர் மகா கவியாயிருந்ததோடு, ஞானவானாகவும் விளங்கினார். இவரது சகோதரி யாருக்கு மணமகனாக வருவதற்கிருந்த நண்பரொருவர், இவர்மேற் பேரன்பு பூண்டோர், இளவயதிலே இறந்து போக அத்துயரினை ஒருவாறு ஆற்றிக்கொள்ளும் வண்ணம் இவர் பாடிய கையறு நிலைச் செய்யுள் ஒரு வேதாந்த நூல்போல் அமைந்தது. மக்கள் வாழ்க் கையின் நிலையாமையும். ஆண்டவனே நமக்கு 'எய்ப்பில் வைப்பு' ஆவான் என்பதும், ஒழுக்கத்தினா லெய்திய புகழ் அழியா நீர்மைய தென்பதும் பிறவும் நாலடிச் செய்யுளிலே அழகாகப் பாடப்பட்டிருக்கின்றன. முதற் பத்துச் செய்யுட்களின் மொழிபெயர்ப்பு வருமாறு:

'ஆண்டவனது திருமகனே! அருந்திறலுடையாய்! அழியா அன்பின் நிலைக்களமே! நினது திருமுகத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரில் கண்டிலமெனினும், உள்ளத்துணர்ச்சியே (நம்பிக்கையே) துணையாக நின்னை, நம்பி, நின்னருளிற் கலந்து நிற்கின்றோம்'.

'பகற்பொழுதினை விளக்கும் செஞ்ஞாயிறும், இரவுப் பொழுதினை விளக்கும் வெண்டிங்களும் நினக்கு உரியவை. மனிதவுயிர்க்கும் விலங்குயிர்க்கும் வாழ்வினை ஈந்தனை; சாவினையும் நீயே படைத்தனை; நினது திருவடி நீ செய்தமனித கபாலத்தின்மீது பொருந்தி நிற்கிறது'.

'மண்ணிற் புழுதியிற் கிடக்கும் வண்ணம் எம்மைப் புறக்கணிப்பாயல்லை; மனிதனைப் படைத்தனை, எற்றுக்குப் படைத்தனையென அவன் அறியான். வாளா இறந்து ஒழிந்துபோம் வண்ணம் படைக்கப்படவில்லையென அவனது உள்ளம் நினைக்கின்றது. அவன் நினது திருக்கரத்தினால் உருவாக்கப்பட்டான். நீ அறத்தின் முதல்வன்.'

'மக்களது நீர்மையும் தெய்வத் தன்மையும் நின்பாற் காணப்படுகின்றன. அதியுயர்ந்த, அதிதூய்மையாகிய ஆண்டகைமை நினக்கு உரியது. எமது சித்தம் எமக்குரியன, அவ்வுரிமை எவ்வாறு எய்தியதென யாம் அறியேம் எமது சித்தம் எமக்கு உரியவாயின, அவை தம்மை நினக்கு உரியவாக்குதற் பொருட்டாகவோ?'

'யாம் வகுக்கும் முறைகள் சில நாள் நின்று ஒழிந்து போகும் தகைமைய. அவை நினது அருளொளியினின்று சிதறிய கதிர்கள். என் ஆண்டவனே! நீ அவற்றினும் மிக்காய்.'

'எமது உள்ளத்தில் நம்பிக்கையுளது; அறியும் அறிவு இல்லை. அறிவு காட்சிப் பொருள்கள் மேற்செல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வது. (நீ காட்சிக்கு எட்டாப் பொருள்). ஆயினும் யாம் நின்னை நம்புகிறோம். அந்நம்பிக்கை நின்னிட மிருந்து வந்தது. பேரிருளிலே அஃது ஓர் ஒளிக்கிரணம்; அது வளர்வதாக.'

'அறிவு மேன்மேலும் பெருகுக. அறிவினும் பார்க்க வழிபாடு எம் உள்ளத்தில் உறுவதாக. முன்னிருந்தது போல உள்ளமும் உயிரும் ஒன்றுபட்டு இசை பரப்புக.'

'அவ்விசைப் பெருக்கம் உறுக. யாம் பேதைமை யுடையேம், அற்ப மதியுடையேம். அச்சம் நீங்கிய வேளைகளில் நின்னை அவமதிக்கின்றேம். பேதையே மாகிய எமக்குப் பொறையினைத் தந்து உதவுவாயாக. நினது அருளொளியைத் தாங்கும் வலிமையினை நீ படைத்த அற்பமதியினராகிய உலகினரெமக்குத் தந்து உதவி புரிவாயாக.'

'ஏழையேனிடத்துக் காணப்படும் பாவங்களை மன்னித்தருள்வாயாக; (உயிர் வாழத்) தொடங்கியது முதல் எனது தகவுஎன யான் கொண்ட எண்ணத்தினை மன்னித்தருள்வாயாக. மதிப்பு எனப்படுவது மனிதனி டத்துத் தோன்றி ஆண்டவனாகிய நின்னை அடைவ தில்லை.'

'நின்னாற் படைக்கப்பட்டவன், செம்மை நலம் உடையோயென ஏழையேனால் மதிக்கப்பட்டவன், அவனது பிரிவினாலே என்னுள்ளத்தில் எழுந்த துயரினை மன்னித்தருள்க. அவன் நினது (திருவடி) நிழலிலே வாழுகிறான் என அடியேன் நம்புகிறேன். ஆதலினாலே, அவன் முன்னையிலும் பார்க்க எனது அன்புக்குப் பாத்திரவான் ஆயினான் என நான் காண் கின்றேன்.'

'சீரற்று அலையும் இவ்வவல இசைகளை மன்னித் தருள்க. நலமின்றிக் கழிந்த இளமையின் பெறுபேறாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை எய்தின. எவ்வெவ்விடத்தில் அவை உண்மை நெறியிற் பிறழ்கின்றனவோ, அவ்வவ்விடத்தில் அவை தம்மை மன்னித்தருள்க. ஞானமுடையாய்! அடியே னுக்கு ஞானத்தைத் தந்தருள்க.'

இப்பெருங்கவி இயற்றிய 'உலீசஸ்' என்னும் செய்யுள் வீரச்சுவை செறிந்தது"

தெனிசனைப் போன்ற சீரிய ஒழுக்கம் வாய்ந்தவர் என்று றபர்ட் பிறௌணிங்கை போற்றுகிற அடிகளார் அவர்தம் ''ஆழியும் பனுவலும்'' என்ற பெருங்காப் பியத்தை உயர்ந்த கருத்துடைய படைப்பாக மதிப்பீடு செய்கிறார்.

அயர்லாந்து நாட்டில் பிறந்து உலக இலக் கியத்தையே தமது குத்தலான, வீச்சுமிக்க நாடகங் களால் அதிரச் செய்து கொண்டிருந்த நாடகாசிரியரான ஜார்ஜ் பெர்னாட்ஷா அடிகளார் காலத்தவர். அவரை வியக்கிறார் அடிகள், ''ஷா என்னும் நாடகா சிரியர் எண்பது ஆண்டு நிறைந்தவராயினும் இன்றும் சுவைமிகுந்த புதுநாடகங்களை ஆக்கித்தருகின்றார்."

அப்போது ஆங்கிலத்தில் எழுதிவந்த கவிக்குயில் சரோஜினி தேவியை, 'ஆங்கில மொழியில் அழகிய பனுவல்கள் செய்தவராக' அடிகள் புகழுகிறார். தம் காலத்துக் கவிஞர்களை அவர்கள் இளையவராயினும் சரி, முதியோராயினும் சரி உற்சாகப் படுத்தி எழுத வைப்பதில் அடிகளார் என்றும் ஒரு ஒப்பற்ற இடத்தை வகிக்கிறார். அடிகளார் காலத்தில் வெள்ளகால் சுப்பிரமணிய முதலியாரின் தனிப்பாடல் தொகுதி வெளி யாயிற்று அதைப்பற்றி அடிகளார் பின்வருமாறு குறிப் பிட்டு முதலியாரை மேன்மைப் படுத்துகிறார்.

''...'புதுவது கிளந்த யாப்பின் மேற்'றாகிய கவிதை பெருவரவிற்றாகிய இக்காலத்திலே, தொன்மை நலஞ் சிறிதுங்குன்றாத செய்யுள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும் புலவர் மிகச்சிலரேயாவர். அப்புலவர் வரிசையிலே முதற்கண்வைத்து எண்ணுதற்குரிய வெள்ளகால் கிழார் இயற்றிய தனிச் செய்யுள கத்துக்காணப்படும் கவியழகுகள் பலதுறைய"

அடிகளார் போற்றிய மகாகவிகள் - கம்பன் முதல் வள்ளுவன் வரை, ஹோமர் முதல் ஜார்ஜ் பெர்னாட்ஷா வரையுள்ள கவிஞர்களில் பெரும்பாலானவர்களின் குணநலனிலே ஒரு பொதுப்பண்பு இருப்பது தெரிய வருகிறது. இவர்களில் பெரும்பாலோர் தம் காலத்து வழக்கிலிருந்த நிறுவனப் போக்குகளுக்கு எதிராளிகளாக (Anti Establishment) விளங்கினார்கள் என்பதுதான் அது.

தேசாபிமானம் நிறைந்த வால்டர் ஸ்கொட், பொது மக்களுடைய இன்பதுன்பங்கூறிய உவேட்சுவேத், கிரேக்க நாட்டுப் போர்க்களத்திலே உயிர்துறந்த பைரன், துன்புற்றோற் கிரங்கும் நூயஉள்ளம் வாய்ந்த ஷெல்லி, கொடிய அமைப்புகளை எதிர்த்துக் குரலெழுப்பும் பாத்திரங்களுள்ள நாடகங்களை எழுதிய ஷேக்ஸ்பியர், மகாகவி கம்பன், குடிமக்கள் காப்பியம் தந்த இளங்கோ, தேசிய விடுதலைப்போரில் கவிதையும் கருத்தும் பங்களிப்பும் கொடுத்த மகாகவிபாரதியார், இரவீந்திரநாததாகூர் ஆகியோர் அடிப்படையிலே வெவ்வேறு அளவில் நிறுவன எதிர்ப்பாளரே.

அடிகளார் இந்த நிறுவன எதிர்ப்பாளரைப் போற்றி பின்பற்றியதற்கான காரணம் தற்செயலானதல்ல. அடிகளார் பௌராணிகக் கருத்துக்களை எதிர்த்தார்; மனிதனை மனிதன் அடிமை கொள்வதை ஒருசீர்திருத்த வாதியின் மூர்க்கத்தோடு எதிர்த்தார்; மொழி கலாச்சார அடிமைத்தனத்தை எதிர்த்தார்; ஏகாதிபத்திய ஒடுக்கு முறையை எதிர்த்தார், சமய குறுகிய நிலையை எதிர்த் தார். இதன் காரணமாகவே அடிகளார் தாமும் தம்மை யறியாமலே நிறுவன எதிராளியானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'அம்முயற்சியில் உயிர் போனாலும் போகட்டும்'

அடிகளார் ஆசிரியரராகவே தன் பொது வாழ் வினைத் தொடங்கினார். அந்தவேளையிலே விவேகானந்தார் அடிகளை வசீகரித்திருந்தார். அடிக ளார் நம் காலத்து சகல அடிமைத்தனங்களையும் அடியோடு நிராகரித்து வெறுத்தொதுக்குகின்றார். அவர் சூளுரைக்கின்றார் :

''கவிநய வினிமையையும் பிறவினிமையையும் தருகிற அகப் பொரு ணறவினை யுண்டு மதுவுண்டு மயங்கிய வண்டைப் போலச் செயலின்றிக் கிடந் தோம்; அடிமைத்தன்மையும் வந்தெய்திற்று ஐயோ! இந்நிலைமை யினி வேண்டாம். வீரத்தை யும் ஆண்மையையுந் தருகிற புறப்பொருளை நாடு வோம். தவராஜசிங்கமாகிய விவேகாநந்த சுவாமி சொல்லுகிறார்; 'எழுந்திருங்கள். சோம்பலையும் மூடத்தனத்தையும் வீசியெறிந்துவிட்டு வெளியே உலாவி உலகத்தின் ஏனைய பாகங்களிலுள்ள மாந் தர்கள் முன்னேற்றமடைந்து கொண்டு போவதைப் பாருங்கள். எத்தனை நாளைக்கு மூலையில் ஒதுங்கிக் கிடக்கப்போகிறீர்கள். நீங்கள் சுத்த வீரர்களின் வழிப்பிறந்தவர்கள் என்பதை மறந்து விட்டீர்களா? சூரனுக்கு உயிர் துரும்பு; தேசமுன்னேற்றத்துக்காக உயிரையும் கொடுக்கத்தயாராயிருக்கும் ஆயிரக் கணக்கான பேர் முன்வரவேண்டும். மேனிலையை யடைவதற்கு முயலுவோம். அம்முயற்சியில் உயிர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனாலும் போகட்டும் முந்நாளில் இருந்த நமது தமிழ் நாட்டுத் தாய்மார் எவ்வளவு வீரம் படைத்தவராக விருந்தார்கள்."

''தன் காலத்தில், ''...பாடாண்டிணையை யவமதித்து ஆண்மையில்லா அசடர்களுக்குப் பாட்டிசைத்து அவர் தலைக் கடையிற் காத்திருந்து வன் சொற்களையே பரிசிலாகப் பெற்று மீளுகிற தமிழ்வாணர்" வாழும் தரங்கெட்ட நிலையினை அவர் கடுமையாகச் சாடுகிறார்.

துணிவும் அறிவும் முதன்மை பெறாத சமுதாயம் மேனிலை அடையமுடியாதென்பது அடிகளார் கருத்து. இதனாலே தன்காலத்து அரசியல் போக்குகளையும் அடிகளார் விமர்சிக்கிறார், பண அடிப்படையிலேயே அரசியல்வாதிகள் முதன்மை எய்துவதையும், கல்வியாளர் புறக்கணிக்கப்படுவதையும் அடிகளார் பின்வருமாறு வெறுப்போடு குறிப்பிடுகிறார் :

''இந்நாளிலுள்ள சட்டசபையில் விசுவாமித்திரருக்கும் வசிட்டருக்கும் இடமில்லை; இவர்கள் பொன்னில்லாத துறவிகளாதலின்"

அடிகளார் தம் காலத்து விடுதலைப்போராட்டத்தை நுட்பமாக அவதானித்து வந்தாரென்பதை அவர் ஆசிரியராயிருந்து நடத்திய இதழ்கள் நமக்குமெய்ப்பிக்கின்றன. இந்தியா விரைவில் விடுதலை பெற்றுவிடும் என அவர் நம்புகிறார். தன்காலத்து தேசிய விடுதலை வீரர்களை அவர் அமைதியாகக் கற்கிறார். பின்பற்றுகிறார். அவர்களோடு நெருக்கங்கொண்டு பழகுகிறார். அவருக்கென்று தீவிரமான அரசியல் கருத்திருந்ததென்பதை அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு வேளையின்போது தமது வீட்டில் இந்தியதேசிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காங்கிரஸ் கொடியை ஏற்றிவைத்தச்சம்பவமானது உறுதி செய்யும்.

அவர் தனது கருத்தை உரைக்கும் விதத்திலே பின் வருமாறு கூறுகிறார் :

> ''...காருண்ய அரசாங்கத்தினர் சிறிது சிறிதாக வேனும் நமக்குச் சுயவரசுச் சலாக்கியத்தினைத் தந்து வருகிற இந்த நாளில் அவ்வகையாகிய சலாக்கியத்தைப் பயன்படுத்தவேண்டிய அறிவினை விருத்தி பண்ணிக் கொள்ளுதல் அவசியமல்லவா?''

''கல்வி கேள்விகள் இல்லாதவர்கள் கடவுளை அறிந்து வழிபட்டு உய்யமாட்டார்கள்'' என்று கல்விக்கு குறிக்கோள் கூறினார் ஆறுமுகநாவலர். நாவலரை எல்லா விதங்களிலும் ஏற்றுக்கொண்ட அடிகளார் கல்வியை, தமிழ்க்கல்வியாய் ஆக்கி வழங்குவதற்கான எல்லாப் பிரயத்தனங்களையும் மேற்கொண்டார்.

கல்வி நிறுவனங்களை அவர் செம்மையுற நடத்தினார். காலத்துக்கு உகந்த வகையிலே கல்வித் துறைக்கு பாடத்திட்டங்களை உருவாக்கியதில் அவரது பணி விதந்து சொல்லத்தக்கது. பாலர் வகுப்பில் இருந்து பல்கலைக் கழகக் கல்விரை செழுமைப்பட்ட ஆக்கமான கல்விச்சிந்தனையைத் தம்மிடம் உருவாக்கி வைத்திருந்தார் அடிகளார்.

தாய்மொழிக் கல்வியே உண்மையான கல்வியும் உன்னதமான வழியுமென்பது அவரது நம்பிக்கை. அப்போதைய அரசியல் சூழ்நிலையில் விதேசிய ஆட்சிக்கும் கலாச்சார அம்சங்களுக்குமெதிராக தமிழ்க் கல்வியையும், சமயநெறி உட்பட்ட கலாச்சார அம்சங்களையும் தூக்கிப்பிடித்து முன்னெடுத்துச் செல்வதே காலம் தனக்கு அருளிய கட்டளை என்று அடிகளார் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர், விவேகானந்தர் போன்ற செயல்வேக முள்ள வீரசிங்கங்களே இந்தத் தேசத்தையும். மக்களை யும் காப்பாற்றத்தக்கவர்கள் என்று மீண்டும் மீண்டும் அடிகளார் கூறிவந்தது இதன் காரணமாகத்தான்.

மேற்றிசைச் செல்வங்களைத் தமிழில் வாரிக் கொண்டு வரவேண்டிய அவசியத்தை அடிகளார் காலத் தின் நிர்ப்பந்தக் குரலென அடையாளங் காண்கிறார். இதன் பொருட்டு தம் காலத்தில் நிலவிய தவறான கல்விமுறைகளைச் சாடி, எத்தகைய வழிமுறைகளைக் கல்வித்துறையில் ஆக்கிக் கொள்ளுதல் வேண்டும் மெனத்தகுந்த ஆதாரங்களோடு அவர் குறிப்பிடுகிறார்.

''பண்டை நாளில் நமது முன்னோர் சிறப்புற்றிருந் தாரென்று வாளா புராணம் பாடிக்கொண்டிருப்பதனால் உறுபயன் யாதோ வறியோம். அயனாட்டாரோடு கொள்வனவுங் கொடுப்பனவுஞ் செய்யாதொழியிற் செல்வம் நிலைபெறாது. உயிர்க்குறுதி பயக்கும் நூல்கள் அவரிடத்துள்ளன. நமது உண்மை நூல்களை நாம் கொடுப்பதற்கு முன்னமே அவற்றின் சிறப்பை யுணர்ந்த மேனாட்டார் தாமாகவே யெடுத்துக் கொண்டனர். அவர் பன்னாள் வருந்திச் செய்த அரிய ஆராய்ச்சியின் பயனாகத் திரட்டி வைத்திருக்கிற எண்ணிறந்தனவாகிய கணிதநூல், வானநூல், ஒளிநூல், ஒலிநூல், மின்னியக்க நூல், அனல்நூல், உடல்நூல், மனநூல், சீவநூல், பொருட்டன்மைநூல், இரசாயன நூல், உலகசரித்திரம், பூகோள விவரணம், சிற்பநூல், வர்த்தக நூல், முதலிய வற்றில் ஒன்றையேனும் நாம் தமிழ்ப்படுத்தவில்லை. என்னே, நம் பேதைமையிருந்தவாறு! இங்ஙனஞ் செய்யாதொழிந்தது ஆங்கிலங்கற்ற தமிழ் மக்கள் அனைவர் மேலும் பெருத்த குற்றமாகும். பட்டண வாசிகளாகிய தமிழ்மக்கள் பெரிதும் ஆங்கிலப்பத்திரிகை களையே ஆதரிக்கிறார்கள். தாம் ஆராய்ந்து கண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவுகளை ஆங்கிலமொழியி லெழுதி அம்மொழிக்கே மேலும் மேலும் மதிப்புண்டாக்குகின்றனர். ஆங்கிலத்திற் கவியெழுதவுந் தொடங்கிவிட்டார்கள்; வேறு நாம் பேசுவதென்ன? கவிசிரேஷ்டராகிய ரவீந்திரநாத தாகூர் தமது தாய்மொழியிற் கவியெழுதினமையினாற்றான் உலகத்தாரது நன்மதிப்பைப் பெற்றாரென்பதை ஆங்கிலங் கற்ற தமிழ்மக்கள் அறியார்கள்போலும்! எட்டுமுறை குட்டிக்கரணம் போட்டாலும் தாய்மொழியன்றிப் பிறிதொருமொழியில் அம்மொழியாளரால் முதற்றரத்ததென்று மதிக்கப்படத்தக்க நூலியற்றல் இயலவே இயலாது.

இனி உயர்தரக் கல்விக்கழகங்களிற் கல்வியறிவூட்டும் முறையைப் பார்த்தால் தினையளவுமருந்தைப் பெறுவதற்கு மலைமுழுவதையுஞ் சுமப்பிக்குந் தோற்றமாயிருக்கிறது. யோக்கியதாபட்டம் பெறுவதற்கு முயலுகிற மாணவன் தான் தெரிந்து கொண்ட பொருட்டுறையில் நிறைந்தபுலமையுடையவனாயிருப்பின், ஆங்கிலமொழியிற் சொல்வன்மை யில்லாதவனாயிருப்பினும், தகாதவனென்று தள்ளப்படுகிறான். ஆங்கிலமோ இலக்கண வரம்பில்லாத முரட்டு மொழி; பத்தாண்டு பயிலினும், கருதிய பொருளைத் தெளிவுற உரைக்குஞ் சொல்வன்மையைப் பெறுவது மிகவும் அரிதாகும். தாய்மொழியில் உரைத்தால் இனிமையைப் பயக்கத்தக்க பொருட்டுறைகள் வேற்றுமொழியில் உரைக்கப்படின் வெறுப்பைத் தருவனவாம். இதனால் மாணாக்கன் கற்குங் கல்வியில் மன ஊக்கஞ் செல்லாதவனாக வருந்துகிறான். இன்னோரன்ன பல காரணங்களால் உயர்தரக் கல்வியறிவும் தாய்மொழியிலே ஊட்டப்பட வேண்டுமென்பது மறுக்கொணா உண்மையாயகின்றது. யாம் வடநாட்டுக்குப் போயிருந்தபொழுது ஹரித்துவாரத்தில் ஆரியசமாஜத்தாரால் நடத்தப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருகுலம் என்னும் உயர்தரக் கல்விக் கழகத்தில் இரண்டு நாட்டங்கியிருந்து கலைபயிற்று முறைமையை நன்றாகக் கவனித்துப் பார்த்தோம். பன்னீராட்டைப் பிராயத்துச் சிறுவர்களெல்லாம் வடமொழியில் வசனிக்கவும் நூல்களை வாசித் தின்புறவும்தக்க பாண்டித்திய முடையவர்களாக விருப்பதைக் கண்டு மகிழ்ந்தோம். ஹிந்திபாஷைமூலமாக மேலைத் தேச சரித்திரம், பௌதிகசாஸ்திரம் இவையெல்லாம் உயர்வாகக் கற்பிக்கப்படுகின்றன. இக்கல்விக்கழகத்தில் வித்தியாலங்காரன் எனும் பட்டம்பெற்ற மாணவன் சென்னையில் எம்.ஏ.பட்டம்பெற்ற மாணவனோடு ஒத்துநோக்கப் படிற் குறைந்தவனாகக் காணப்படான். இவன் தாய் மொழியிற் கல்வி பயின்றவனாதலாற் றன்னூர்க்குச் சென்றதும் தான் பெற்ற செல்வத்தைப் பிறரும் அநுபவிக்கும்படி கொடுக்கிறான். இதனால் இவன் பயின்ற கல்வி ஆயிரமடங்கு பயன்றருகிறது. நம் நாட்டில் வறியோர் கொடுக்கும் வரிப்பணத்தைக் கொண்டு உயர்தரக் கல்விச்சாலைகள் நடத்தப்படுகின்றன; ஆதலால் இக்கல்விச்சாலைகளினின்று பிறக்கும் கலையறிவு அனைவர்க்கும் பயன்றருவதன்றோ நீதியும் மரபுமாகும். குஜராத் வித்தியாபீடம், காசி வித்தியா பீடம் இவற்றில் அனைத்துக் கல்வியும் தாய்மொழிமூலமாகவே தரப்படுகின்றன. வங்காளி பாஷையிலும் அநேக உயர்தர மொழிபெயர்ப்பு நூல்கள் வந்துவிட்டன. காளிகட்டத்துச் சர்வகலாசாலையார் தாய்மொழியிலே எல்லாக்கல்வியும் பயிற்றப்பட வேண்டுமென்னும் சட்டத்தைச் சீக்கிரங் கொண்டுவந்துவிடுவார்கள். ஆந்திர கன்னட மலையாள நாட்டாரும் தம் மொழியை வளர்ப்பதில் முன்னேற்றமடைந்து வருகிறார்கள். இவ்விஷயத்திற் சென்னைச் சருவ கலாசாலையாரும் தமிழ்மக்களுமே மிகவும் பிற்பட்டு நிற்கிறார்கள். தமிழில் மொழிபெயர்ப்பு நூலெழுத முன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருபவர் சிலர் நிரம்பிய தமிழறிவின்மையான் ஆங்கில மக்களும் தமிழ்மக்களும் ஒருங்கு வெறுக்கத்தக்க பயற்றுப் பச்சரிசிநடையில் (பைந்தமிழும் வெள்ளையர் ஆங்கிலமும் சரிக்குச்சரி கலந்த நடையைப் பயற்றுப் பச்சரிசிநடை யென்றாம்; மணிப்பிரவாளமென்றாற் போல்) நூலெழுதி முடிக்கின்றார்கள். இவ்வாறெழுந்த நூல்களால் விளையும் பயன் ஒன்றுமில்லை. ஒரோவழி அயனாட்டுச் சொற்களைச் சேர்த்துக்கொள்வதனாற் குற்றமில்லை; முடிந்த நூல் தமிழ் மணங் கமழ்வதாக விருத்தல்வேண்டும். அல்லாவிடில் நின்றுநிலவாது."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்த மேன்மைக் கலைகள்

1938ஆம் ஆண்டிலே திருநெல்வேலியிலமைந் திருந்த சென்னை மகாணத்தமிழ்ச்சங்கம், 'கலைச் சொற்கள்' என்ற நூலினை வெளியிட்டது. சென்னைப் பல்கலைக்கழகம், திருவாங்கூர்ப்பல்கலைக்கழகம், சென்னை அரசியல் முதன் மந்திரி திரு ச இராச கோபாலாச்சாரியர் ஆகியோரின் பொருளுதவி பெற்று இந்த நூல் வெளியிடப்பட்டது.

கலைச்சொற்களை ஆக்க வேண்டுமென்ற தீர் மானம் 1934ஜூன் 10, 11ஆம் திகதிகளில் நடைபெற்ற 'சென்னை மாகாணத்தமிழர் முதலாவது மகாநாட்'டில் தோன்றியது. அதனை நிறைவேற்ற அப்போதே ஓர் உட்கழகம் தோற்றப்பட்டது. அம்மகாநாட்டில் தோன்றிய 'சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கம்' அவ்வுட்கழகத்தினை 14.10.1934இல் கூட்டி, அதற்கு 'சொல்லாக்கக் கழகம்' என்று பெயர் தந்து, கலைச் சொல்லாக்க வேலையைத் தொடங்கிற்று. மெத்த வளரும் மேன்மைக்கலைகளை தமிழில் ஆக்க முடியும் என்ற நம்பிக்கை இவ்விதம் முளை கொண்டது.

'சொல்லாக்கக்கழகம்' தன் பணிகளைத் தொடர்ந் தது. 1936ஆம் ஆண்டிலே, 'தமிழ்க்கலைச் சொல்லாக்க மகாநாடு' சென்னையிலே நடந்தது. சென்னைப் பல் கலைக்கழகம், இலங்கைக் கல்விப் பகுதியினர், தென் னிந்திய ஆசிரியர் சங்கம், தென்னிந்திய சைவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் உள்ளிட்ட பல சங்கத்துப் பிரதிநிதிகள் இம்மகாநாட்டில் பங்கு கொண்டனர்.

தமிழ் அறிவியல், கல்வி, வரலாற்றில் மிக முக்கியத் துவம் வாய்ந்த இம்மகாநாட்டிற்கு விபுலானந்த அடிகள் தலைமை தாங்கினார். திரு கி.பி. ராமசாமி ஐயர் மகாநாட்டைத்திறந்தது வைத்தார். சென்னை அரசியல் முதன் மந்திரி ராஜாஜி, தேவநேயப்பாவாணர், எஸ். வையாபுரிப்பிள்ளை, வெ. ப. சுப்பிரமணிய முதலியார் உட்பட பல கல்விமான்கள் இம்மகாநாட்டில் பங்கு கொண்டனர். துறைகள் நான்காகப் பிரிக்கப்பட்டு மொழிபெயர்ப்பு. கலைச்சொல்லாக்க முயற்சிகளை ஆய்வுசெய்தது, விபுலானந்த அடிகளார், வேதிநூல் துறைக்கு தலைவராக ஏற்கப்பட்டார். இம்மகாநாட்டின் முயற்சியால் மேலே கூறிய 'கலைச்சொற்கள்' நூல் வெளியாயிற்று.

கணிதம், பூதநூல், வேதிநூல், மரநூல், விலங்கு நூல், உடலியலும் நலவழியும், பூகோளம், வரலாறு முதலியன, வேளாண்மை என்ற தலைப்புகளிலமைந்த இக்கலைச் சொல்லாக்க அகராதியின் பொதுத்தலைவ ராகவும், வேதிநூல் தலைவராகவும் அடிகளாரே பணிபுரிந்தார்.

இந்தநூலில் மேற்கூறிய ஒன்பது கலைகளைச் சேர்ந்த பதினாயிரம் சொற்கள் தமிழிலே ஆக்கப் பெற்று இடம் பெற்றன.

'சொற்கள் சுருக்கமாயும். தெளிவாயும், பொருள் பொதிந்தனவாயும் இருத்தல் வேண்டும்; அவை தமிழோடு தமிழாய்க்கலக்கும் இயல்பினவாக இருத்தல் வேண்டும்' என்ற அடிப்படையான கொள்கையோடு இக்கலைச்சொற்கள் ஆக்கப்பட்டிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கொள்கைகளுக்குட்பட பிறமொழிச்சொற்களைக் கையாளவும், கடன் வாங்கவும் ஏற்கனவே வழக்கிலுள்ள பிறமொழிச்சொற்களைப் பயன்படுத்தவும் இந்தத்துறையினர் எதிர்ப்புக்கூறவில்லை.

அடிகளார் இக்கலைச்சொல்லாக்க உருவாக்கத்தில் அயராது உழைத்தார். பலரையும் ஊக்குவித்தார். இம் முயற்சியைப் பிரசாரம் செய்தார். இந்த 'கலைச் சொற்கள்' பாரதியின் ''புத்தம் புதிய கலைகள் — பஞ்ச பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்...'' என்ற 'தமிழ்த் தாய் வேண்டுதலை' முகப்பாகக் கொண்டது,

அடிகளார் மூட்டிய கலைச்சொல்லாக்க ஆர்வம் ராஜாஜியின் வார்த்தைகளில்,

> ''எந்த பாஷையும் அதன் வாயிலாகப் பொருள் களை விளக்க முயன்றா லொழிய, நூல்களுக்கு வேண்டிய மொழிகளும், தொடர்மொழிகளும் அதன் கண் அமைவதில்லை. பொருள்களை எடுத்துக் கொண்டு விளக்க முயன்றால் மொழிகள் தாமாகவே சமைந்து பொங்கும். இவ்வாறே ஆங்கிலத்திலும், பிறமேல் நாட்டு மொழிகளிலும் கலைச்சொற்கள் உண்டாகி அம்மொழிகள் வளர்ச்சியடைந்து வருகின்றன''

என வெளியாகியுள்ளது.

அடிகளார் முன் நின்று உருவாக்கிய 'கலைச் சொற்கள்' இன்றும் புதிதாய், அழகாய் ஆழமாய் விளங்குவது தமிழருக்குப் பெருமையே...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஆயிரம் ஆண்டுகள் கனவாக இருந்தது'

மதுரைத் தமிழ்ச் சங்கத்திலும், கரந்தைத் தமிழ்ச் சங்கத்திலும். சென்னைப் பல்கலைக் கழகத்திலும், யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்திலும், பிற கல்விக் கழகங்களிலும் அடிகளார் பழந்தமிழர் இசைக்கருவிகள் பற்றிய பேருரை நிகழ்த்தினார். இவ்வுரைகள் கரந்தைத் தமிழ்ச்சங்க வெளியீடாகிய 'தமிழ்ப்பொழி'லில் 'பண்ணுந் திறனும்,' 'குழலும் யாழும்', 'எண்ணும் இசையும்','பாலைத்திரிபு' 'சுருதிவீணை' என்னும் தலைப்புகளிலே வெளியாகின.

மதுரைத் தமிழ்ச் சங்கத்து வெளியீடான, 'செந்தமிழி'ல், 'சங்கீத மகரந்தம்', 'இசைக்கிரமம்', 'எண்ணலளவை', என்ற கட்டுரைகள் வெளியாகின. இவை தொடர்பாகச் சென்னை, திருச்சி வானொலி நிலையங்களில் அடிகளார் சொற்பொழிவாற்றினார்.

யாழ்நூல் பற்றிய சிந்தனை தன்மனதில் முகிழ்த்ததற்கும், சிலப்பதிகாரம் மீதுள்ள ஆர்வம் இளவயதில் துளிர்த்தற்குமான காரணத்தை அடிகளார் பின் வருமாறு உரைக்கிறார்:

> ''சாமிநாதையர் அவர்கள் சிலப்பதிகாரத்தினை முதன்முறையாக அச்சிட்டது 1892ஆம் ஆண்டிலாகும், அந்த ஆண்டிலே யானும் பிறந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேனாதலினாலே, பள்ளியிற் படிக்குங் காலத்திலே, மூத்தோர் கையிலே அந்நூற் பிரதியிருக்கக் காண்பதும், என் கையினாலே அதைத் தீண்டுவதும் எனக்குப் பேருவகை தரும் செயல்களாயிருந்தன."

இத்தோடு அருகிருந்த கண்ணகியார் கோவில் சிலப்பதிகாரம் மீது அக்கறையை வளர்த்தது. இவ்விதம் வளர்ந்த ஆர்வமே 'யாழ் நூல்' ஆராய்ச்சியில் அடிகளார் மேலும் ஈடுபடக்காரணமாயிற்று. அவர் பணிசெய்யச் சென்ற இடமெல்லாம் அவரின் கனவுகாரிய சாத்திய மாக ஓயாத முயற்சி - படிப்பு - ஆய்வு என்பன தொடர்ந்தன.

1936ஆம் ஆண்டில் பழந்தமிழரின் இசை, சிற்பம், கலையறிவு என்னும் பொருள்பற்றி அடிகளார் ஆறு தலைப்புகளில் விரிவுரையாற்றினார். சென்னைப் பல் கலைக் கழகப் பட்டிமண்டபத்திலே ஆங்கிலமொழியில் அடிகளார் பேருரையாற்றியதைக் கேட்க, பிறமொழியாளரும் தமிழறிஞரும் வந்திருந்தனர். எல்லா விரிவுரைகளும் ஆங்கில இதழான 'இந்து' (The Hindu)வில் வெளியாகின. இவற்றை அப்படியே நூலுருவாக்கும் படி அடிகளார் கேட்கப்பட்டார். ஆனால் பதினேழு பாடசாலைகளைப் பொறுப்பேற்று நடத்திய அடிகளாருக்கு அப்போது அது சாத்தியமாகவில்லை.

பின்னர் அடிகளார் இமயமலை சென்று 'பிரபுத்த பாரதா' ஆசிரியப் பொறுப்பை ஏற்றார். அந்த ஓய்வு வேளையில் இதுவரை நிகழ்த்திய ஆராய்ச்சிக்கட்டுரை உரைகளின் பிழிவாக 'யாழ்நூலை' உருவாக்கும் முயற்சி அடிகளாருக்குக் கைகூடிற்று.

சர். வால்டர் ஸ்கொட் என்னுங் கவிஞர் தமது தாய் நாட்டிலிருந்து மறைந்துபோன யாழ்க் கருவியினை முன்னிலைப்படுத்தி ஒரு கவிதை எழுதினார். ஸ்கொட் எழுதிய 'நீர்நிலைக் கன்னிகை' (Lady of the Lake) என்ற அந்தக் கவிதை இந்நூலின் 'கவிஞருக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகெல்லாம் உறவே' என்ற அத்தியாயத் தலைப்பின் கீழே உள்ளது. இதை அடிகளாரே மொழி பெயர்த்தார். இதே கவிதையை தனது மன ஏக்கமாகவும் அடிகளார் கருதி, அக்கவிதையை நினைவுகூர்ந்து, ''வடபுலத்து நல்யாழே!, என்றிருப்பது 'தென்புலத்து நல்யாழே' என விருப்பின் பாணரிசைத்த யாழுக்கு இப்பாடல் ஏற்புடையதாகுமன்றோ?'' எனக்கூறுகிறார் அடிகளார்.

''ஐயிரண்டு ஆண்டுகளாக நேரம் கிடைக்கும் போதெல்லாம் முயன்று குருவருளினாலும், தமிழ்த் தெய்வத்தின் கடைக்கண் நோக்கினாலும் இவ் வாராய்ச்சி நூலினை ஒருவாறு எழுதி முடித்தேன்.'' என்று கூறுகிறார் அடிகளார்.

அடிகளாரின் இம்முயற்சி எவ்விதம் கைகூடிற்றென் பதை, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அடிகளார் படத்தை பல்கலைச் செல்வர் தொ. பொ. மீனாட்சிசுந்தரனார் திறந்துவைத்தபோது இரத்தினச் சுருக்கமாகக் குறிப்பிட்டார்.

''விஞ்ஞானம் கணிதம் சங்கத்தமிழ் இவை ஆகிய இவற்றையெல்லாம் அறிந்தவர்கள்தாம் இந்த ஆராய்ச்சியைச் செய்ய முடியும்''

அடிகளாரின் அகன்றஅறிவுத்திறனை 'யாழ்நூல்' தெள்ளத் தெளிவாகத் தெளியவைக்கிறது.

தமது இந்நூலில் அண்டம், ஒளிவேகம், உடுக் கூட்டம் ஆகிய மிகப்பிந்திய வான நூல் முடிவுகளையும், கணித இயலையும் அடிகளார் துணையாக எடுத்துக் கொள்கிறார்.

''பழந்தமிழிசை நூல்கள் வழக்கொழிந்து இறந்தது போல், எண்ணூல்களும் இறந்துபட்டன வாதலின், இசையாராய்ச்சிக்கு வேண்டப்படுவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகிய கணிதநூல் முடிவுகளைப் பிற மொழி வாயிலாகப் பெறுவது இன்றியமையாததாயிற்று." எனவும்

"எண்ணலளவை, இசைக்கணிதம் என்னும் பொருட்கள் இசையாராய்ச்சிக்கு இன்றியமை யாதன." என்றும் நிறுவுகிறார் அடிகளார்.

"அறிவெனப்படுவது அளந்து துணிதல்" (Science is measurement) என்னுங்கருத்தை யாழ்நூலை ஆக்கியபோது செயலாக்கிக்காட்டினார் அடிகளார். இயற்பியல் ஆய்வுகூடத்தில் தமது ஆராய்ச்சியை நிருபணம் செய்தார். இசைக்கோல் (Tunning fork) ஒலியளப்பான் (Sono meter) என்ற கருவிகளையும், மேனாட்டார் வழங்கும் லகு வெண்களையும் (Logarithm) தம் ஆய்விற்கு உதவியாகக் கொண்டார்.

தமது நூலாராய்ச்சி அமைந்தவிதம் பற்றி பின்வரு மாறு கூறுகிறார் அடிகளார் :

"மனத்தின் எண்ணி மாசறத் தெரிந்து கொண்டு இனத்திற் சேர்த்தியுணர்த்தல் வேண்டும் என்று ஆசிரியர் தொல்காப்பியனார் கூறியது இவ்வாராய்ச்சிக்கு வழி காட்டியாயமைந்து நின்றது."

யாழ்நூல், சிலப்பதிகாரத்தில் அரங்கேற்று காதை யினுள்ளே, யாழ் ஆசிரியன் அமைதி கூறும் இருபத் தைந்து அடிகளுக்கு இயைந்ததொரு விரிவுரையாக அமைந்துள்ளது.

இந்நூல் செந்தமிழ்ப் பேரன்பர் கோனூர் சமீன் தார் நச்சாந்துப்பட்டி பெ. ராம ராம. சித. சிதம்பரம் செட்டியார் அவர்களின் பொருளுதவி கொண்டு 1947இல் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிடப் பெற்றது. இந்நூலின் இரண்டாம் பதிப்பு 1974ஆம் ஆண்டு வெளி வந்தது.

இந்நூலின் முகப்பில், 'விபுலாநந்த சுவாமிகள் இயற்றிய யாழ்நூல் என்னும் இசைத்தமிழ் நூல்' எனத் தமிழிலும். 'Yal - Nul,—A Treatise on Ancient Tamil Music' எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

உள்ளே பதிப்புரை, உள்ளுறை, படங்களின் அட்டவணை, Yazh Nool, முகவுரை, சிறப்புப் பாயிரம், நூல் என்ற பகுதிகள் உள்ளன.

அடிகளார் யாழ்நூலை ஏழு இயல்களாகப் பிரித்துள்ளார்.

1) பாயிரவியல், 2) யாழுறுப்பியல், 3) இசை நாம்பியல் 4) பாலைத் திரிபியல், 5) பண்ணியல், 6) தேவாரவியல், 7) ஒழிபியல். இந்த ஒவ்வொரு இயலும் பல உட்தலைப்புகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. அவை பின் வருமாறு:

1. பாயிரவியல்

தெய்வ வணக்கம்.

இசை நரம்புகளின் பெயரும் முறையும்.

இசை நரம்புகளின் ஓசைகளும், அவை தமக்குப் பிற்காலத்தார் வழங்கிய பெயர்களும்.

இயற்கையி னியன்ற விசையும் பண்ணப்பட்ட விசையும் உள்ளத்துணர்வுகளும் மெய்ப்பாடுகளும்; இணை. கிளை, பகை, நட்பு; பண்ணென்னும் பெயர்க் காரணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூவகைத் தானம்; ஆரோசை; அமரோசை; நால்வகைச் செய்யுளியக்கம்.

தேவபாணியும் பரிபாடலும்.

மிடற்றுப் பாடலுங் கருவிப் பாடலும்.

பாணர் வரன்முறை.

திணைக்கருப் பொருளாகிய யாழின் பகுதி.

யாழ்க் கருவியின் தெய்வநலம்; இக்கருவி தமிழ் நாட்டிலிருந்து பிற நாடுகளுக்குப் பரவிய வரன் முறை.

நூல் தோன்றிய வரன்முறையும், அவையடக்கமும் நூற்பயனும்.

இச் செய்திகள் அனைத்தையும் சங்க மற்றும் காப்பிய இலக்கிய நூற் சான்றுகளோடு வடமொழியில மைந்த இசை இலக்கண நூற்களுடன் ஒப்பிட்டு ஆராய்ந்திருக்கின்றார்.

2. யாழுறுப்பியல்

வில்யாழ்

பேரியாழ்

மகரயாழ்

சீறியாழ், செங்கோட்டியாழ்

சகோடயாழ்

இந்த யாழ்களின் உறுப்புக்களாக பத்தர், கோடு, வறுவாய், போர்வை தோல், யாப்பு, உந்தி, மாடகம், கவைக்கடை மற்றும் இவற்றின் பயன்பாடுகள் அவற்றுக்கு உரிய படங்களுடன் விளக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3 இசை நரம்பியல்,

பூதநூல்; அளக்கும் முறையும் அளவுகோலும், ஓசை யினியக்கமும் வேகமும்: துளைக்கருவி யிலக்கணம், கட்டளை யாழ்.

நரம்பின் முதலிசையைச் சார்ந்து தோன்றும் வழி இசைகள்.

கிளைமரபாக இசை கூட்டம் முறை; ஏழிசை களின் பிறப்பு; அல கெண்ணும் அலகு நிலை யெண்ணும்.

கிளை யியைபினாற் பிறக்கும் பதினோரிசை நிலைகள்; நட்பியைபு: நட்பியைபினாற் பிறக்கும் பதினோரிசை நிலைகள்; மேனாட்டில் வழங்கும் விளரிக்கிரமம்; சுருதி வீணை.

இசை நரம்புகளின் சிற்றெல்லையும் பேரெல்லையும் ஏழு தானங்கள்; முற்றிசையின் பிரிவுகள்; பன்னிரு வீட்டிலும் இசைநரம்புகள் நிற்கும் முறை.

4. பாலைத் திரிபியல்

பாலை யென்னும் சொல் வழக்கு; ஏழ் பெரும் பாலை; இசை நிலை யிராசிகள்.
பன்னிரு பாலை (பொது வுருவங்கள்).

ஏழ் பெரும் பாலைகளை மூன்று கிரமங்களிலும் நிறுத்தல்.

மூன்று கிரமங்களிலும் பன்னிரு பாலை களையும் கருவியிலே தோற்றுவித்தல்; வட்டப் பாலை இடமுறைத் திரிபு; எதிர் நிரனிறைப் பாலைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துத்தக் கிரமம், விளரிக் கிராமம். புதிய விளரிக் கிரமம், கிரமங்களுக்கிடையே யமைந்த தொடர்பு சகோட யாழ்க் கருவிக்கு இசை கூட்டுதல்

அரங்கேற்றுக் காதையில் யாழாசிரியனமைதி கூறிய செய்யுட் பாகத்துக்கு உரை.

5. பண்ணியல்

நாற் பெரும்பண்; இருபத்தொரு திறம்: பெரும் பண்ணும் திறமும் அகநிலை, புறநிலை, அருகியல், பெருகியல் என வகைப்படுதல்,

பாலை நிலையும் பண்ணு நிலையும்.

ஐந்து கிரமங்களிலும் ஏழ்பெரும் பாலை களெய்தும் இசை நிலை.

பன்னிரு பாலையினுரு; திணைப் பண்களின் பாலை நிலையும் நரம்படைவும்.

நூற்றுமூன்று பண்களின் பாலை நிலைகளைச் சுருதி வீணையிலமைத்துக் காட்டல்.

பழந்தமிழிசை மரபிற்கும் வடநாட்டிசை மரபிற்கு மிடையே அமைந்த தொடர்பு.

ஆய்ச்சியர் குரவை - முல்லைப்பண்; வேனிற்காதை மருதப்பண்; திரிகோணப் பாலை; சதுரப் பாலை இடைக் காலத்து வழக்கில் நாற்பெரும் பண்களின் நால்வகைச் சாதிகள்.

6. தேவாரவியல்

இசைப்பா வகை; தேவாரம் என்னும் பெயர்க் காரணம் கட்டளை வகை.

யாப்பமைதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணும் இரதமும் தாளமும் என்னும் மூவகைப் பாகு பாடு.

இசை யமைதி.

சங்கீத ரத்னாகரத்திற் கண்ட சில தேவாரப் பண்கள்.

7. ஒழிபியல்

எண்ணலளவை; இசைக்கணிதம்; நாற்பத்திரண்டு. இசை நிலைகள் (சுருதிகள்).

கிரம வழக்கு வேறுபட்ட இடைக்காலத்துச் சுருதிகள்; அஹோபல பண்டிதரும் வேங்கட மகியும் கொண்ட சுருதிகள்.

கொங்கு வேளிர் பெருங்கதையினுட் குறிப்பிட்டதும் ஆயிர நரம்பு தொடுத்தியன்றதுமான பெருங்கலம் என்னும் பேரியாழ்.

குடுமியா மலைக் கல்வெட்டு.

இக்காலத்தில் தென்னாட்டிசையில் வழங்கும் எழுபத்திரண்டு மேள ராகங்களின் மூர்ச்சனைகள்; மகரந்தமும் இரத்தினாகரமும் கூறிய காந்தாரக் கிராமத்தின் முர்ச்சனைகள்.

அலங்காரங்கள்.

தாள வமைதி.

இசை நூல் வரன்முறை.

முடிவுரை.

சேர்க்கையாகப் பின்வரும் விடயங்கள் உள்ளன:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகிய நாச்சியார் முன்னிலைப் பரவல்.

தேவார இசைத்திரட்டு.

இசை நாடகச் சூத்திரங்கள்.

அடியார்க்கு நல்லார் காட்டியவை.

அரும்பதவுரையில் மட்டும் காணப்படுபவை.

பிங்கல நிகண்டிற் காண்பவை.

## THE HARP WITH A THOUSAND STRINGS.

வட இந்தியாவிலிருந்து திரும்பி வந்த அடிகளார் உடல் நலிவுற்றார். பித்த வாத சுரத்தால் வருந்தினார். எனினும் அவரது மனம் 'யாழ் நூல்' அச்சாகி வெளி வருவதிலேயே அக்கறை கொண்டிருந்தது.

அடிகளே சொல்கிறார்:

> "...உடல்பெரிதும் தளர்ச்சியுற்றது. அந்நிலையில் திருவாளர் சிதம்பரஞ் செட்டியார் அவர்களும் பிற அன்பர்களும் நோய் நீங்குவதற்கு தாங்கள் செயற்பாலது யாது என வினவினார்கள். யாழ் நூலினை அச்சேற்றுதலே என்னுடைய உள்ளத்திற்கு ஆறுதளிக்கும் செயலாகுமென்று விடை பகர்ந்தேன். முதல் நான்கு பக்கங்கள் அச்சிட்டு அனுப்பப்பட்டன. இறையருளால் நோயும் நீங்கிற்று.."

அடிகளாரின் இந்த அரிய ஆராய்ச்சி, தமிழர்களால் இன்னும் சரிவர உணரப்படவில்லை என்றே தோன்றுகிறது. வெற்றாரவாரங்களும், அறியாமையுமே சகல நிலையிலும் குடியமைந்த நிலை மாறி, அறிவு மீதூரப் பெறும் நாளிலே அடிகளாரின் மேன்மையையும், மேதையையும் தமிழர்கள் புரிந்து கொள்வார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது மட்டுமே நம்பிக்கை. ஆனால் அடிகளார் இதைப் பற்றி அறிந்திருந்தாராதலால், அவர் மனம் இம்மியும் கவலையடையவில்லை. அவரது கவலையெல் லாம் இசையாராய்ச்சியை மேலும் தொடர வேண்டும் என்பதுதான்.

'யாழ்நூலி'லேயே தன் ஆதங்கத்தையும் அடி களார் பின்வருமாறு வெளியிடுகிறார்:

> ''பூதநூலறிவென்பது புத்தகத்தை நெட்டுருப் பண்ணிப் பெறுதற்குரிய அறிவன்று. அதற்கென அமைந்த கருவிச்சாலையினுள்ளே புகுந்து, கருவி களைப் பயன்படுத்தி, அளக்கும் முறையறிந்து அளந்து, அளந்து கண்ட முடிபுகளிலே அமைந்து நின்ற விதிகளை ஓர்ந்துணர்ந்து, தீர்ப்பிடுவதுவே பூத நூலிலும் பிற அறிவியல் நூல்களும் கற்றற் குரிய மரபாகும்..."

> ''சிறப்புடையுயிர்கட்குக் கண்ணென்று சொல் லப்படும் கணித அறிவு மேனாட்டு மொழிகளிலே எவ்வளவு பரந்துகிடக்கிறது! அணு முதல் அண்ட மீறாகவுள்ள பொருள்களை யளந்தறியவும், எந்திர வண்டி, மரக்கலம், வானவூர்தியென்று மிவற் றினை யமைக்கவும், முன்பு காணப்படாத நாண் மீன்களும், கோண்மீன்களும், வால் வெள்ளிகளும் இன்னநாளிற்றோன்றுவவெனக் கணித்தறியவும் இயன்ற கணிதமுறைகளும், நாம் மேலே குறிப் பிட்ட பூதநூற்றுறைகள் வெளியிடும் உண்மைகளை ஆராய்ந்து முறைப்படுத்திப் புத்தம் புதிய உண்மை களைக் காணுதற்கியன்ற கணிதமுறைகளும் எத்தனையோ பலவாக மேனாட்டு மொழிகளிலே பரந்து கிடக்கின்றன. அவைதம்மைத் தமிழ்நூற் கருவூலத்திலே சேர்த்துவைத்தற்கு நாம் முயலுதல் வேண்டும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'இன்றியமையாத இன்னொரு முயற்சி'

''வடமொழியாசிரியராகிய தனஞ்சயனாரும் ஆங்கில மகாகவியாகிய செகசிற்பியாரும் செவ்விதினுரைத்த நுண் பொருள்முடிவுகளை நிரைபட வகுத்து முறைபெறக் கூறுதற்கு முயன்றேனாயினும், ஆங்கம் முயற்சிக்கு வேண்டிய ஓய்வு ஏற்படாமையினால் இந்நூல் இவ்வுருவத்தில் முடிவு பெற நேரிட்டது. மேனாளில் ஓய்வு ஏற்படுமாயின் வழுக்களைந்து புதுக்கி விரிவுறவழுதியுலக்களித்தல் என்கடனாகும்.''

''தசரூபகத்தை தனிநூலாகத் தரல்வேண்டுமென்றும், செகசிற்பியாரது நாடகங்களை விரிவுற மொழி பெயர்த்து வெளியிடல் வேண்டுமென்றும், நண்பர் பலர் கூறிய ஊக்கவுரைகள் என்னுள்ளத்திற் பதிந்து கிடக்கின்றன; காலம் வாய்ப்பின் இயன்றவை புரியப் பின்னில்லேன்''

என்று 'மதங்கசூளாமணி' என்ற நமது நாடகத் தமிழ் நூலின் முன்னுரையிலே எழுதுகிறார் விபுலானந்த அடிகள்.

மதங்கர்—கூத்தர்; அன்னாருக்கு ஒரு சிரோரத்தினம் போன்றவரை மதங்கசூளாமணி எனல் பொருத்தமாகும் என்று கூறுகிறார் அடிகளார்.

1926ஆம் ஆண்டில் மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடான செந்தமிழின் 21ஆவது பிரசுரமாக வெளியான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மதங்க சூளாமணி' முன்னுரையில் அடிகளார் தொடர்ந்து கூறுகிறார்.

> ''உலக வாழ்க்கையை நாடகமாகக் கற்பித்துக் கூறிய இக்கவிவாணர் வனப்பு மிக்க நாடக நூல்கள் பலவற்றை உலகுக்கு அளித்துள்ளார். அஃதன்றி, அரங்கினுட் புகுந்து தாமும் கூத்தருள் ஒருவராக நின்று நடித்துள்ளார். நாடகக் கவிகளுள் இவருக்கு ஒப்பாரும் மிக்காரும் பிறரிலர். ஆதலால் ஷேக்ஸ் பியர் என்னும் இயற்பெயர் பூண்ட இக்கவி வாணரை யாம் மதங்கசூளாமணியென வழங் குவாம். இவரது நாடகங்களுள் அமைந்துகிடந்த வனப்பினுட் சிலவற்றை யாராயப்புகுந்த விவ்வுரைத் தொடரும் மதங்கசூளாமணியென வழங்கப் பெறும்''

உலக இலக்கியப் பரப்பில் ஷேக்ஸ்பியரை கொடு முடியாகக் கருதுகிறார் அடிகளார். கம்பனையும் ஷேக்ஸ்பியரையும் பயின்று மகிழ்ந்தஅவர், ஷேக்ஸ்பியர் நாடகங்களைத் தான் ஆய்வுக்கெடுத்துக் கொண்டதற் கான காரணத்தை 'மதங்கசூளாமணி'யில் பின் வருமாறு விளக்குகிறார்.

> ''கம்பநாட்டாழ்வார் அகலக்கவிகளுள் முதன்மை பெற்று விளங்குவது போலச் செகசிற்பியார் நாடகக்கவிகளுள் முதன்மை பெற்று விளங்குகிறார். இவர் அமைத்த நாடகநூல்கள் தமிழறிஞர் வகுத்து வைத்த சந்தியுஞ் சுவையும் சத்துவமும் பிறவுமென்னும் நாடகவுறுப்புக் களனைத்தும் செவ்விதினமைந்து கிடக்குமியல்பின வாதலின், அவற்றையாராய்தல் நாடகத் தமிழாராய்ச்சிக்கு இன்றியமையாததாமென எனது உள்ளத்துக்குப் புலப்பட்டது!''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழில் வழங்கிய இசை நுணுக்கம், யாமளேந் திரரின் இந்திரகாளியம், அறிவனார் செய்த பஞ்சமரபு, ஆதிவாயிலார் இயற்றிய பரதசேனாபதீயம், மதிவாணர் செய்த நாடகத் தமிழ்நூல் என்பன அடியார்க்கு நல்லார் காலத்தில் வழக்கிலிருந்து இறந்து போயின. இந்நூல் களில் இருந்து எடுத்தாளப்பட்ட சூத்திரங்களில் சில அடியார்க்கு நல்லாருரையால் அறியப்படுகின்றன. அவற்றாலுணரப்படும் இலக்கண மரபுக்கு இலக்கிய மாகிய நாடகங்கள் இறந்தொழிந்து போயின.

இந்தச்சூழல் அடிகளாரை செயலுக்குத் தூண்டிற்று. அதன் விளைவே அவரை 'மதங்கசூளாமணி' யை எழுத வைத்தது.

மதங்கசூளாமணியின் உள்ளுறு பொருள் வகை பின் வருமாறு அமைந்துள்ளது.

முகவுரை

நூல்

**உறுப்பியல்**

இயல் வகை, முத்தமிழ்த்தன்மை, நாடக உறுப்பு முதலான பன்னிரெண்டு உட்பிரிவுகள்.

**எடுத்துக்காட்டியல்**

செகசிற்பியார் வரலாறு, மற்றும் அவரது பன்னிரு நாடகங்களின் அறிமுகமும் சுருக்கமான மொழி பெயர்ப்பும், நாடகத்தன்மை குறித்த பன்னிரெண்டு உட்பிரிவுகள்.

**ஒழிபியல்**

தசரூபக வரலாறு, தசரூபகம், நாட்டியத்தின் வரைவிலக்கணம் உட்பட்ட எட்டு உட்பிரிவுகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகமரபுகள், அமைப்புமுறை, அரங்கமைப்பு ஆகியனவற்றை அடிகளார் மிக நுட்பமாக இந்நூலில் வகுத்தளிக்கிறார். அத்தோடு, "பிறமொழியாளர் வகுத்துரைத்த நாடகநூலுள் ஏற்பனவற்றைக் கொள்ளு வதால் எய்துவதோர் இழுக்கில்லை" என்றும் கூறுகிறார்.

ஷேக்ஸ்பியர் இயற்றிய நாடகங்கள் பன்னிரண் டினை சந்தியும் சுவையும் நோக்கி ஆராய்ந்து, நூலின் ஒழிபியலில் நாடக விலக்கண முடிபுகளை அடிகளார் ஆராய்ந்து நிறுவுகிறார்.

ஷேக்ஸ்பியரின் 45 நாடகங்களில் பின்வரும் பன்னி ரண்டினையும் அடிகளார் இந்நூலில் எடுத்து ஆய்வு செய்கிறார். அவையாவன, ஷேக்ஸ்பியர் எழுதிய முதல் நாடகமான LOVE'S LABOUR'S LOST, KING LEAR, ROMEO AND JULIET, THE TEMPEST, MACBETH, THE MERCHANT OF VENICE, AS YOU LIKE IT, THE WINTER'S TALE, TWELFTH NIGHT OR WHAT YOU WILL.

இந்நாடகங்களில் மூன்றைத்தவிர ஏனைய ஒன்பது நாடகங்களின் கதாபாத்திரங்களுக்கும் தமிழ்ப்பெயரே வழங்கப்பட்டுள்ளது.

இந்நூலில் எடுத்தாளப்படும் மற்றநூல் முஞ்ச ராஜனது சமஸ்தான வித்துவானாக விளங்கிய வட மொழிப்புலவரான தனஞ்சயனால் எழுதப்பட்டது.

வடமொழிப் புலவோரின் பரதநூல், நாட்டிய சாஸ் திரம் என்பனவற்றில் பொதிந்து கிடந்த அரிய இலக் கணங்களை யெல்லாம் தொகுத்து ஆழமும் சுருக்கமும் நிறைய எழுதப் பெற்றதே தனஞ்சயரின் தசரூபம் அல்லது தசரூபகம் என்ற நாடக இலக்கணநூல். இந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் நான்கு அதிகாரங்களைக் கொண்டது. இந்நூலில் அடிகளார் மொழிபெயர்ப்பினோடு முதனூற் சூத்திரங் களையும் கொடுத்துள்ளார்.

அடிகளாரின் ஆங்கில, வடமொழி - சங்கநூற் பயிற்சியின் உன்னதத்தை மதங்கசூளாமணி தெற்றென எடுத்துச் சொல்கிறது.

நாடக வியலினை ஆராயப்புகுந்த இந்த ஆராய்ச் சியை 1924இல் நடந்த மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் இருபத்து மூன்றாவது ஆண்டு 'மகாநாட்டில், மகோ மகோபாத்தியாய சாமிநாதையர் தலைமையில் அடிகளார் வெளியிட்டார். அங்கு குழுமியிருந்த அறிஞர் கள் இதை நூலுருவாகக் கொண்டு வரும்படி வேண்ட அடிகளார் மதுரையிலிருந்தே இந்நூலை எழுதிமுடித் தார்.

மொழியறிவும், நாடகப்புலமையும், ஆய்வுத் திறனும் கொண்ட இந்நூலை அடிகளார் வெளியிடும் போது அவருக்கு வயது முப்பத்துநான்கு.

□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'ஆழம் தர்க்கம் ஞானம் எழுத்து'

அடிகளார், இராமகிருஷ்ண மடவெளியீடுகளான 'ஸ்ரீ இராமகிருஷ்ண விஜயம்,' 'VEDANTA KESARI', 'PRABUDDHA BHARATHA' என்ற இதழ்களுக்கும் கொழும்பு விவேகானந்த சபையின் இதழான 'விவேகானந்' தனிற்கும் ஆசிரியராக இருந்தார். 'தமிழ்ப் பொழில்', 'செந்தமிழ்', 'குமரன்,' 'கலைமகள்', 'பஞ்சாமிர்தம்', 'MODERN REVIEW', 'CALCUTTA REVIEW' மற்றும் சென்னை, அண்ணாமலைப் பல் கலைக்கழகப் பிரசுரங்கள், 'ஈழகேசரி', 'இந்துசாதனம்' 'YOUNG HINDU' இந்து வாலிபர் சங்கப்பத்திரிகை ஆகிய இதழ்களில் அவரது கட்டுரைகள் வெளியாயிருக் கின்றன.

இவற்றில் 'பிரபுத்த பாரதா' என்ற இதழில் அடிகளார் ஆசிரியராக இருந்த காலம் அவரது பத்திரி கைத்துறை வாழ்விலே முக்கியமானது.

'பிரபுத்த பாரதா' விவேகானந்த அடிகளின் ஆலோசனைப்படி இளைஞர்களுக்காக 1896ஆம் ஆண்டு ஜுலைமாதம் தொடங்கப்பட்ட இதழ். ஆன்மீகமும் தேசாபிமானமும். இளைஞர்களிடம் கிளர்ந்தெழ வேண்டு மென்பது இதன் நோக்கம். இவ்விதழின் முதலாவது ஆசிரியர், பி.ஆர். ராஜம் ஐயர் (1872—1898) முதல் தமிழ் நாவல்களில் ஒன்றான 'கமலாம்பாள் சரித் திர'த்தை எழுதியவர். இவ்விதழில் ஐயர் 'வேதாந்தமும்

இன்—8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்கரவர்த்திகளின் சக்கரவர்த்தியும்' என்ற கட்டுரையை எழுதினார். இக்கட்டுரை பிரிட்டிஷ் அரசருக்கு எதிரான தென்று கூறி, ஐயரை கைது செய்ய ஆட்சியாளர் பிடி ஆணையுடன் அவரது வீட்டுக்குச் சென்றிருந்தனர். ஆனால் அப்போது ஐயர் அகாலமரணமடைந்து இரண்டு நாட்களாயிருந்தன.

இந்தப் பாரம்பரியமுள்ள இதழுக்கு அடிகளாரை ஆசிரியராக மடத்தினர் தேர்வு செய்தமைக்கு அடிகளாரின் தனித்த ஆளுமையே காரணம். துணிவும் உறுதியும் எழுத்தாற்றலுமிக்க ராஜம் ஐயரின் பிரதியீடாக, பத்திரிகைத்துறைக்கு அடிகளார் மதிக்கப்பட்டார்.

அடிகளாரின் பத்திரிகை எழுத்து மிகவும் கூர்மையுடையது. ஆழமானது. தர்க்கவாதமும் ஞானமும் செறிந்தது.

அடிகளாரின் காலத்தில் தமிழ் உரைநடை பன்முகப் போக்கினை நோக்கி வளர்ந்து கொண்டிருந்தது. 'பத்மாவதி சரித்திரம்' எழுதிய மாதவைய்யா (1872—1925)' பஞ்சாமிர்தம்' என்னும் பத்திரிகையை நடத்திக் கொண்டிருந்தார். அடிகளார் இவ்விதழில் பிளேட்டோ எழுதிய 'பாங்க் வெட்' என்ற நூலை 'பாவலர்விருந்து' என்ற தலைப்பில் மொழிபெயர்த்தார். பிளேட்டோவினது பழமையான மொழிநடையை செழுமை வாய்ந்த இன்னொரு மொழியின் வழியால் அழகும் அர்த்தமும் நிறைய அடிகளார் ஆக்கம் செய்தார்.

இக்காலத்திலே வடுவூர் துரைசாமி ஐயங்கார் (1880—1942), ஆரணிகுப்புசாமி முதலியார் (1867—1925) கா. சி. வேங்கடரமணி (1891-1991) வை மு. கோதை நாயகி அம்மாள் (1901—1960) ஆகியோர் நாவல்கள் பெருமளவில் வெளியாகிக் கொண்டிருந்தன. இவர்களின் தரம் வெவ்வேறாயினும் அதிக வாசகர் கூட்டத்தைப் பெற்றிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தி. நா. சுப்பிரமணியன், எஸ். வையாபுரிப் பிள்ளை, புரசு பாலகிருஷ்ணன், ந. பிச்சமூர்த்தி, ரா. கிருஷ்ணமூர்த்தி, புதுமைப்பித்தன், கு.ப. ராஜ கோபாலன், பெ. கோ. சுந்தரராஜன், ந. சிதம்பர சுப்பிரமணியன், சி. சு. செல்லப்பா, குகப்ரியை, ஈழத்தைச் சேர்ந்த சம்பந்தன், எஸ். வைத்தியலிங்கம், இலங்கையர் கோன் என்று ஒரு எழுத்தாளர் பட்டாளமே சிறுகதைகளை எழுதிக் கொண்டிருந்தது. இவர்களில் பலரும் 'கலைமகள்' எழுத்தாளரே.

அடிகளாரும் 'கலைமகள்' இதழோடு தொடர்பு கொண்டவர்தான். அவ்விதழில் 'சோழ மண்டலத் தமிழும் ஈழமண்டலத்தமிழும்', 'தமிழில் எழுத்துக்குறை' என்ற கட்டுரைகளை அடிகளார் எழுதியுள்ளார்.

அடிகளார் தன் காலத்துத் தோன்றிய உரைநடை இலக்கியத்தை நன்கு கவனித்து வந்தார் என்பதற்கு ஆதாரங்கள் உள்ளன. அவரது விவேகானந்தர் இலக்கிய மொழி பெயர்ப்பு உயிர்ப்பு நிறைந்திருந்தது.

தாகூரை அடிகளார் அவர் கவிதைக்காக மட்டு மன்றி நவீனங்களுக்காகவும் நேசித்தவர்.

விவேகானந்தர் - சரத்சந்திரரின் பரஸ்பர ஈடுபாடு போல அடிகளாரும் இலக்கிய நடையில் எழுதியவரும் நடமாடும் வாசக சாலை எனப்பெயர் பெற்றவருமான சுன்னாகம் அ. குமாரசாமிப் புலவருடன் (1855-1922) நெருங்கிய நட்புக் கொண்டிருந்தார். இலக்கிய விசாரம் நட்பின் ஆதாரமாயிருந்தது.

1942ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் தமிழ் இளைஞர்கள் பலர் சேர்ந்து 'மறுமலர்ச்சிச்சங்கம்' என்ற இலக்கிய சங்கத்தை நடத்திவந்தார்கள். அச்சங்கத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிகளார் பேச ஏற்பாடாகியது. எழுத்தாளர் அ.செ. முருகானந்தம் அக்கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தார்.

முப்பது எழுத்தாளர்கள் கலந்து கொண்ட இக் கூட்டத்தில், எல்லோரும் தரையில் உட்கார்ந்திருந் தனர். அடிகளாரும் அவர்களுக்கு நடுவே தரையில் உட்கார்ந்திருந்தார். அவர்களிடையே அடிகள் பின்வரு மாறு பேசினார்:

> "நீங்கள் உங்கள் மனோதர்மத்தின் படி நன்றாக எழுதுங்கள்; புதியன புதியனவாக எழுதித் தமிழை வளருங்கள். ஆனால் மற்றவர்களைக் கண்டிக்கத் துணியாதீர்கள். சொந்த மண் மணம் வீசும் சிறு கதைகளையும் நாவல்களையும் அதிக மாக எழுதுங்கள். எழுத்தில் எப்போதும் சொற் செட்டும், இலக்கணமும், கருத்து ஆழமும் இருக்க வேண்டியது அவசியம். இதற்கு உதாரணமாக சென்னை சுதேசமித்திரன் ஆசிரியர் ஸ்ரீ. சி. ஆர். ஸ்ரீநிவாசனை எடுத்துக்கொள்ளலாம்."

இதுதான் புதுத்தமிழ் இலக்கியம் பற்றிய அடிகளா ரின் பார்வையும் கருத்தும்.

அடிகளாரை சந்தித்துப் பேசி அளவளாவிய மறு மலர்ச்சி எழுத்தாளரான அ. செ. முருகானந்தன் இத் தகவலை 'அறிவாளி' என்ற தலைப்பில் ஈழமணி (தை-மாசி 1948) இதழ் வெளியிட்ட விபுலானந்தர் நினைவு மலரில் எழுதிய கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

ㅇ ㅇ

அடிகளார் எடுத்துக்கொண்ட பொருளுக்கு இயைந்த நடையையே தவறாமல் கையாண்டாரென்று எண்ணத் தோன்றுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் நடத்திய பத்திரிகைகளை ஒரு வரையறைக் குள் அமைக்காது நவீன கால அறிவியல், வாழ்வியல் துறைகளுக்கு விரிவுபடுத்தி சிந்தனையைத் தூண்டுகிற விதமாக அடிகளார் அமைத்தார்.

பின்வரும் இருபத்திகளும், பத்திரிகைக் கட்டுரை களில் வருபவை :

> ''கடுகைக் கணக்கெண்ணக் கண்ணுள்ள இக்கசடர்களுக்கு பூசணிக்காயை எண்ணப் பார்வை யில்லாது போயிற்றோ?''

> ''பெண்டிர் இயற்கையிலே இழிவுடையா ரென்று வேற்று நாட்டார் ஒருபொழுதுங் கருதினா ரல்லர். எவ்வெப்பாங்கினும் ஆடவர் பெண்டிரைத் தமக்கு ஒத்த நிலையினராகக் கொண்டு அறநெறி நடத்தி வந்தனர். இக்காரணங்களால் தமிழ் நாட்டினர் ஆண்மையும் வீரமும் பொருந்தியிருந் தனர். அவர்கள் வாழ்ந்தநாடு திருமகளுக்கும் கலைமகளுக்கும் வீரமகளுச்கும் உறைவிடமாயிருந் தது. அவர் வழிவந்த நாமனைவரும் அவர்கள் சென்ற நெறியைப் பின்பற்றிப் பெருங்குணம் வாய்ந்து ஒற்றுமையாக வாழ்வோமாக!''

> —''தேசாபிமானி' என்னுந் தலைப்பில் 'ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்' இதழில் எழுதியது.

அடிகளார் 'யாழ்நூலை' இறுக்கமான நடையிலே ஒரு அறிவியல் நூல் போன்று, ஆனால் பல இடங்களில் கவிதைநயம் பொங்கிட மனதைப் பிணிக்கும் விதத்தில் எழுதியிருக்கின்றார். யாழ்நூலை இவ்விதம் தொடங்கு கிறார் அடிகளார் :

> ''பழந்தமிழ்நாட்டுப் பஃறுளி யாற்றங்கரைக் குச் செல்வோமாக. மிக மிகப் பழையகாலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முல்லை நிலம். மரங்களடர்ந்த சோலையின் பாங்கர் ஒரு பசும்புற்றரை. புற்றரையிலே, பசுக் களுங் கன்றுகளும் மேய்கின்றன. கார் காலம்: செடி கொடிகளிலே பூக்கள் நிரம்பியிருக்கின்றன. இடைய னொருவன் வருகிறான். காலிலே செருப்பு அணிந்திருக்கிறான். உறுதியான உடல்; மயி ரடர்ந்த தோட்கட்டு; பால்மணம் நாறுகின்ற தலை மயிர், அரையிற் கட்டிய ஆடையின் ஒரு தலைப் பினைத் தோளிற்போட்டிருக்கிறான். பலநிற மாகிய கோட்டுப் பூக்களையும் கொடிப்பூக்களையும் கலம்பமாகத் தொடுத்த மாலையொன்று தோளிற் கிடக்கிறது. ஒருகையிலே கோல்; மற்றொரு கையிலே வில்வடிவமான ஒரு பொருள். ஒரு வில்லல்ல; பலவிற்கள் சேர்த்துக் கட்டப்பட்டிருக்கக் காண்கின்றோம்"

இந்த அற்புதமான சொற் சித்திரம் படிப்பவரின் கண்ணெதிரே காட்சியினைக் கச்சிதமாகத் தோற்று விக்கிறதென்பதை எவருமே உணர்வர்.

ஈழத்துச் செய்யுள் வரலாற்றில் அடிகளாருக்குத் தனியான தொரு இடமுண்டு. அவரை பதினெட்டாம், பத்தொன்பதாம் நூற்றாண்டின் மதக்குழுவாத கவிஞர் களோடு வைத்து எண்ணமுடியாதென பேராசிரியர். கா, சிவத்தம்பி குறிப்பிடுவார். தமிழ்ப்புலமையாளரான அடிகளார் பாரம்பரிய யாப்புப் பயிற்சியும், தேர்ச்சி யும் படைத்தவர். மேனாட்டு ஆய்வு முறையில் புலமை பெற்றவர். தமிழ்ப்பாரம்பரிய ஈடுபாட்டோடு செய்யுட் களை யாத்தவர். தாம் மேற்றிசைச் செல்வங்களை பயின்ற அனுபவத்தால் தமிழிலும் பாட்டியல் வடிவங் களையும், யாப்பமைதிகளையும் பரிசோதித்து மகிழ்ந் தவர். தன்காலத்து ஆத்மீக விடயங்களையும், தன்னிலைப் போக்கையும் செய்யுட்களாய் யாத்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்றிசைக் கவிதைகளை மொழி பெயர்க்கும் நெறியின் முன்னோடிகளில் ஒருவரான அடிகளார் சிறந்த இசைப்பாடல்களையும் யாத்திருக்கிறார். அதற்கு எடுத்துக் காட்டு :

### நீரரமகளிரின்னிசைப்பாடல்

நீல வானி லே
நிலவு வீச வே
மாலை வேளை யே
மலைவு தீரு வோம்
சால நாடி யே
சலதி நீரு ளே
பாலை பாடி யே
பலரோ டாடு வோம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நிலவு | வீச | வே | மலைவு | தீரு | வோம் |
| சலதி | நீரு | ளே | பலரோ | டாடு | வோம் |
| நிசரி | காக | மா | மபத | நீதி | சா |
| சரிக | மாம | பா | பதநீ | சாச | ரீ |
| ரிகம | பாப | தா | தநிச | ரீரி | கா |
| கமப | தாத | நீ | நிசரி | காக | மா |

அடிகளாரை என்றும் நினைவில் வைத்திருக்கச் செய்வது பின்வரும் கவிதை.

### ஈசனுக்கும் மலர்

வெள்ளை நிறமல்லிகையோ,வேறெந்தமாமலரோ,
வள்ள லடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ?
வெள்ளை நிறப்பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்பவிழ்ந்க தாமரையோ, கழுநீர் மலர்த்தொடையோ,
மாப்பிளையாய் வந்தவர்க்கு வாய்த்த மலரெதுவோ?
காப்பவிழ்ந்த மலருமல்ல கழுநீர்த் தொடையுமல்ல
கூப்பிய கைக் காந்தளடி கோமகனார் வேண்டுவது.

பாட்டளிசேர் பொற்கொன்றையோ,
பாரிலில்லாக் கற்பகமோ.
வாட்ட முறாதவர்க்கு வாய்த்த மலரெதுவோ ?
பாட்டளி சேர் கொன்றையல்ல பாரிலில்லாப்பூவுமல்ல
நாட்டவிழ் நெய்தலடி நாயகனார் வேண்டுவது.

அவருடைய ஏனைய குறிப்பிடத்தக்க செய்யுட்கள், தேவி வணக்கம், தேவபாணி, கோயில்மலர்மாலை, பெருந்தேவபாணி, விவேகாநந்த பஞ்சகம் என்பவை. இவை தவிர குருசரண ஸ்தோத்திரம், குருதேவர் வாக்கியம் என்ற 65 செய்யுட்களையும் அடிகளார் எழுதியுள்ளார். இவற்றில் இன்னும் தொகுக்கப்படாத வையுமுள்ளன.

மேலே கூறிய செய்யுட்கள் 'விபுலா நந்தத் தேன்' என்னும் தொகை நூலில் இடம் பெற்றுள்ளன.

□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒருகருத்தின் இரண்டு தோற்றங்கள்.

விவேகானந்தரைப் பற்றி ஜவஹர்லால் நேரு பின் வருமாறு குறிப்பிடுகின்றார்:

''விவேகானந்தர் பேசியதையும் எழுதியதையும் படிக்கும் நீங்கள், அதில் ஒரு அற்புதத்தைக் காணலாம். ஐம்பத்தாறு ஆண்டுகளுக்கு முன்பு அந்தக் காலத்துச் சூழ்நிலைக்கு ஏற்ப அவை பேசி, எழுதப்பட்டிருந்தாலும் இன்றைக்கும் அவை புத்தம் புதியனவாகத் தோன்றுகின்றன. அதன் காரணம், அவை வாழ்க்கையின் மேல்போக்கை-நுனிப்புல்லை மட்டுமே பார்த்துச் சொல்லாமல், நம் இந்தியமக்களின் — உலகமக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளின் அடிப்படையினை ஆராய்ந்து, அவற்றின் சிக்கல்களைத் தீர்க்கும் வழியைக் கூறி இருப்பதால் ஆகும். அதனால் அவை கிழடுதட்டிப் போன கருத்துக்களாக இல்லாமல் புத்தம் புதியவையாக ஒளிவீசுகின்றன. அவர் நம் ஒவ்வொரு இந்தியனுக்கும் மிகமுக்கியமான ஒன்றை—அதைச் சரியான சொற்களில் நான் குறிப்பிட வேண்டுமென்றால் நம்முடைய பழமையான பாரம்பரியத்தில் பெருமை கொள்ளும் ஓர் உணர்ச்சியை நமக்கு அளித்திருக்கிறார். அதனால் அவர் நம்மைக் கண்டிக்காமல் போகவில்லை. நம்முடைய பலவீனங்களையும் தவறுகளையும் மிகக் கடுமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகக் கண்டித்தார். நம்முடைய குறைபாடுகள் எதையும் அவர் மூடி மறைக்கவில்லை. அந்தத் தவறுகளையும் குறைபாடுகளையும் நாம் திருத்திக் கொள்ள வேண்டும் என்பதால் அவற்றை மறைக்காமல் நமக்கு எடுத்துக் காட்டினார். சிலநேரங்களில் நம் தவறுகளையும் இழிவுகளையும் ஈவு இரக்கமின்றித் தாக்கினார். அதே நேரத்தில் அன்றைய அடிமை வாழ்விலும் இந்தியா கைவிடாது பின் பற்றி வந்த பல அருமையான பண்பாடுகளை நமக்கு எடுத்துக்காட்டி, அவற்றில் நம்மைப் பெருமை அடையும்படியும் செய்தார்.

சுவாமிஜி எழுதிய, பேசிய கருத்துக்களை எல்லாம் இன்னும் நெடுங்காலத்துக்கு நம்மைக் கவர்ந்து நமக்கு வேண்டிய பலனைக் கொடுக்கும். இன்று 'அரசியல்வாதி' என்ற சொல்லுக்கு கூறப்படும் பொருளின்படி விவேகானந்தர் ஓர் அரசியல்வாதி அல்ல. என்றாலும் அவர் ஓர் அரசியல்வாதியே. என் கருத்துப்படி இந்திய விடுதலைக்கான தேசியப்போராட்டத்தைத் துவக்கிய மகோன்னதமான மனிதர்களில் அவரும் ஒருவர்.''

விவேகானந்தரைப்பற்றிய இந்தச்சித்திரம் விபுலானந்த அடிகளாருக்கும் பெருமளவில் பொருந்தி நிற்கிறது. விவேகானந்தரை எல்லாவிதங்களிலும் தனது ஒப்பற்ற வழிகாட்டியாக விபுலானந்தர் எப்போதுமே கருதி வந்திருக்கின்றார். விசித்திரமென்னவென்றால் இவர்கள் இருவரது வாழ்வுப் போக்கும் ஒருவிதமாக அமைந்திருப்பதுதான்.

விவேகானந்தர் பி, ஏ. படித்துக் கொண்டிருக்கும் போதே ஆசிரியர்களால் பிரியத்தோடு மதிக்கப்பட்டவர். வங்காளம், சமஸ்கிருதம், ஆங்கிலம், தத்துவஞானம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர்க்கம், வரலாறு ஆகிய துறைகளில் மாணவப் பருவத்தில் விவேகானந்தர் திறமை பெற்றிருந்தார். சங்கீதத்தில் யாவரும் வியக்கும் ஞானமிருந்தது. கேட்டோரைப் பிணிக்கும் நாநயம் அவருக்கு எல்லாரிடமும் பெருஞ்செல்வாக்கைத் தேடிக் கொடுத்திருந்தது. பதினெட்டு வயதிலே இராமகிருஷ்ணரால் அவர் ஆட்கொள்ளப்பட்டுத் துறவியானார்.

கிராமத்தலைவர் (விதானை) சாமித்தம்பியின் மகனான மயில்வாகனனது இளமைப் பருவமும் இத்தகையதே. அவர் தனது முப்பதாவது வயதில் இராமகிருஷ்ணமடத்தில் சேர்ந்துவிடுகிறார். எனினும் துறவியாகும் மனப்பக்குவம் இருபத்தேழுவயதிலேயே அவருக்கு உருவாகிவிட்டது. இராமகிருஷ்ண மடத்தை 1897ஆம் ஆண்டிலே விவேகானந்தர் உருவாக்கினார். இராமகிருஷ்ண பரமஹம்சர் இறந்ததின் பின்னர், கண்டிப்பாகச் செயல்படும் ஸ்தாபனமின்றி எதுவுமே செய்ய முடியாதென்ற முடிவினுக்கு விவேகானந்தர் வந்தார். கல்கத்தாவில் பலராம் என்ற சீடரின் வீட்டில், விவேகானந்தர் தலைமையில் அவரது சீடர்கள் கூடி உருவாக்கிய சங்கத்தின் விதிமுறைகள், கிட்டத்தட்ட இருபது வருஷங்களின் பின்னர் சர்வானந்தர் மூலமும், விவேகானந்தரின் கருத்துரைகள் வழியாயும் மயில்வாகனனை வசீகரிக்கின்றது.

ஏற்கனவே விவேகானந்தரின் வருகை இலங்கையில் ஆழமான ஆத்மீக விழிப்புணர்வுத் தடத்தினைப் பதிந்திருந்தது. கிழக்கத்தைய ஞானமார்க்கத்தினை மேற்றிசையில் விளக்கிப் பெருமையோடு திரும்பிய விவேகானந்தர் — அதன் பின்னர் — கீழ்த்திசையில் இலங்கையில், கொழும்பிலேதான் தனது உரையை நிகழ்த்தினார். இதன்பின் யாழ்ப்பாணம் சென்று 'வேதாந்தம்' என்ற தலைப்பில் பேசினார். இது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்தது 1897ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15ஆம் திகதி.

இதன் பிறகே இராமகிருஷ்ணமடம் உருவாகிறது. இராமகிருஷ்ண மடத்தில் மயில்வாகனன் ஈடுபாடு கொண்டு, அதைப்பற்றி அறிந்து, ஆட்பட்டமைக்கு விவேகானந்தரின் வேகங்கொண்ட எழுத்தும் பேச்சும் மட்டுமல்லாது இராகிருஷ்ணமடத்தின் அமைப்பு முறையும் விதிகளும் அடிப்படைக்காரணமாயின.

விவேகானந்தர் சமூக, தேசியசேவை என்ற புதிய ஆத்மீக லட்சியத்தை முன்வைத்தார். அவர், மாணவப் பருவத்திலே ராஜராம்மோகன்ராயின் பிரம்மசமாஜத்தில் இருந்தவர். சமூக சீர்திருத்தமும், சமய மறுமலர்ச்சியும் பிரம்மசமாஜத்தின் அடிப்படைக் கொள்கையாக இருந்த போதும் விவேகானந்தருக்கு அவை போதவில்லை. இந்த ஏக்கம் இராமகிருஷ்ணமடம் உருவான போது தணிந்தது.

தனிமனிதத் தன்மை படைத்த சமய உணர்வுகளை, தேசியத்தன்மை - சேவை - விழுமிய மானிட மேன்மை தழுவிய பார்வை என்ற சீர்திருத்தத் திசைக்கு விவேகானந்தர் திருப்பினார்.

மடம் தனது கொள்கை, செயல்முறைகளைப் பின் வருமாறு அறிவித்தது.

> ''பல்வேறு மதங்களும் அழிவற்ற சாசுவதமான ஒரே மதத்தின் பல்வேறு தோற்றங்கள் தான் என்பதைத் தெளிந்தறிந்து, வெவ்வேறு மதங்களைப் பின்பற்றுவோரிடையே, 'தோழமையை ஏற்படுத்துவதற்காக, இராமகிருஷ்ணர் தொடக்கி வைத்த இத்த இயக்கத்தின் நடவடிக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை தக்கமுறையில் நிர்வகித்துக் காட்டுவது மடத்தின் நோக்கம்''

அதன் செயல்முறைகள் பின்வருமாறு :

அ. 'பாமர மக்களின் இகபர ஷேமத்துக்கு உகப்பான ஞானத்தையும். விஞ்ஞானங்களையும் போதிப்பதற்குத் தகுதியுள்ள மக்களைப் பயிற்சியளித்துத் தயாரிப்பது',

ஆ. 'கலைகளையும் தொழில்களையும் ஊக்குவித்து வளர்ப்பது'

இ. 'இராமகிருஷ்ணரது வாழ்க்கையில் தெளிவு பெற்ற பிரகாரம் வேதாந்தக் கருத்துக்களையும் மக்களிடையே அறிமுகப்படுத்திப் பரப்புவது'

சங்கம் இரண்டு கிளைகளாகச் செயல்படும்.

முதல்கிளை இந்தியாவில் பணியாற்றும். மடங்களும் ஆச்சிரமங்களும் வெவ்வேறு பகுதிகளில் நிறுவப்படவேண்டும், சந்நியாசிகளையும், அர்ப் பணிப்புள்ள குடும்பஸ்தர்களையும் கல்வி-கேள்விகளில் பக்குவப் படுத்துவதற்காக இவை பாடுபடும்.

இரண்டாவது கிளை, பிறநாடுகளில் பணியாற்றும். மடத்துறவிகளை இந்தியாவுக்கு வெளியே உள்ள நாடுகளுக்கு அனுப்பிப் பரமார்த்திக கேந்திரங்களை நிறுவுவது.

நோக்கங்கள்:

'மடத்தின் நோக்கங்களும் லட்சியங்களும் ஆன்மீகத் தன்மை வாய்ந்தவை; மனிதாபிமானத்

தன்மை படைத்தவை, எனவே மடத்துக்கும் அரசியலுக்கும் எவ்விதமான தொடர்பும் இருக்க மாட்டாது...'

மாணவப் பருவத்திலேயே தன்னல மறுத்தவராய் விளங்கிய விபுலானந்தரின் மனநிலைக்கு இந்த லட்சியங்கள் முற்றுமுழுதாக ஒத்துப்போனமை வெகு இயல்பானதொரு நிகழ்வே. எனவேதான் அறிவிய லிலும், மக்கள் மேன்மையிலும் ஆர்வங் கொண்டிருந்த அடிகளுக்கு சிக்கெனப் பற்றிக்கொள்ளத்தக்க நிறுவன மாக இராமகிருஷ்ண மடம் முன்னே நின்றது.

வாழ்வின் சகலதளங்களிலும் ஏற்ற இறக்கங் களிலும் விவேகானந்தர் நடமாடியிருக்கிறார், இளைஞராயிருக்கையில் தந்தையார் இறக்க, குடும்ப பாரம் இவரின் தலையிலே வீழ்கின்றது. நிலை குலைந்து போகிறார். ஏறக்குறைய இதேவிதமாக, விவேகானந்தர் தன் தந்தையை இழந்த வயதி லேயே அன்னையை இழக்கிறார் அடிகளார். நிலை குலைந்து போகிறார். ஆனால் இந்த நெகிழ்வு இவர்களை இன்னொரு தளத்துக்கு இட்டுச் செல்கிறது. கவிஞர்களான இருவரும் மெல்லிய மனம் கொண்டவர்கள். வாடுகிற உயிரைக் கண்ட போதெல்லாம் வாடி அயர்ந்தவர்கள், வாடியவர்க்கு, தம்மளவிலும், இயக்க அளவிலும் உதவி அமைந்தவர்கள். வறுமை என்ற துன்பம் மானிடத்தின் அடித்தளத்தையே சிதைத்து விடுகிறது. அடித்தளம் சிதைகிற வாழ்வில் எதுவுமே இருக்க முடியாததலால் மானிடம் மேன்மை பெற வறுமை ஒழிக்கப்பட வேண்டுமென்று இருவருமே சொன் னார்கள். 'கொதித்து கூழின்றி அழும் ஏழையிடம் கலாசாரம் பேசுதல் எங்ஙனம்?' என்றார் அடிகளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1898இல் கல்கத்தாவில் பயங்கர பிளேக் நோய் ஏற்பட்டபோது இராமகிருஷ்ணமடம் முழு அர்ப்பணிப்போடு, தங்கள் அசையாச் சொத்துக் களைவிற்று கஷ்டநிவாரணப்பணியினைச் செய்தனர். விவேகானந்தரும், சகோதரி நிவேதிதாவும் துறவி களோடு ஏழைமக்களிடையே ஆற்றியபணியானது மானிட நேயங்கொண்ட அனைவரையும் அவர்கள் பால் ஈடுபாடு கொள்ள வைத்தது.

இங்கேயும் அடிகளாருடைய கல்வியாளனாகத் தொடங்கிய வாழ்வு, சமுதாய நோயைக் கண்டு கலங்கு வதில் வந்து நின்றது. சிந்திக்க வைத்தது.

இக்காலப்பகுதியிலே, விவேகானந்தர் வேதாந்தப் பிரசாரம் செய்வதற்காக சிவானந்தாவை இலங்கைக்கு அனுப்பி வைக்கிறார். இவரே பின்னர் விபுலானந் தருக்கு குருவாகி, துறவியாய் அடிகளாரை மாற்று கிறார்.

விவேகானந்தரை தவராஜ சிங்கமாகவும், அடிமை இந்தியாவை விடுவிக்க வந்த அருளாளனாகவும் விபுலானந்தர் காண்கிறார். விவேகானந்தரின் கட்டுரை களையும், சொற்பொழிவுகளையும் அடிகளார் உயி ரோட்டத்துடன் ஒன்றிப்போய் மொழி பெயர்த்திருக் கிறார். இன்னும் சொன்னால் பலவேளைகளிலும் இருவரின் கருத்துக்களும், வார்த்தைகளும் புள்ளி பிசகாமல் ஒரே விதமாக அமைந்திருப்பதையும் காண முடிகிறது.

விவேகானந்தரின் பின்வரும் வார்த்தைகள் இதே வடிவில் அடிகளாரால் கூறப்பட்டுள்ளன என்பதை இந்நூலில் ஆங்காங்கு இடம் பெற்றுள்ளன விபு லானந்த அடிகளாரின் மேற்கோள்கள் உணர்த்தும், இந்த ஒற்றுமை, இராமகிருஷ்ணமடத்து துறவிகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் இருவரைத்தவிர வேறெவரிடமும் பெருமள விலே அமைய வில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

''மனிதனை மனிதனாக உருவாக்கும் மதந் தான் இன்று நமக்குத் தேவைப்படுவது, மனிதனை மனிதனாக்கும் கல்விதான் தேவை. எல்லா வகை களிலும் மனிதனை மனிதனாக்கும் தத்துவங்கள் தாம் நமக்கு வேண்டும். உங்கள் தேகதிடத்தை, மதிநுட்பத்தை, ஆன்ம சக்தியைப் பலவீனப் படுத்தும் அனைத்தையும் நஞ்சு என்று உணர்ந்து நிராகரித்து விடுங்கள். இது ஒன்று தான் உண்மை யைக் கண்டறியும் உரைகல். அந்த விஷத்தில் வாழ்வு இருக்க முடியாது. அதில் உண்மை ஒளிர் வதற்கு இடமில்லை. உண்மையானது பலத்தைக் கொடுக்கிறது. உண்மைதான் தூய்மை. உண்மை தான் ஞானம். அனைத்தும் உண்மைக்கு வலுவைக் கூட்டுவதாக இருக்க வேண்டும். அது மனதில் புத்தொளி பிறக்கச் செய்ய வேண்டும். தெம் பூட்டுவதாக இருக்க வேண்டும். பலவீனப்படுத்து கிற தெய்வானுபவங்களை விட்டு விடுங்கள். பல வான்களாக இருங்கள். மகத்தான உண்மைகள் இவ்வுலகில் மிகமிக எளிதானவை...''

''தைரியமாக இருங்கள், தைரியமே நற் குணங்களில் முதன்மையானது. எப்பொழுதுமே முழு உண்மையைப் பேசும் துணிவு இருக்கட்டும். பாகுபாடின்றி, ஒளிவுமறைவின்றி, அச்சமின்றி, அடிப்படையை விட்டுக் கொடுக்காமல், எப்போதும் எல்லாரிடமும் உண்மையைப் பேசுங்கள். பணக் காரர்களையும் பெரிய மனிதர்களைப் பற்றியும் சிரமப்படாதீர்கள். பணக்காரர்களுடன் சந்நியாசி எவ்வித உறவுங்கொள்ளலாகாது. பணக்காரனுக்கு மரியாதை செய்து, ஆதரவை நாடி, அவனிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கியிருப்பது வேசியின் நடத்தைக்கு ஒப்பானது, சந்நியாசிகளின் கடமை ஏழைகளுக்கு உழைப்பதே. ஏழைகளிடம் அன்புடன் கூடிய பரிவு காட்ட வேண்டும். தனது முழுச்சக்தியையும் ஈடுபடுத்திச் சந்தோஷத்துடன் அவர்களுக்குப் பணிபுரிய வேண்டும்."

"உங்கள் சொந்த மோட்சத்தை நீங்கள் நாடுவீர்களானால் அது நரகத்தில்தான் கொண்டு போய் விடும். மற்றவர்களுடைய மோட்சந்தான் நீங்கள் நாடுவதாக இருக்க வேண்டும். மற்றவர்களுக்காக உழைப்பதன் காரணமாய் நீங்கள் நரகத்திற்குப் போக நேரிடினும் அது சொந்த மோட்சத்தை நாடிச்சென்று அடைவதை விட மேலானது."

"இளவயது முதல் ஒவ்வோர் இரவும் கண்ணுறங்கினவுடன் இரண்டு கனவுகள் உருவெடுக்கத் தொடங்கின. ஒன்றில், நான் இவ்வுலக மகான்களில் ஒருவனாக என்னைப் பார்த்தேன். செல்வம், கௌரவம், அதிகாரம், கீர்த்தி எல்லாம் மிகுந்தவனாகக் கண்டேன். இவற்றை எல்லாம் அடைவதற்கான தகுதி எனக்கு இருப்பதாக உணர்ந்தேன். ஆனால் அடுத்த கணத்திலேயே மற்றொரு தோற்றம் தென்பட்டது. இவ்வுலக வாழ்க்கையைச் சேர்ந்த எல்லாப் பொருட்களையும் துறந்து, எளிய ஆடையை அணிந்து, பிச்சையெடுத்து உண்டு மரத்தடியில் உறங்குபவனாக என்னைப் பார்த்தேன். அம்மாதிரி வாழ்வதற்கான பழங்காலத்து ரிஷிகள் போன்ற தகுதியும் எனக்கு உண்டு என்று நினைப்பேன். இந்த இரண்டு தோற்றங்களில் துறவித் தோற்றம் மேலோங்கியது. அதன் மூல

இன்—9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகத்தான் மனிதன் பேரானந்தம் எய்தமுடியும் என்பதை உணர்ந்தேன். அதை முன்கூட்டியே சுவைக்கும் உணர்வில் தூங்கினேன். ஒவ்வொரு நாளும் இதுவே என் அனுபவம்...''

''...அதிலும் அடித்தளத்தில், ஏழ்மையின் இழி நிலையில் இருப்பவர்களுக்குத் தொண்டு புரிய வேண்டும். தளைகளை எல்லாம் தகர்த்தெறியுங் கள். தீண்டாமை மனிதத்தன்மையற்றது. இந்தி யாவில் அதன் குரூரம் வெளிப்படையாகத் தெரி கின்றது. ஆனால் இது இந்நாட்டிற்கு மட்டுமே உரித்தானதென்று எண்ண வேண்டாம். பகல் வேட ஐரோப்பாவிலும் பறையர்கள் இருக்கவே செய்கிறார்கள். அவர்களிடமிருந்து சமூகம் விலகி ஓடுகிறது. சகோதரர்களே, கைகொடுத்து அவர் களைத் தூக்கி விடுங்கள்''

''பறையரை விட, பாரம்பரிய வசதி காரண மாக கல்வி கற்பதற்குப் பிராம்மணனுக்கு அதிக தகுதி இருக்குமாயின், பிராம்மணனது கல்வியின் மீது மேற்கொண்டு பணம் செலவழிக்க வேண்டாம். எல்லாவற்றையும் பறையனது கல்விக்காகச் செல வழியுங்கள். பலக்குறைவாக உள்ளவர்களுக்குக் கொடுங்கள். எல்லாத்தானங்களும் அவர்களுக்குத் தான் தேவை. பிராம்மணன் பிறப்பிலேயே கெட்டிக்காரனாக இருக்கும் பட்சத்தில் உதவி யில்லாமல் அவன் கல்வியைப்பெற முடியும். எனக்குத் தெரிந்தவரை இதுதான் நியாயம். இது தான் பகுத்தறிவு.''

'தேசம் குடிசையில் இருக்கிறது' என்றார் விவே கானந்தர். இந்தியாவின் ஏழ்மையைப் பார்த்து அவரைப் போல வருந்தியவர் யாருமே இல்லை என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடச் சொல்லலாம். ஆயினும் ஏழையும், ஜாதியில் கீழானவனும் மேனிலை அடைவதற்கு பரிவோடு மற்ற வர்கள் உதவி செய்ய வேண்டும் என்ற கருத்தையே அவர் கொண்டிருந்தார். இந்தக் கருத்தை அவர் உறுதி யாக வெளிப்படுத்துகிறார்.

''சாதி சம்பந்தமான விவாதங்களில் என்னைப் பொறுத்தமட்டில் எந்தக்கட்சியினிடமும் எனக்குப் பராபட்சம் என்பது கிடையாது. ஏனென்றால் ஜாதி என்பது ஒரு சமுதாய விதிதான். குண கர்ம பேதத்தை ஒட்டிய ஓர் அமைப்புத்தான் அது என்பதை நான் நன்றாக அறிந்திருக்கிறேன்."

''சாதி ஏற்பாடு வேதாந்த மதத்திற்கு விரோத மானது, சாதி என்பது ஒரு வழக்கமே தவிர வேறில்லை.

நமது பெரிய ஆசாரியார்கள் எல்லோரும் சாதி பேதத்தை ஒழிக்க எவ்வளவோ முயன்றிருக்கிறார் கள். பௌத்த மதம் முதற்கொண்டு அதற்குப் பிறகு தோன்றிய ஒவ்வொரு மத வகுப்பினரும் சாதி வேற்றுமையை எதிர்த்தே பிரசாரம் செய்து வந்திருக்கின்றனர். ஆனால் இந்த முயற்சி ஒவ் வொரு தடவையும் சாதியை உறுதிப்படுத்தியதே தவிர வேறுபயனில்லை.

இந்தியாவின் அரசியல் ஸ்தாபனங்களிலிருந்து வளர்ச்சிபெற்றதே சாதியாகும். அதைப் பரம்பரை யாக வளரும் தொழிற்சங்க முறை என்றே சொல்லலாம்.

சாதி முதலிய நமது சமூக ஏற்பாடுகள் சமயத் தொடர்புடையனவாக வெளிப்பார்வைக்குத் தோன் றிய போதிலும் உண்மையில் அவை அத்தகையன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்ல. நம்மை ஒரு தனிச்சமூகமாகக் காப்பாற்றி வருவதற்கு அந்த ஏற்பாடுகள் ஒரு காலத்தில் அவசியமாக இருந்து வந்திருக்கின்றன. தற்காப்புக்கு அந்த ஏற்பாடுகள் அவசியம் இல்லை என்ற சூழ்நிலை ஏற்படும் போது அவை இயற்கை மரணமடைந்து மறையும்"

இதே கருத்தை விவேகானந்தர் 1897ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்திலும் 'வேதாந்தம்' என்ற தமது சொற்பொழிவில் ஒளிவுமறைவின்றி அழுத்தந்திருத்தமாய் எடுத்துச் சொல்கிறார்.

1931ஆம் ஆண்டிலே விபுலானந்த அடிகளார் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகவும், இசைக் கல்லூரி மேற்பார்வையாளராகவும் பணியாற்றுகிறார். 'யாழ்நூல்' எழுதும் முயற்சிகளைத் தொடங்குகிறார். இதேகாலத்தில் - 1932ஆம் ஆண்டில் இலங்கையில் 21 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் வாக்குரிமை வழங்கப்படுகிறது. அரசியலில் மத்தியதர வர்க்கம் மெல்ல மெல்ல முன்னணிக்கு வருகிறது. அடிகளார், தீண்டாமைக்கு எதிரான முயற்சிகளை ஆரம்பிக்கிறார். திருவேட்களச் சேரியில் இராப்பாடசாலை அமைக்கிறார். ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு எதிராகக் கொடியேற்றுகிறார். ஆழ்ந்து யோசித்தால் இந்த இரண்டு நிகழ்ச்சிகளும் நிறுவன எதிர்ப்பாகவே தோன்றுகின்றன. பின்னர் 1933இல் 'யாழ்நூல்' எழுதி முடிப்பதற்காக அவர் பேராசிரியர் பதவியைத் துறக்கின்றார்.

அடிகளார் காலமான பின்னர் 'ஈழமணி' என்ற பத்திரிகை அடிகளார் நினைவு மலரை வெளியிட்டிருந்தது. தமிழ்ப் பேரறிஞரான தொ. பொ. மீனாட்சி சுந்தரனார் அம்மலரிலே 'தென்முனைக் கதிரொளியின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைவு' என்ற கட்டுரையை எழுதியிருந்தார். அதிலே பின்வரும் கூற்று வருகின்றது :

"(அடிகளார்) அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராக விளங்கித் தமிழ் வளர்த்த வரலாற்றினை ஒரு சிலரே அறிவர். அப்போது எழுந்த இடர்ப்பாடுகள் பல. அங்குப் பேராசிரியனாகத் தொண்டு செய்யப்போன யான் அறிவேன் அந்த நிலையின் கடுமையை. தீண்டாத மக்கட்கு அவர் செய்த தொண்டு அளப்பரிதாம். அண்ணாமலைப் பல்கலைக் கழகம் அவரது தொண்டினை இழந்தது. பின்னர் கொழும்பில் தமிழ்ப்பேராசிரியராக வந்த இந்தப் பெரியார் ஏன் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே இருந்திருக்க முடியாது போயிற்று என்பதனைத் தமிழர் எண்ணிப் பார்த்தல் வேண்டும்."

அடிகளார் காலத்தில் விடுதலைப் போராட்டம் இலங்கையிலும் இந்தியாவிலும் கூர்மையடைந்து வருகின்றது. அரசியலிலே பணபலம் படைத்த மேல்தட்டு மக்களே தலைமையேற்கிற நிலை பொது அம்சமாகக் காணப்படுகிறது.

மடத்தின் விதிமுறைகளுக்கேற்ப அரசியலில் ஈடுபடாத நிலையிருந்த போதிலும் விவேகானந்தர் வங்காள தேசிய உணர்வை, இந்திய தேசிய உணர்வாக மாற்றி உலகத்தன்மைக்கு கொண்டுபோனவர் என்று புகழ்ந்துரைக்கப்பட்டார். அடிகளாருக்கு இலங்கையில் புகழ்பெற்ற சேர். பொன், அருணாசலம், பொன். இராமநாதன், தமிழ்நாட்டில் எஸ். சத்யமூர்த்தி ஆகியோர், அபிமானமுள்ளவராகக் காணப்படுகின்றனர். அடிகளார் தருணம் வரும்போதெல்லாம் தேச விடுதலை பற்றிய கருத்தை வெளிப்படுத்துகிறார். ஆனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரிடத்தில் அவர், 'இப்போதைய சட்டசபையில் வசிட்டமும், விஸ்வாமித்திரமும் இடம்பெறமுடியாது. பணம் பல விஷயங்களையும் தீர்மானிக்கிறது; குலம், கல்வி என்பன கவனம் பெறாமல் போயிற்று' என்கிறார்.

ஆனால் இக்காலப் பகுதியில் அரசியலில் மேல்தட்டு வர்க்கத்தினரே ஆதிக்கம் பெற்றிருக்கின்றனர். அடிகளார் சொன்னது போலப் பணநிலை பலரது அரசியல் இருப்பினைத் தீர்மானிக்கிறது. அவ்விதமே கல்வி நிலையும் மத்திய தர வர்க்கத்தினரை அரசியலிலே முன் தள்ளுகிறது.

விவேகானந்தரும், அடிகளாரும் 'சமயங்களிடையே தோழமையை உருவாக்குவதை' 'இலட்சியமாகக் கொண்ட இராமகிருஷ்ண மடத்தின் முன்னணித் துறவிகளாக இருந்தபோதிலும், அவர்களின் ஆதாரதளம் அவர்கள் கைக் கொண்ட சமயமாகவே இருந்தது.

விவேகானந்தர் கிறிஸ்தவத்துக்கு எதிரான போராட்டத்தை முன்வைத்த பிரம்ம சமாஜத்திலிருந்து தம்முடைய பொதுவாழ்வைத் தொடங்கியவர். சாதி இந்துக்களின் அரவணைப்பின்மையால் அணி அணியாக மதம் மாறிய ஒடுக்கப்பட்ட மக்களின் இழப்பு ஓர் இந்து சமயத்தவர் என்ற முறையிலே அவரைத் துன்பப் படுத்துகிறது. ஒடுக்கப்பட்ட இந்துக்களுக்காக இதனால் அவர் குரல் கொடுக்கிறார். அவர்களைப் பரிவோடு அணுகி, கல்வி கொடுத்து, கைதூக்கி விடுமாறு மற்றவர்களை வேண்டுகிறார். சாதி முறை தானாகவே மடிந்துவிடும் என்று ஓயாதுரைக்கின்றார். வங்காள தேசியவாதியாய் தோன்றி, இந்திய தேசிய வாதியாய் பரிணமிக்கின்ற விவேகானந்தர் இதே கருத் தோட்டத்தில் உறுதியாயிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விபுலானந்த அடிகளார் வசதியான குடும்பத்திலே பிறந்தவர். வாழ்வின் இடர்பாடுகள் அவரை உறுத்திய தில்லை. நன்றாகப்படித்து, தொழில் துறைக்குப் போகிறார். ஆனால் அவருக்கு என்றுமே பணம் ஒரு பொருட்டாகவோ, வேண்டப்பட்டதாகவோ இருக்க வில்லை. பணத்தை துச்சமாக மதித்தார். சைவ ஆசாரமான குடும்பத்தில் பிறந்ததோடு, அதே ஆசார சூழலே அவரின் வாழ்வு முழுதிலும் அமைந்திருந்தது. குரு, நண்பர் என்று எல்லாருமே இப்படித்தான் அமைந் தனர். எல்லா மதங்களும் ஒன்றுடன் ஒன்று தோழமை யாயிருக்க வேண்டும் என்ற குறிக்கோளை மடம் வற்புறுத்தியது. ஆனால் அப்போதைய காலப்பின்னணி, வெள்ளையர் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட் டம் வேகமடையத் தொடங்கியிருந்த காலம். விதேசிய மதம், விதேசிய கலாச்சாரம் என்பனவற்றை எதிர்த்து தேசியமொழி, சமயம் உட்பட்ட தேசிய கலாச்சாரம் என்பவை தூக்கிப் பிடிக்கப்பட்ட காலம். விடுதலைப் போராட்டத்தில் இந்த அம்சங்கள் இடம் பெறுவது தவிர்க்க முடியாததாகி விட்டது. மக்களைத் தட்டி யெழுப்பவும் போராட்டத்தில் இணைத்துக் கொள்ளவும் தேசியமொழி, தேசியகலாசாரம் என்பனவற்றின் மறு மலர்ச்சியும் வேண்டப்பட்டன.

இந்திய தேசியத்தில் விவேகானந்தர் இத்தகைய பங்களிப்பை வழங்கினார், ஆங்கிலேயரது கலாச்சார ஆண்டான்தனத்துக்கெதிராக நாவலர் பெரும் போர் தொடுத்தார். சைவமும் தமிழும் காக்க அறைகூவல் விட்டார். நூல்கள் வெளியிட்டு தனது கருத்துக்களுக்கு வடிவங்கொடுத்தார். இந்த நாவலர் மரபே அடி களாருக்கு ஏற்றதாகத் தெரிந்தது. இயல்பாகவே அடிமைத்தனத்தை வெறுக்கும் மனப்பக்குவம் பெற் றிருந்த அடிகளார், தன்கால அரசியல் சமுதாய கலாச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார இழிநிலைக்கு மாற்றாக நாவலரையே முன்னோடியாகக் கொண்டார். தன்காலத்து நிலைமைகளை மாற்றிட நாவலர் போன்ற இலட்சியவாதிகள்தான் இன்று தேவை என்று அவர் அறைகூவல் விடுத்தது இதனாலேதான்.

1930களில் சைவசமயம் தனது எந்த அடிப்படைக் கருத்திலுமிருந்து விட்டுக் கொடுக்கவில்லை. அதற்கு எதிராக எந்தச் சீர்திருத்தவாதக் குரலும் ஓங்கி ஒலிக்கவுமில்லை. ஆனால் விபுலானந்தர் சைவசமயத்தின் சில போக்குகளுக்கெதிராகக் குரல் கொடுத்தார். விவேகானந்தரை விட ஒருபடி மேலே போய் தீண்டாத மக்களை அரவணைத்தார். அதற்குரிய தண்டனைகளையும் விமர்சனங்களையும் தைரியமாக ஏற்றுக் கொண்டார். இதனால் உறுதியான சைவ சமயிகளின் கண்டனத்துக்கும் ஆளானார். எனினும் கடைசிவரை அவர் உன்னதமான மனிதாபிமானியாகத் திகழ்ந்தார்.

சைவ சமயத்தைப் பரப்ப எண்ணங் கொண்ட அடிகளாரின் நண்பர் ஒருவர் பிறசமயங்களைக் கடுமையாகத் தாக்கிப் பேசினார். இதைக் கேட்ட அடிகளார் அந்த நண்பரைப் பின்வருமாறு கண்டித்தார்.

> ''நீ ஒரு சைவசமயத்தவன். மற்றைச் சமயங்களை இகழாதிருத்தலே சைவசமயத்தின் கொள்கை. சைவசமயத்தின் பெருமையை மற்றவர்கள் தாமாக உணர வேண்டும். ஆகையால் மற்றைய சமயம் எதையாவது நீ இகழ்ந்து பேசுவையாகில் நீ சைவசமயத்தின் முதலாவது எதிரியாகக் கருதப்படுவாய். ஆகையால் நீ உண்மைச் சமயப்பற்று உள்ளவனாயிருந்தால் இன்று தொடக்கம் மற்றைய சமயங்களை இகழ்ந்து பேசுவதை விட்டுவிடவேண்டும்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுதாய முன்னேற்றத்தோடு இணைந்த கல்விப் பணி, மக்களபிமானம், சுயகலாச்சாரத்தை நிலை நிறுத்துவதில் தளராமை, பிற சமயங்களை மதித்து தன்சமயம் போற்றிய இயல்பு, தன்னடக்கமிக்க மேதைமை என்பன விபுலானந்தஅடிகளை அவர் காலத்து ஏனைய அறிவு ஜீவிகளிடமிருந்து வேறு படுத்தி வைக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'இணையிலாப் பெருநிதியனையர்'

அடிகளாருக்கு இருவர்மேலே அளவற்ற ஈடுபாடு இருந்தது. ஒருவர் மகாகவி பாரதி. மற்றவர் ஆறுமுக நாவலர். மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் பாடல்களைப் படிப்பதில் அடிகளாருக்கு மிக்க மகிழ்ச்சி யுண்டு. 1932ஆம் ஆண்டில் அடிகளார் அண்ணா மலைப் பல்கலைக் கழகத்தில் 'பாரதியார் கழகம்' (Bharthi study Circle) என்ற ஒரு இலக்கிய அமைப் பைத்தோற்று வித்தார். பாரதி கவிதைகள் குறித்து, அடிகளின் தலைமையில் மாணவர், இரண்டு நாட் களுக்கு ஒரு முறை சொற்பொழிவுகள் ஆற்றுவதுண்டு. இக்கழகத்தின் சார்பில் 2-2-1932இல் அடிகளார் தலைமையில் நடந்த சிறப்புக்கூட்டத்தில் அப்போதைய விடுதலைப் போராட்ட வீரரான எஸ். சத்திய மூர்த்தி பாரதி படத்தைத் திறந்துவைந்தார்.

சுவாமிகள் பாரதியாரைப்பற்றி ஆங்கிலத்தில் எழுதிய கருத்து இங்கே நோக்கத்தக்கது:

> The Charm of his Lyrics, and the Dignified tone of his patriotic songs have endeared him to this people, The healthy outlook on life underlying his poems has a universal appeal... May the Tamil people, The inheritors of a Glorious Civilisation, view the world with the Eyes of Bharthi, their latest poet and Rising above narrow Sectarianism and petty social conven-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-tions march on the path that will lead them to the Divine Spirit, which is the Source of All goodness, beauty and trouth"

—'The Development of Tamilian Religious thought' — Annamalai University Journal Vol 1. No. 2.

தமிழில் :

"அவருடைய கவிதைகளின் வசீகரமும் பெருமிதந் ததும்புகிற தேசிய விடுதலைப் பாடல்களும் பாரதி மீது மக்கள் அன்பு கொள்ளக்காரணமாயின. வாழ்க்கையைப் பற்றிய அவருடை கவிதையில் காணப்படும் செழுமையான நோக்கம் எல்லா மக்களையும் வசப்படுத்துவதாயுள்ளது ... ஒரு மகோன்னதமான நாகரிகத்தைத் தொன்றுதொட்டு வழி வழியாகப் பெற்றுள்ள தமிழர் தங்களுடைய நவீன கவிஞரான பாரதியின் பார்வை கொண்டு உலகத்தை நோக்குவதுடன், குறுகிய வகுப்பு வாதத்தையும், அற்ப சம்பிரதாயங்களையும் உதறியெறிந்துவிட்டு சகல நன்மைகளுக்கும், எழிலுக்கும், உண்மைக்கும் மூலதனமாக விளங்கும் தெய்வீகத்தை நோக்கி அதன் பார்வையில் முன்னேறிச் செல்வார்களாக."

பாரதிமேல் அடிகளார் கொண்டிருந்த அன்புக்கு இன்னொரு உதாரணம்: திரிகோணமலை இந்துக் கல்லூரியில் பாரதி படம் ஒன்று திறந்து வைக்கப்பட்டிருந்தது. அதை அடிகளார் பார்த்துக்கொண்டு நின்றார். அப்போது அங்கே செல்வாக்குள்ள பிரமுகர் ஒருவர் வந்தார். அவர் ஆங்கில நடையுடை, பழக்க வழக்கம் கொண்டவர். ஆங்கில இலக்கியங்களைப் பற்றிப் பெரிதாகப் பேசுபவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் அடிகளாரையும், பாரதியையும் மாறி மாறிப் பார்த்துவிட்டு, ''தலைப்பாகை அணிந்திருக்கும் இவர் யார்? என்று கேட்டார். உடனே அடிகளுக்கு முகம் சிவந்தது. மறுகணம் தன்னை அடக்கிக் கொண்டு அவர் அனுதாபமாக அம்மனிதரைப் பார்த்தார். பதில் சொன்னார் :

> ''அவர்தான் கவியரசர் பாரதி. தமிழகத்தை உய்விக்க வந்த தெய்வம்''

1944ம் ஆண்டு. கண்டிமாநகரிலே அடிகளார் 'வரகவி பாரதியார்'' என்ற தலைப்பிலே சொற்பொழி வாற்றினார். பாரதியின் தேசிய விடுதலை உணர்வை யும், அற்புத கவியாற்றலையும் அவர் ஆதாரத்தோடும் இனிமையுடனும் பேசினார்.

''தேசிய உணர்ச்சியும் தேசாபிமானமும், பொங்கும்படி எளிமைசார கவிதை இயற்றியவர் பாரதியை விடவும் வேறுயார்?'' என்று ஒவ்வொரு சொற்பொழிவிலும் கேட்டார் அடிகளார்.

அடிகளார் பாரதியாரை ஏற்றிப் போற்றிப் பரப்பிக் கொண்டிருந்த காலத்திலே, தமிழ் இலக்கிய உலகில் பாரதியைப் பற்றிய வாதப் பிரதிவாதங்கள் நடந்து கொண்டிருந்தன. பாரதிக்குரிய இலக்கியபீடம் எது வென்பதே அந்த விவாதம். பாரதியை வெறும் தேசியக் கவிஞராக மதிப்பிட்டனர் ஒரு சாரார். இதை மறுத்து வலிமையான ஆதாரங்களுடன் பாரதி ஒரு மகாகவியே என்று பாரதியின் இலக்கிய பீடத்தை வ.ரா, கு.ப. ராஜகோபாலன், சிட்டி ஆகியோர் உறுதிப்படுத்திக் கொண்டிருந்தனர்.

உலக மகாகவிகளைப் பயின்று அறிந்த விபு லானந்தர், பாரதியை அறிந்த மாத்திரத்திலேயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றுக் கொண்டமை வியப்புக்குரிய செய்தியல்ல. எனினும் அடிகளாரின் விசாலமான மனப்பாங்கிற்கு இது சிறந்த எடுத்துக்காட்டாகும். தன்காலத்தின் ஒப்பற்ற கவியாக பாரதியை அடிகளார் ஏற்றுக் கொண்டதோடு பாரதிக்கும் தனக்கும் கருத்தடிப்படையில் உள்ள பெருத்த ஒற்றுமைகளையும், இந்த ஏற்றுக் கொள்ளல் மூலம் நிறுவினாரெனலாம்.

அடிகளார் மரபுவழிக்கவிஞராயிருந்த போதிலும் நவீன இலக்கியப் போக்குகளையும் மனமுவந்து ஏற்றுக் கொண்டவர். ஹோமர் முதல் ஷெல்லி வரை பரிச்சயமுற்று, ஷேக்ஸ்பியரிலும் பெர்னாட்ஷாவிலும் ரசனை கண்டிருந்த நெஞ்சம் இன்னொரு உலக மகா கவியைத் தமிழில் அடையாளம் கண்டு கொள்வதிலே சிரமம் ஏதுமிருக்கவில்லை.

இவை யாவற்றையும் விட தன் காலமக்களின் உணர்ச்சியினைப் போற்றி, அவற்றை உள்வாங்கி அவர்களின் குரலை ஓங்கியொலிக்க வைத்த பாரதியின் இயல்பு, அடிகளாரை மிகவும் கவர்ந்திருந்தது. அடிகளார் இந்த எண்ணத்தை அடிக்கடி தெரிவித்திருக்கின்றார்.

தேசத்தின் அடிமைநிலை பொதுவாகவே அடிகளாரைப் பாதித்திருந்தது. இந்தியாவும் இலங்கையும் விடுதலைப் போராட்டத்தில் முனைப்போடிருக்கையில், தேசிய உணர்வை வளர்க்கவும், விடுதலை முழக்கம் ஒலிக்கவும் பாரதியின் உணர்ச்சி பொங்கும் தேசியப் பாடல்கள் வழி வகுத்தன. அடிகளாரின் மனஉணர்வுகளை இவ்விதமே பாரதியார் பாதித்தது மட்டுமல்ல பிரதி பலித்தார் என்றும் கொள்ளுதல் பொருத்தமாகும்.

பாரதியைப் போல அடிகளாரும் சாதாரண மனிதனையும் அவனது கலைச் செல்வங்களையும் போற்றிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாக்க வேண்டும் என்னும் எண்ணம் நிறையப் பெற்றிருந்தார்.

> ''நவயுகத்தின் போக்கிலும் முயற்சிமிகுதியிலும் நம்முடைய பழஞ் செல்வங்களை மறந்து விடலாகாது; நாட்டுப்பாடல்களையெல்லாம் மக்கள் மறந்து விடுமுன் அவற்றைத் தொகுத்து வெளியிடுதல் வேண்டும்''

நாவலரின் மேலேகொண்ட அபிமானத்துக்கு அடையாளமாக அடிகளார் 'நாவலர் மெய்க்கீர்த்தி மாலை'' என்ற நூலை எழுதினார்.

அடிகளாரின் வாழ்வைச் செம்மைப்படுத்தியவராக நாவலரைக் காண்பது பொருத்தமானதே. நாவலரைப் போலவே கல்வியில் பெரும்பற்றுக் கொண்டவராகவும், செந்தமிழ் வளர்ச்சியிக்குத் தம்மை அர்ப்பணித்தவராகவும், சமயநிலைப்பாடு கொண்டவராகவும் அடிகளார் திகழ்ந்தார்.

நாவலர் மெய்க்கீர்த்தியில் பின்வருமாறு நாவலரை ஏத்துகிறார் அடிகளார்,

'' சொல்லுதல் வல்லான் சோர்விலான் அஞ்சான்
துணிவுகொள்சிந்தையான் அவனை
வெல்லுதல் யார்க்கும் அரிதென உரைத்த
மெய்ம்மறைப் பொருட்கிலக்காகி
நல்லையிலுதித்த நாவலர் பெருமான்...''

'' குலந்தரு செல்வன் அறுமுகப் பெயரும்
கோதில்சீர் ஒழுக்கமும் மருவி
நலந்தரு கல்விகேள்வியால் நிறைந்து
நற்றமிழ் வடமொழிகுடபால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலந்தரு மன்னர் மொழியிவை உணர்ந்து
நீடுசீர் முருகனே யென்ன
அலந்தவர்க் குதவி நினைந்தது முடிக்கும்
ஆற்றலும் பெற்றுயர் வடைந்தான்."

" எம்மையும் பயந்த ஈழமா நாட்டின்
இணையில்லாப் பெருநிதி யனையார்"

நாவலரின் தமிழ் சமயப்பணி என்பவைற்றோடு அவரின் சொற்பொழிவாற்றும்திறனும், உயர் காவிய ரசனையும் நாவலர் மேல் அடிகளாருக்கு முழுமையான பற்றதலை உருவாக்கின.

நாவலர் பன்முகத்தன்மை கொண்டவர், சோர் வறியாதவர், மக்களுக்குத் தேவையான நல்ல அம்சங் களை அணைத்து முன்னேறியவர். மக்கள் சார்புடை யவர். 'நாவலர் சரித்திரம்' எழுதிய த. கைலாசபிள்ளை நாவலரைப்பற்றி பின்வருமாறு கூறுகிறார்:

"முன்னிருந்த எங்கள் சமயாசாரியர்கள் தாம் தரிசனம் செய்யப் போன தலங்களிலெல்லாம் பதிகங்கள் அருளிச் செய்தார்கள், இவரோ தாம் போன இடங்களிலெல்லாம் லோகோபகாரமான சைவப்பிரசங்கங்கள் செய்து வந்தனர், வசனம் போலப்பாட்டுக்கள் இக்காலத்திற் பிரயோசன முடையவைகளல்ல வென்று கருதியே பாட்டுப் பாடுதலை இவர் குறைத்துக் கொண்டார்."

நாவலரது இப்பிரசங்கமுறையை அடிகளார் பின் பற்றுவதற்கு வாய்ப்பு இல்லாதபோதிலும், அடிகளாரின் சொற்பொழிவு அமைப்பு நாவலரின் பிரசங்க அமைப் பையே ஒத்திருந்தது. அவரது சொற்பொழிவுகள் ஆணித்தரமாயமைந்தவை. ஆனால் உரத்துக் குரவிடாதவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிகளாரின் பெரும்பாலான சொற்பொழிவுகள் அறிவாளர் குழாமிலேயே நிகழ்த்தப்பட்டன. எஞ்சிய பொதுவான இடங்களில் ஆற்றப்பட்ட சொற்பொழிவுகள் மிக எளிமையான, நாவலர் மரபை ஒட்டிய பிரசங்கங்களே என்பதை அவருரை கேட்டோர் சொல்வர்.

நாவலர் சைவசமயக் காவலர், ஆயினும் பிறசமயங்களை மதித்தவர், பிறசமய இலக்கியங்களையும் போற்றியவர், இந்த மரபினை அடிகளார் தொடர்கிறாரென்றே சொல்லலாம். சமணந் தொடர்புடைய சீவக சிந்தாமணியை நாவலர் போற்றியது போலவே அடிகளும் போற்றிப் பல இடங்களிலும் மேற்கோள் காட்டி, பிறமொழி இலக்கியங்களுடன் ஒப்பிட்டு ஆராய்ந்தார். நாவலர் 'சீவகசிந்தாமணி'யைப் பதிப்பிக்க எண்ணங் கொண்டிருந்தாராயினும் ஏனோ அது சாத்தியமாகவில்லை.

நாவலரின் எளிமையான நடையும். இலக்கிய நோக்கும் அக்காலத்து இலக்கணவித்துவான்களையும் வெகுவாகக் கவர்ந்தது. அடிகளாரின் மிகுந்த அன்புக்குரியவராயிருந்த அ. குமாரசாமிப்புலவர் (1854—1922) எழுத்திலும் பேச்சிலும் கூடிய அளவு எளிமையும் தெளிவுமிருக்கவேண்டு மென்று கூறமுனைந்ததற்கு நாவலர் சுட்டிய வழியே காரணமாக அமைந்ததெனலாம், குமாரசாமிப்புலவருடன் அடிகளார் அடிக்கடி அளவளாவுவது உண்டெனக் கூறுவார்கள், இவர்களிருவரும் நாவலர் மரபை செழுமையோடு முன்செல்ல வைப்பதில் பங்கு கொண்டிருந்தார்களென்பதனை இவர்களது உரைநடை உணர்த்தும்.

நாவலர் மக்களின் நலனுக்காக கல்வியை ஒரு ஆயுதமாக ஏந்தினார். பாடசாலைகள் அமைத்தார். நூல்களை இயற்றினார். போதனையும் செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதி, அன்னசத்திரம் ஆயிரங்கட்டல்; ஆலயம் பதினாயிரம் நாட்டல் என்ற இவற்றையெல்லாம் விட ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் கோடிபுண்ணியம் தருமெனக்கூறி வீரியமான கல்வியைச் சிந்தித்தார், அடிகள் இந்தக்கருத்தை மேலும் விரிவுபடுத்தினார், அறிவியல் புதுமைகளை தாமமைத்த பள்ளிக்கூட அறைகளிலே குடியிருத்தினார். தன் காலக் கல்விப் புதுமைகளை மாணவர்க்கு நெருக்கமான செய்திகளாக அறியவைத்தார். மாணவரின் மனோநிலைக்கும், சமூக வளர்ச்சிக்குமான கல்விமுறைகளைப் பற்றிச் சிந்தித்து அவற்றை வகுப்பறைகளிலே நடை முறைச் சித்தாந்த மாக மாற்றிக் காட்டினார், மேற்றிசைக்கலைச் செல்வங் களைத் தாய்மொழிக்கு கொண்டு வந்தார் 'தமிழா கல்வியை நம்பு, அது உனக்கு மேன்மை தரும்' என்றார், ஒரு நேரத்திலே அவரது மேற் பார்வையிலே பதினேழு கல்விக் கூடங்கள் அடங்கியிருந்தன என்ற செய்தி இன்றைக்கும் மலைப்பைத் தருகிற ஒன்றே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'அறிவாக வளர்ந்து நிறைவாக வாழ்ந்து'

1897ஆம் ஆண்டில் விவேகானந்தர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்குச் சென்று விரிவுரை நிகழ்த்திய வேளையில் த. நாகமுத்து என்பவர் (1868-1932) ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். இவர் 'இடைக்காடர்' என்னும் புனைப் பெயரிலே அக்காலத்திலே நாவல்களையும் எழுதி வந்தவர். 'நீலகண்டன்' 'சித்தகுமாரன்' ஆகியவை இவரது சில நாவல்கள்.

இவர் 1913ஆம் ஆண்டிலே வண்ணார் பண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தை நிறுவியவர். விவேகானந்தரை நேரில் கண்டு அவரால் கவரப்பட்டவர் நாகமுத்து. இதனால் இராமகிருஷ்ணமடத்தின் மீது நாகமுத்துவுக்கு மிகுந்த பற்றுதலுண்டாயிற்று.

1917ஆம் ஆண்டு சர்வானந்தர் இலங்கைக்கு வந்தார். அப்போது நாகமுத்துவையும், மயில்வாகனனையும் சந்தித்தார். இவர்களோடு பல விஷயங்களை அளவளாவினார். விவாதித்தார். இராமகிருஷ்ண இயக்கம் இலங்கையில் செல்வாக்குப் பெறவும், வளர்ச்சியடையவும் சர்வானந்தரின் வரவு உறுதுணையாயிற்று. மேலே கூறிய இருவரும் தேசத்தேவைகளுக்கும், சமூக மறுமலர்ச்சிக்கும் ஏற்ற கல்விமுறைகளைச் சிந்திக்கலாயினர். இதன் பயனாக யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பிலும், திருகோணமலையிலும் கல்விக்கூடங்கள் உருவாகி கல்விநிலை வளர்ச்சி எய்திற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வானந்தரைச் சந்தித்த நாகமுத்து 1917ஆம் வருஷம் டிசம்பர் மாதத்தில் வைத்தீஸ்வரா வித்தியாலயத்தை இராமகிருஷ்ணமடத்தினரிடம் கையளித்தார். இராமகிருஷ்ணமடம் இலங்கையில் முதல் நடத்திய வித்தியாலயம் இதுவேயாகும். இதன் முன் மாதிரியைப் பின்பற்றியே சிவானந்த வித்தியாலயம் அமைக்கப்பட்டது. மயில்வாகனனைப் போலவே நாகமுத்துவும் சைவ சித்தாந்தம் என்ற வரம்பிற்கு அப்பாலும், புதிய சிந்தனைக்குட்பட்ட கல்வியின் தேவை பற்றியும் விசாலமாகச் சிந்தித்தார். இதன் காரணமாகக் கலாச்சார நிலையில் இயல்பாகவே மாறுதல் போக்குகள் உருவாகுவது தவிர்க்க முடியாததாயிற்று.

இன்னும் சொல்லப்போனால் விவேகானந்தரது வேதாந்த உரைகளும், எழுத்தும் ஈழத்தமிழரின் அரசியல், சமுதாயம், பொருளாதாரம் ஆகிய துறைகளில் புதிய மாற்றங்களுக்கான சிந்தனையையும் உருவாக்கின. இத்துறைகளைத் தாக்கிய விவேகானந்த சிந்தனை, கலாச்சாரப்போக்கிலும் குறிப்பாக இலக்கியத்திலும் செழுமையான வடிவங்கொண்டது.

மயில்வாகனன் இத்தகைய இலக்கியச் செழுமையை வெளிப்படுத்தியதைப் போலவே, நாகமுத்துவின் நாவல்களும் அமைந்தன. மயில்வாகனன் விபுலானந்த அடிகளாகி, தமிழின் பல்வேறு துறைகளிலும் புதிய கண்ணோட்டத்தை உருவாக்கினார். தன் முன்னிருந்தோர் மனத்தில் பொறி கொண்டிருந்த மக்கள் மேன்மைக்கான கருத்தோட்டங்களை அடிகளார் விகாசித்து எரிய வைத்தார்.

விபுலானந்தரின் இந்தப் பண்பு நாகமுத்துவில் அச்சுப்பிசகாமல் அமைந்திருந்ததைக்காணலாம், 'கல்விமானாகவும், நாவலாசிரியராகவும், இலட்சியப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றுடைய சமூக சேவையாளராகவும் திகழ்ந்த நாக முத்து அடிகளாரைப் போலவே தமிழ்மொழியியல் பற்றிய கருத்தோட்டத்தை உடையவராயிருந்தார்.

மேற்றிசைச் செல்வங்களையும் தேர்ந்து சேர்த்து உள் வாங்கித் தமிழின் வசனவளத்தைப் புத்தம் புதிதாக ஆக்கவேண்டுமென்ற கருத்தை அடிகளைப்போலவே நாகமுத்துவும் நடைமுறையில் சாதித்திருக்கிறார்.

தாய்மொழிக்கல்வியின் அவசியம் பற்றிய கருத்தை அடிகளாரைப் போலவே, கல்விபயிற்றும் ஆசிரியராய் நின்று உறுதியோடு வற்புறுத்திய அடிகளாரின் காலத் தவரில் குறிப்பிடத்தக்க இன்னொருவராக நிற்பவர் நாகமுத்து.

அவரது நாவல்களான 'நீலகண்டனு'ம், 'சித் குமார'னும் ஈழத்து மண்வளத்தை, அதன் தேவை கருதிய இலட்சியங்களோடு சித்தரித்தன என்பதை அதன் இன்றைய வாசிப்பில் தெளிவாக உணர முடியும்.

காலம் அருளிய அடிகளைப்போலவே, நாகமுத்து வும் தன் இன, மொழி, சமய, சமுதாய மறுமலர்ச் சியைத் தீவிரமாக விரும்பினாராதலால் தம்மைச்சுற்றி யிருந்த பல பழமைப்பிடிப்பான- மானிட அவமான மான கருது கோள்களையும் ஓங்கித் தாக்குவதில் பின்னிற்கவில்லை.

1925ஆம் ஆண்டு, யாழ்ப்பாணம் நாவலர் அச்சுக் கூடத்திலே நாகமுத்து நமது 'நீலகண்டன் அல்லது ஓர் சாதிவேளாளன், என்ற நாவலை அச்சிட்டு வெளி யிட்டார். அந்த நாவலின் முன்னுரையில் ஆசிரியர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

''இது சாதியபிமானமின்னதென விளங்காது தம்மிற்றாழ்ந்தவர்களை யிம்சை செய்பவர்களுக்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தி புகட்டும் நோக்கமாகவும், ஏனையோருக்கு நம்மவர்களின் உண்மையான சாதி நிலையின்னதென உணர்த்தும் நோக்கமாகவும் எழுதப்பட்ட இன்னொரு கதையாகும்''.

இராமகிருஷ்ண பரமஹம்சர் விவேகானந்தர் கருத்தோட்டங்களால் அடிகள் காலத்தில் கவரப்பட்ட 'அறிவார்ந்த குழு' ஒன்று இவ்விதம் தமிழியலின் பல்வேறு துறைகளிலும் மாற்றங்களையும், வீச்சுக்களையும் ஏற்படுத்திக் கொண்டிருந்தபோது அம்முயற்சிகளுக்கெல்லாம் செம்மை வாய்ந்த ஆதரவை அடிகளார் நல்கினார்.

அடிகளார் இலக்கியத்தில் தாபித்த சமரச சன்மார்க்க நெறியை, நாகமுத்துவைப் பின் தொடர்ந்து மேற்கொண்ட அறிவாளர்களாகப் பின் வரும் சிலரை நாம் காணுகின்றோம்.

புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை (1899-1978) மா. பீதம்பரம் (1898-1972) கலைப்புலவர் க. நவரத்தினம் (1898-1962) ஆகியோர் அவர்கள்.

இவர்கள் முற்று முழுதாக சமரச சன்மார்க்கத்தை தமது துறைகளில் வெளிப்படுத்தியவர்களே. புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை மொழிபெயர்த்துச் செய்யுள் வடிவிலே யாத்த 'பகவத்கீதை' வெண்பா இந்தக் கருத்தினை உறுதி செய்வதாகும்.

நாகமுத்துவைப்போலவே சமுதாயச் சீர்திருத்தம், தமிழ் வளர்ச்சி, இலக்கிய ஆக்கம் என்பனவற்றில் அடிகளார் காலத்தில் வாழ்ந்து அவரோடு ஒத்துப் போய்த் திகழ்ந்த இன்னொருவர் பாவலர் தெ. அ. துரையப்பாபிள்ளை ஆவார். (1872-1929)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவலர், தமிழ்ப்புலமை நிரம்பிய குடும்பத்தில் பிறந்தவர். பின்னர் கிறிஸ்தவராகி வட இந்தியாவில் கல்வி பயின்றவர். இந்தியத் தேசிய இயக்கம் அவரைப் பாதித்தது.1900ஆம் ஆண்டில் தெல்லிப்பழை அமெரிக்க மிஷன் பாடசாலைத் தலைமை ஆசிரியரானார். மறு ஆண்டில் 'உதயதாரகை' ஆசிரியராகப் பொறுப் பேற்றார்.

1910ஆம் ஆண்டில் தமது வீட்டிலேயே 'மகாஜனக் கல்லூரி' என்று பின்னாளில் பெருமையோடு இலங்கிய கல்வி நிறுவனத்தை உருவாக்கினார். தமது முழு உழைப்பையும், வருவாயையும் அக்கல்லூரியின் வளர்ச் சிக்கே செலவிட்டார்.

1921ஆம் ஆண்டில் 'இந்துசாதனம்' என்ற இந்து சமய தமிழ், ஆங்கில இதழ்களின் ஆசிரியர் குழுவில் பணிபுரிந்தார். 1927ஆம் ஆண்டில் மகாத்மா காந்தி இலங்கை வந்தபோது வரவேற்புச் சபையின் முக்கிய உறுப்பினராய்ப் பணியாற்றினார் பாவலர்.

அடிகளார் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த காலத்திலே பாவலர் துரையப்பா பிள்ளை, தமது கல்விப்பணியையும் இலக்கிய முயற்சிகளையும் மேற்கொண்டு வந்ததோடு அடிகளாரோடும் தொடர்புகள் வைத்திருந்திருக்கிறார்.

27 - 12 - 1922ஆம் ஆண்டிலே முதன்முதலாக யாழ்ப்பாணத்திலே தமிழ் இலக்கியமகாநாடொன்று நடைபெற்றது. அ. மாதவையா, கா. சுப்பிரமணிய பிள்ளை (1889 - 1945) தமிழறிஞர் பா. வே. மாணிக்க நாயக்கர் (1871 - 1981) ஆகியோர் இம்மகாநாட்டுக்கு அழைக்கப்பட்டோரில் சிலர், இதன் இரண்டாவது நாள் மகா நாட்டில் 'தமிழ்க்கல்வியின் தற்காலநிலை' பற்றி பாவலர் விரிவான உரைநிகழ்த்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி நிலை பற்றிய பாவலர் கருத்து, அடிகளாரது கருத்தோடு ஒத்ததாயிருந்தது என்பதை அழுத்திச் சொல்லவேண்டியதில்லை.

எல்லா விதங்களிலும் மகாகவி பாரதியாரோடு வைத்தெண்ணத்தக்க பாவலர் துரையப்பாபிள்ளை, விபுலானந்தரோடு ஒத்த கருத்து உடையவராகவும்-கல்வி வளர்ச்சியில் அடிகள்போல உழைத்தவராகவும் காணப்படுவது அதிசயமான ஒன்று அல்ல.

இலக்கியசங்க மகாநாடு பெருஞ்சிறப்போடு நடந்ததின் எதிரொலியாக, தமிழருக்கு ஒரு இலக்கிய சங்கம் அமைக்கவேண்டுமென்ற அவர் ஈழத்தமிழபிமானிகளிடம் உண்டாயிற்று. இதன் விளைவாக யாழ்ப்பாணத்தில் 'ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச் சங்கம்' வீறுடன் உயிர்கொண்டது.

இதற்கு அடிகளார் பெரும் பொறுப்பேற்று இயங்கினார். 'ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்க'த்தின் தலைவராகவும் பணியாற்றினார். பாவலர் துரையப்பாபிள்ளை, இச்சங்கத்தின் செயற்குழுவில் இடம்பெற்று உற்சாகத்துடன் உழைத்தார்.

அடிகளார் தமிழ்வளர்ச்சிக்கான பணியிலே அனைவரையும் அணைத்துச் செல்கிற இயல்பினைப் பெற்றிருந்தார். இவ்விதத்தில் சமயத்துறவி என்கிற கட்டுப்பாடுகளைக்கூட அவர் ஒரு புறத்தில் தள்ளிவிட்டுப்பணியாற்றினார் என்பதனை அவரின் பல்வேறு வாழ்வு நிகழ்ச்சிகள் நமக்குத் தெரியவைக்கின்றன.

எல்லா வயதினரையும் - அனைத்துத் தரப்பினரையும் தன் கருத்துக்கு சிறிதளவுக்காவது இசைந்திருந்தபோது அடிகளார் அவர்களோடு பரிவும் அன்பும் கொண்டு பழகினார். அவர்களது கருத்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கு மதிப்பளித்துக் கேட்டார். தன் அபிப்பிராயங் களைக்கூறி அவர்களை ஊக்கப்படுத்தினார்.

அவருக்கு அன்பராகவும், நண்பராகவும்: தொண்ட ராகவும் வாய்த்தவர்கள் அடிகளாரின் மீது கொண்டி ருந்த அன்பு, பக்தியெனவே ஆகியிருந்தது.

சுன்னாகம் அ. குமாரசாமிப்புலவர், அம்பலவாண நாவலர் பராசக்தி சுவாமிகள், வெ, சுப்பிரமணிய முதலியார், செந்தமிழ்ப்பத்திராதிபர் நாராயண அய்யங் கார், மா. பாலசுப்பிரமணிய முதலியார், மு. கதிரேசச் செட்டியார், த. வே. உமாமகேசுவர பிள்ளை, மு, திரு விளங்கம், சிற். கைலாசபிள்ளை. வித்துவான் சி. தாமோதரம்பிள்ளை, நவநீத கிருஷ்ணபாரதியார், அ. மாதவைய்யா, மகாவித்துவான். சி. கணேசையர் என்போர் இவாது அறிவார்த்த வளர்ச்சிக்குத் துணை யென நின்றவர்கள்.

தன்னைத் தேடிவந்து அறிவு பெருக்கியவர்களை தாயின் பரிவோடு அரவணைத்து அறிவளித்து உதவிய அடிகளார் உன்னதமாள ஆசிரியருக்கு உதாரண மாவார் என்று அவர்களே பாராட்டுவதினால் அறிய முடிகிறது. புலவர்மணி ஏ. பெரியதம்பிப் பிள்ளை, மா. பீதாம்பரம், கலைப்புலவர் க. நவரத்தினம், எம். மயில்வாகனம், எஸ். முத்துக்குமாரு, ச. அம்பிகை பாகன். மு. கணபதிபிள்ளை ஆகியோர் இவ்வரிசையில் வருவர்.

வாழ்வு முழுதும் இன்முகத்தோடும், தண்சொற் களோடும் சேர்ந்தோரைப் போற்றிய அடிகளாரின் பண்பு, மானுடத்துக்குப் பெருமையளிக்கின்ற ஒன்றாக என்றும் விளங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றும் கேட்கும் குரல்...

அடிகளாருக்கு ஆராய்ச்சி, யோகமாயிருந்தது. ஓயாத படிப்பு, சிந்தனை, எழுத்து என்பன தணிவறியாத தாகமாய் அவரிடம் விளங்கிற்று.

அறிவியல், தமிழியல், நாடகவியல், இசையியல் துறைகளில் இன்னும் பல புதிய நூல்களை எழுத அவர் எண்ணியிருந்தார். மறைமலையடிகளோடு சேர்ந்து மதுரைத்தமிழ்ச் சங்கம் மூன்று பாகங்களாக வெளியிட்ட தமிழ்ச்சொல்லகராதி போன்ற முயற்சியில் மேலும் ஈடுபட அவர் எண்ணியிருந்தார்.

'மதங்கசூளாமணி'யைப் புதுக்கியும் செம்மைப் படுத்தியும் எழுதவேண்டுமென்பது அவரது ஆசை.

யாழ்நூலின் தொடர்ச்சியாக இன்னொரு இசை ஆராய்ச்சி நூலை எழுத எண்ணியிருந்ததை அவரே பின்வருமாறு கூறுகிறார்.

> ''யாழ்க் கருவியொழிந்த பிற இசைக் கருவிகளைக் குறித்தும், இசையிலக்கணம், இசைப்பாட்டிலக்கணம், இசைக்கலை வளர்ச்சியென்னும் பொருள்களைக் குறித்தும் ஆராய்ந்து கண்ட முடிவுகள் சில கையிலுள்ளன; காணவேண்டியன இன்னும் பலவுள. இறைவன் திருவருள் பாலிப்பானாயின், ஏற்றகாலத்திலே அம்முடிபுகள் மற்றொரு நூலுருவாக வெளிவரல் கூடும்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(நூல்தோன்றிய வரன்முறையும், அவையடக்கமும் நூற்பயனும் — பாயிரவியல், யாழ்நூல்)

யாழ்நூலை ஆங்கிலத்தில் எழுதவும் அடிகளார் எண்ணங் கொண்டிருந்தார். இதன் அவசியத்தை உணர்ந்த அன்றைய உபவித்தியாபதி திரு. கே. எஸ் அருணந்தி, அடிகளாரிடம் ஒரு சுருக்கெழுத்தாளரை அனுப்பி யாழ்நூலை ஆங்கிலத்தில் எழுதி முடிக்க அவருக்கு எற்ற உதவிகளை வழங்கினார். அடிகளார் அம்முயற்சியை முடித்திருப்பாரேல் உலக இசைமரபில் அவர் மேதையாகப் போற்றப்பட்டு தமிழ் புகழ் வாய்ந்த இசை மொழியாய் மேன்மையுற்றிருக்கும்.

திருக்குறளுக்கு ஆங்கிலத்தில் செவ்விதான மொழி பெயர்ப்பு ஒன்றினையும் கொண்டு வர அடிகளார் எண்ணியிருந்தார்.

1940இல் அடிகளார் பாரத ஆராய்ச்சியில் ஈடுபாடு கொள்ளத்தொடங்கினார், மூன்று பாரத ஏட்டுப்பிரதிகள் சுவாமிக்குச் சொந்தமாயிருந்தன. அச்சுப்பிரதி ஒன்றில் குறிப்பெழுதிக் கொண்டிருப்பார் அடிகளார். பாரதத்தின் காப்பியத்தலைவன் கர்ணனே என்பது அடிகளின் முடிவு.

அச்சுநூலாக இன்று வழங்கும் பாரதத்தில் இடம் பெறாமல் விடப்பட்ட 200 பாடல்கள் வரை அடிகளாரிட மிருந்தன. அடிகளார் பல ஓலைப்பிரதிகளை ஆராய்ந்து திருத்தமான பாரதப்பதிப்பை உரையோடு வெளியிட எண்ணியிருந்தார்.

பாரதக்கதையுடன் தொடர்புள்ள 'மாவிந்த பாரதம்' என்னும் ஒரு நூலையும் பதிப்பிக்க வேண்டு மென அடிகளார் தமது மாணவர்களுக்குக்கூறிக்கொண்டி ருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிகளார் 'தமிழால் முடியும்' என்று அறிவியல் துறைகள் பற்றிக் கூறிய வார்த்தைகளும், இயற்றிய செயல்களும் தமிழரிடையே பலித்திருக்கின்றதா?

இலங்கையில் பாலர் வகுப்பு முலல் பல்கலைக் கழகம் வரை தாய் மொழியில் பயிற்றவும், பயின்றிடவும் முடியும் என்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் அது இன்னமும் கேள்விக்குறியாகவும் கேலிப்பொருளாகவுமே ஆக்கப்பட்டிருக்கின்றது. 'தமிழை' அரசியலில் 'மேன்மை'ப்படுத்தினாலும், நடைமுறையில் தமிழுக்கு உரிய இடங் கொடுக்க இன்னும் தமிழ் வழிக்கல்விப் போராட்டங்கள் நடைபெற்ற வண்ணமே உள்ளன.

'தமிழ் மொழியின் தற்கால நிலைமையும் தமிழரின் கடமையும்' என்ற தலைப்பில் சென்னைப் பல்கலைக் கழகம் சுதேசபாஷைகளைப் புறக்கணிப்பதை ஆணித்தரமாக அடிகளார் அன்று எதிர்த்திருக்கின்றார்:

> ''சருவகலாசாலை ஏற்பட்டிருப்பது எதற்கோ? ஏழைச் சனங்களிடமிருந்து பெறுகிற வரிப்பணத்திலிருந்து கோடிக்கணக்கான ரூபாக்களைச் சருவகலாசாலைக்கு கொடுத்து வருவது என்ன காரணத்திற்காகவோ! சருவகலாசாலையார் வழங்கும் பட்டங்கள் தம்மொழி மறந்து பிறமொழியிற் பிதுற்றுகிற பேதை மக்களைக் குறியீடு செய்கிற அடிமை முத்திரையாமோ?''

இந்தக் கேள்வி, இன்றைக்கும் மங்காத குரலாக தமிழ்நாட்டில் ஒலித்துக் கொண்டேயிருக்கிறது.

பழந்தமிழ் இசைபற்றி ஆராய்ச்சி நீண்டகால வரலாறுடையது. பழந்தமிழ் இசைபற்றிய ஆராய்ச்சியில் ஆய்வாளர்கள் தீவிரமாக காலத்துக்குக் காலம் பங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேற்றுத் தமது ஆராய்வுகளை வெளிப்படுத்தியிருக்கின் றனர். இந்த ஆராய்ச்சியின் சீரான ஒரு தொடரே, விபுலானந்தரின் இசை ஆய்வாக அறியப்படுவது. ஆனால் ஆணித்தரமாக அறிவியல், கணித ஆதாரங் களோடும் இசைமரபு பற்றிய தெளிந்த போதத்தோடும் தனது பழந்தமிழ் இசை ஆராய்ச்சியை 'யாழ்நூல்' மூலம் நிறுவினார் அடிகளார்.

ஆப்ரகாம் பண்டிதர், குடந்தை சுந்தரேசன், சாம்ப மூர்த்தி, தண்டபாணி தேசிகர்போன்றோரின் வரிசையில் விபுலானந்தரின் இசை ஆராய்ச்சிமுறையும், பங்களிப்பும் பெருமையோடு வைத்தெண்ணத்தக்கது. 'யாழ்நூல்', தேவார இசை தோன்றிய காலம்வரையுள்ள இசைத் தமிழினது வளர்ச்சியை ஆராய்கின்றது. யாழ்நூலின் இந்த ஆராய்ச்சி பற்றிய விவாதங்களோ, ஆக்கபூர்வ மான முன்னெடுத்தலோ இதுவரை ஆரம்பிக்கப்பட வில்லை.

1947ல் 'யாழ்நூல்" வெளியாயிற்று. இசைத்துறை சார்ந்தோரில் சிலர் வேண்டுமென்றே இதைப் புறக் கணித்தனர்; இருட்டடிப்புச் செய்தனர்; ஆதாரமற்ற விமர்சனங்களை முன்வைத்தனர்; தெரியாதது போலப் பாவனை செய்தனர்.

இதற்கும் இன்னொரு புறத்தில் அடிகளாருக்குத் தெய்வீக வடிவம் வழங்கப்பட்டது. யாழ்நூலுக்குப் பூமாலை அணிவித்துச் சூடம் காட்டப்பட்டது.

யாழ்நூலை அது எழுந்த காலப் பின்னணியில் வைத்து மதிப்பிடுவதும், அது கூறியகாலத்தினதும் அதன் பின்னுமுள்ள தமிழிசை வளர்ச்சிப் போக்கை ஆராய்வதும் தெளிவதும் முன்னெடுத்துச் செல்வதுமே இன்றைய காலத்தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் இசை மரபை, இந்திய இசைமரபு வளர்ச்சி யோடும் அதன் மூலம் வியத்தகு மாறுதல்களுக்கும் வளர்ச்சிக்கும் உள்ளாகிவரும் உலக இசை வளர்ச்சி யோடும் சேர்ந்து முன்னேறச் செய்யவும் இந்த முயற்சி வழி வகுப்பதாக அமையும். அடிகளார், தமிழிசையை ஒரு புதிய தடத்திற்கு அதன் மரபோடமைந்த விதத் திலே இட்டுச் செல்லமுயன்றார். இம்முயற்சியை சமய எல்லைகளுக்குள்ளோ, இனமொழி வரம்பினுள்ளோ அறிவுக் கொவ்வாத பிடிவாதத்தோடு அவர் மேற் கொள்ளமுயலவில்லை என்பதுதான் உண்மை.

மொஸார்ட் (1891 - 1991) என்ற இசை மேதை யைப்பற்றி ஜிவ்டேவிட் என்னும் இசைத்துறை விமர்சகர் பின்வருமாறு கூறுவார் :

> ''அவரின் ஞானம் எல்லையற்றுப் பரந்து, மேலும் மேலும் இலக்கைத் தேடிக் கொண் டிருந்தது. ஆத்மசுத்தியோடு அவர் இசைத்துறை யின் சிகரங்களையெல்லாம் தேடிச்சென்றார். அவர் வெளியிட்டது குறைவு. வெளியிடாமல் விட்டது அவரின் இசையறிவைப்போலவே அனந்த மானது. ஆனால் அவற்றை அவரை அறிய முயல்வதின் மூலம் நாம் தெளியலாம். அவரைப் பயிலப் பயில நாம் இசையின் நுணுக்கங்களைத் தெளிந்துணரலாம். அதற்குக் காலம் சென்றாலும் கூட.''

மொஸார்ட்டுக்கு மட்டுமல்ல, இது விபுலானந்த அடி களுக்கும் அப்படியே பொருந்தத்தக்கது தான்.

○ ○

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வு முழுவதும் ''அறிவெனப்படுவது அளந்து துணிதல்'' என்ற உன்னதநோக்கோடு தேனீயாய்த் திரிந்து அறிவு திரட்டி தமிழர்க்கு வழங்கிய அடிகளார் இன்னும் தமிழரால் நன்கு அறிந்து பயிலப்படாதது வேதனைக்குரிய விடயம். கதிர்காமம் முதல் கயிலாயம் வரை சென்று பணியாற்றிய அடிகளாரை ஆய்வதும், அறிவதும் இன்றைய தமிழிரின் கலாச்சார வாழ்வுக்கும். வளத்துக்கும் உந்து சக்தியாக அமையும்.

ஏனெனில் தமிழியல், அறிவியல், வாழ்வியல், இசையியல் துறைகளிலுள்ள பலகுறைகளை நீக்குவதற்கான வழிவகைகளை அன்று கூறிய அடிகளாரின் குரல் இன்றைக்கும் ஏற்றதாய், வேண்டியதாய், அவசியமானதாய் இப்போதும் ஒலித்துக்கொண்டிருக்கிறது.

☐

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னிணைப்பு—1

## அடிகளார் எழுதிய நூல்கள்.

**யாழ்நூல்**

கரந்தைத் தமிழ்ச் சங்கம்.
முதற் பதிப்பு : 1947.

**மதங்க சூளாமணி**
மதுரைத் தமிழ்ச் சங்கம்.
முதற்பதிப்பு : 1924.

**நடராஜவடிவம்**

**நாவலர் நான் மணிமாலை.**

## அடிகளார் மொழிபெயர்த்தவை.

**கர்மயோகம்.**
**ஞானயோகம்.**
**விவேகானந்த ஞானதீபம்.**
**நம்மவர் நாட்டு ஞான வாழ்க்கை.**
**விவேகானந்த சம்பாசணை.**

ஸ்ரீராமகிருஷ்ண மடம்,
சென்னை - 4.

## அடிகளார் பதிப்பித்தவை.

**உலகியல் விளக்கம் - நவநீத கிருஷ்ணபாரதியார்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னிணைப்பு - 2

## அடிகளாரின் கட்டுரை, சொற்பொழிவுகள், கவிதை, நாடகங்களை உள்ளடக்கிய தொகுப்புகள்.

**விபுலாநந்தத்தேன்.**

தொகுப்பாசிரியர் : அருள் செல்வநாயகம்.
பாரி நிலையம், சென்னை.
முதற்பதிப்பு : நவம்பர் 1956.

**விபுலாநந்த வெள்ளம்.**

தொகுப்பாசிரியர் : அருள்செல்வநாயகம்..
ஓரியன்ட் லாங்மன்ஸ், சென்னை.
முதற்பதிப்பு : 1961.

**விபுலாநந்த செல்வம்.**
**விபுலாநந்த ஆராய்வு.**

தொகுப்பாசிரியர் : அருள் செல்வநாயகம்.
கலைமகள் வெளியீடு, சென்னை - 4.
முதற்பதிப்பு : மார்ச்சு, ஜூலை 1963.

**விபுலாநந்த உள்ளம்.**

தொகுப்பாசிரியர் : ச. அம்பிகைபாகன்.
விபுலாநந்த புத்தகசாலை - அச்சகம்.
முதற்பதிப்பு : 1976

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னிணைப்பு — 3

## பண்டித மயில்வாகனனார் B.Sc, (London) என்ற பெயர் தாங்கியிருந்த காலத்தில் எழுதியவை.

1. பூஞ்சோலை காவலன் : இரவீந்திரநாத தாகூர் எழுதிய (Gardener) என்ற ஆங்கிலப்பாடல் களின் தமிழ் மொழிபெயர்ப்பு, செந்தமிழ் - தொகுதி 20 பக்கம் 301 - 307.

2. மேற்றிசைச் செல்வம் : செந்தமிழ் - தொகுதி 20; பக்கம். 381 - 390; 469 - 475.

3. விஞ்ஞானதீபம் : செந்தமிழ் - தொகுதி 20. பக்கம் 1 - 10; 61 - 68.

4. பொருணூற் சிறப்பு : செந்தமிழ் - தொகுதி 21. பக்கம் - 123 - 130; 560 - 561

## பிரபோத சைதன்யர் என்ற பெயரில் எழுதியவை.

5. சூரிய சந்திரோற்பத்தி (விஞ்ஞானதீபம் கட்டுரைத் தொடர்) செந்தமிழ் - தொகுதி 21. பக்கம் 245 - 251.

6. மலைகடலுற்பத்தி : செந்தமிழ் - தொகுதி 21. பக்கம் 349 - 356.

7. மேற்றிசைச் செல்வம் : செந்தமிழ்- தொகுதி 30. பக்கம் 475 தொடர்ச்சி - தொகுதி 21. பக்கம் 185 - 192.

8. யவனபுரத்துக் கலைச்செல்வம் : செந்தமிழ் - தொகுதி 21. பக்கம் 501 - 507,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. பூஞ்சோலை காவலன் : செந்தமிழ் : தொகுதி. 20. பக்கம் 307 இன் தொடர்ச்சி. செந்தமிழ் தொகுதி 22. பக்கம் 69-77.

10. மேற்றிசைச் செல்வம் : செந்தமிழ் தொகுதி 22. பக்கம் 121 - 130.

## விபுலானந்த அடிகள் என்ற பெயரில் எழுதியவை.

11. மதங்கசூளாமணி : செந்தமிழ், தொகுதி 22. பக்கம் 321 - 344; 361-368; 401 - 422; 467 - 489. தொகுதி 23. பக்கம் 1 - 24; 72 - 86; 121 - 130; 161 - 172; 201 - 206.

12. மகாலக்ஷ்மி தோத்திரம்: செந்தமிழ் தொகுதி 22. பக்கம் 211 - 245.

13. விஞ்ஞானதீபம் (தொடர்ச்சி) தொகுதி 22. பக்கம் 209 - 222.

14. இமயஞ்சேர்ந்த காக்கை. தமிழ்ப் பொழில் 16ஆம் துணர். பக்கம் 367 - 375.

15. உள்ளங்கவர்கள்ளன் : தமிழ்ப்பொழில்: 16ஆம் துணர், பக்கம்335 - 341

16. திருக்குறள் முதலதிகாரமும் திருச்சிவபுரத்துத் திருப்பதிகமும்: தமிழ்ப்பொழில். 16ஆம் துணர், பக்கம் 207 - 213.

17. நீரரமகளிர் இன்னிசைப் பாடல். தமிழ்ப்பொழில். 16ஆம் துணர். பக்கம் 291 - 296.

18. பண்ணுந்திறனும்: தமிழ்ப்பொழில். 16ஆம்துணர் பக்கம் 391 - 397; 439 - 448.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. லகரவெழுத்து : தமிழ்ப்பொழில். 16ஆம் துணர் பக்கம் 189 - 195.

20. உணவு : தமிழ்ப்பொழில். 17ஆம் துணர். பக்கம் 9-13.

21. குழலும்யாழும்: தமிழ்ப்பொழில் 17ஆம் துணர் பக்கம் 26 - 30; 35 - 43.

22. கண்ணகியரர் வழக்குரை: தமிழ்ப்பொழில் 17ஆம் துணர் பக்கம் 59- 61.

23. எண்ணும் இசையும் : தமிழ்ப்பொழில் 17ஆம் துணர் பக்கம் 67 - 71; 45 - 107; 127-130; 158 - 160.

24. பாலைத்திரிபு : தமிழ்ப் பொழில் 17ஆம் துணர் பக்கம் 246 - 269; 278 - 281; 306-309; 338 - 341.

25. பாலைத்திரிபு : தமிழ்ப்பொழில் 18ஆம் துணர் பக்கம் 5 - 12.

26. சுருதிவீணை : தமிழ்ப்பொழில் 18ஆம் துணர் பக்கம் 41 - 48; 81 - 87.

27. இயலிசைநாடகம் : தமிழ்ப்பொழில் 18ஆம் துணர் பக்கம் 160 - 170.

28. கங்கையில் எழுதிவிட்ட ஓலை : தமிழ்ப்பொழில் பக்கம் : 411 - 441.

29. சோழமண்டலத்தமிழும் ஈழ மண்டலத்தமிழும் : கலைமகள் பொங்கல்மலர் 1941, பக்கம் 82- 88

30. தமிழில் எழுத்துக்குறை : கலைமகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31. ஆங்கிலவாணி : பண்டிதமணி மு. கதிரேசஞ் செட்டியார் மணிவிழாமலர்.

32. மானசவாவி—

33. ஏனாதி மோதிரம் —

34. The book of books of Tamil Land.
Vedanta Kesarl 1940.

35. The harps of Ancient Tamil Land and the Twentytwo strutis of Indian Musical Theory
Calcutta review - 1941.

36. The Origin and Growth of Tamil Literature.
The Calcutta Heritage of India Vol - III.

37. Phonetics
Modern review

38. The Development of Tamilian Religious Thought
Annamalai University Journal Vol 1. No. 2.

39. மின்சார சாத்திர வரலாறு.
(செப்டம்பர் 20. 1936ஆம் ஆண்டு கலைச்சொல் லாக்க மகாநாட்டு உரையில் மேலுள்ள கட்டுரை யின் ஒரு பகுதி மேற்கோளாய்க் காட்டப்பட்டது)

40. இவர் ஆசிரியராயிருந்து நடத்திய இதழ்களில் எழுதிய கட்டுரைகள், தலையங்கங்கள், உள்ளக் கிடக்கைகள் என்பவை ஏராளம் உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னிணைப்பு — 4

# இந்நூலை எழுதத் துணைபுரிந்தவை.

**விபுலானந்த அடிகள்.**

தொகுப்பாசிரியர் : மு. திருநாவுக்கரசு.
இ. மா. கோபாலகிருஷ்ணக்கோன் — சென்னை
முதற்பதிப்பு : 1951.

**விபுலாநந்த அடிகள்.**

கழுவாஞ்சிக்குடி — டி. ரி. செல்வநாயகம்.
சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம் சென்னை—1.
முதற் பதிப்பு : 1953.

**ஈழநாட்டின் தமிழ்ச்சுடர்மணிகள்.**

தென்புலோலியூர் மு. கணபதிப்பிள்ளை.
பாரிநிலையம்—சென்னை-1.
முதற் பதிப்பு : 1967.

**விபுலாநந்த வெள்ளி விழா மணிமலர்.**

யாழ்ப்பாணம்.
12-5-48.

**ஈழமணி.**

விபுலானந்தர் நினைவுமலர்.
பருத்தித்துறை.
தை — மாசி 1948.

**விவேகானந்தர்.**

ரோமன்ரோலாண்ட்
சாகித்ய அகாதமி — புதுடில்லி.
முதற்பதிப்பு 1963.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விவேகானந்தரின் பாதையிலே.**

ஜவஹர்லால் நேரு.
ஸ்ரீ ராமகிருஷ்ணமடம் — சென்னை.
முதற்பதிப்பு—1985

**ஸ்ரீ விவேகானந்தர் சரிதம்.**

சித்பவானந்தர்.
ஸ்ரீராமகிருஷ்ணமடம் — சென்னை.
பதினைந்தாம் பதிப்பு — 91.

**புதிய இந்தியாவைப்படைப்போம்.**

விவேகானந்தர்.
ஸ்ரீராமகிருஷ்ணமடம்.
முதற்பதிப்பு — 1981.

**பாரதியார் கவிதைகள்.**

**கலைக்களஞ்சியம்—** ஆறாந்தொகுதி.
தமிழ்வளர்ச்சிக்கழகம் — சென்னை.

**சுவாமி விவேகானந்தரின் ஞானதீபம்.**

ஆறாம் தொகுதி.
ஸ்ரீராமகிருஷ்ணமடம் — சென்னை
முதற் பதிப்பு-1963.

**கலைச் சொற்கள்.**

சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கம்.
திருநெல்வேலி.
முதற்பதிப்பு-1938.

**ஈழத்து இலக்கிய முன்னோடிகள்.**

கலாநிதி க. கைலாசபதி.
மக்கள் வெளியீடு — சென்னை-2.
முதற்பதிப்பு-1986.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஈழத்தில் தமிழ் இலக்கியம்**

கலாநிதி கா. சிவத்தம்பி.
தமிழ்ப் புத்தகாலயம்—சென்னை-5.
முதற்பதிப்பு—1978.

**Scientists and Inventors**

By Anthony Feldman And
Peter Ford.
Bloosmbury Books - London.
First Edition—1989.

இவற்றோடு அடிகளார் ஆசிரியராயிருந்த காலத்து வேதாந்தகேசரி, ஸ்ரீராமகிருஷ்ண விஜயம், பிரபுத்த பாரதா, விவேகானந்தன் இதழ்கள்.

அடிகளார் எழுதிய யாழ்நூல், மதங்கசூளாமணி.

அடிகளாரின் சொற்பொழிவு, கட்டுரைகள், கவிதைகள், நாடகங்கள் என்பன உள்ளடங்கிய விபுலாநந்த வெள்ளம், விபுலாநந்தத்தேன், விபுலாநந்த செல்வம், விபுலாநந்த ஆராய்வு, விபுலாநந்தர் உள்ளம் என்ற நூல்கள்.

☐

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

---

சில குறிப்புகள்: அடிகளார் பொறியியல் கல்லூரியில் பயின்று 'டிப்ளமோ' பட்டம் பெற்று அங்கேயே உதவி ஆசிரியரானார் என்ற தகவலில், பொறியியல் கல்லூரிக்குப் பதிலாக-அரசினர் தொழில் நுட்பக் கல்லூரி என்றிருக்க வேண்டும். 127ஆம் பக்கத்தில் ஈசனுவக்கும் மலர் என்பது ஈசனுக்கு மலர் எனவும், 9 ம் பக்கத்தில் பஞ்சபூத வியற்கையை என்பது பஞ்பூத வியற்கையாயும் அச்சிடப்பட்டுள்ளது.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றும் கேட்கும் குரல் :
விபுலானந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவியல் புதுமைகள் உலகின் வரலாற்றை ஒரு பாய்ச்சலுக்கு இட்டுச் செல்வதைக் கண்ணாரக் கண்டவர் அவர். விண்ணிலும், மண்ணிலும் காற்றிலும், கடலிலும், உடலிலும், சிந்தனையிலும் நவீன அறிவியல் விளைத்த மாற்றங்களை மனதார அவர் வரவேற்றார், அறிவியலைத் தன் மொழிக்கு உடனே கொண்டு வந்து கைகட்டிச் சேவகம் செய்து வைக்க அவர் முயன்றார். இம்முயற்சிக்கு முன்மாதிரியும் ஆனார். தமிழின் செழுமை, அறிவியலைத்தன் வயப்படுத்தி முன்னேறும் தகுதி வாய்ந்தது என்பதை நிறுவினார்.

ஆயிரம் ஆண்டுகளாய் வழக்கொழிந்துபோன யாழ்வகைகளை அறிவியல் நோக்கோடு பழந்தமிழிசை மரபையும், வரலாற்றினையும் அறிந்த தெளிவோடு அவர் உருவாக்கினார். தமிழிசை மரபைப் புதிய தடத்தினை நோக்கி இட்டுச் சென்றார்.

அடிளாயிருப்பது மானிட விமோசனத்துக்கே எனக்குரல் கொடுத்தார். எல்லா விதமான அடிமைத்தனங்களும் நிராகரிப்புக்கு உரியதென்று அவர் நடைமுறையிலே சாதித்தார்.

தன் காலத்தின் சிறந்த போக்குகளிற்கு ஆதரவாளனாயிருந்து, இன்றைய காலத்தின் தேவைக்கும் ஆதாரமாயிருக்கிறார்,
அவர்: விபுலானந்த அடிகள்.
இது அவரின் நூற்றாண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வு முழுவதும் "அறிவெனப்படுவது அளந்து துணிதல்" என்ற உன்னத நோக்கோடு தேனீயாய்த் திரிந்து அறிவு திரட்டி தமிழர்க்கு வழங்கிய அடிகள். இன்னும் தமிழரால் நன்கு அறிந்து பயிலப்படாதது வேதனைக்குரிய விடயம். கதிர்காமம் முதல் கயிலாயம் வரை சென்று பணியாற்றிய அடிகளாரை ஆய்வதும், அறிவதும் இன்றைய தமிழரின் கலாச்சார வாழ்வுக்கும், வளத்துக்கும் உந்து சக்தியாக அமையும்.

ஏனெனில் தமிழியல், அறிவியல், வாழ்வியல், இசையியல் துறைகளிலுள்ள பலகுறைகளை நீக்கு வதற்கான வழிவகைகளை அன்று கூறிய அடிகளாரின் குரல் இன்றைக்கும் ஏற்றதாய் வேண்டியதாய், அவசிய மானதாய் இப்போதும் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

○

○

இந்த நூலின் ஆசிரியர் செ. யோகநாதன் நாவல், சிறுகதை, மொழி பெயர்ப்பு, நவ சினிமா, குழந்தை இலக்கியம் என்ற துறைகளில் முப்பதுக்கு மேற்பட்ட நூல்களினை எழுதியிருப்பவர்.

இலங்கை சாகித்தியமண்டலப்பரிசு (1974), தமிழக அரசின் சிறந்த படைப்பிற்கான முதற்பரிசுகளை (1985, 1988) இருமுறை பெற்றவர். ஆங்கில, ஜெர்மன், ருஷ்ய, தெலுங்கு, சிங்கள மொழிகளில் இவரது படைப்புகள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org